Annual Subscription Rs. 6 Vol. 7. No 47 27th December 1936 Price 2 As

# சுதேசமித்திரன்

## வாரப்பதிப்பு

## THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



கும்பகோணத்தில் புதிதாகத் திறந்துவைக்கப்பட்ட மாதாகோவிலின் உட்புறத் தோற்றம்.







## ஆரோக்கியத்தின்
## முக்கிய ஆதாரம்

# வுட்வர்ட்ஸ்
# கிரைப்வாடர்

## இது குழந்தைகளை
## நன்கு பாதுகாக்கின்றது

# WOODWARD'S
# GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND



ஸ்பானியக் கலகத்தினுல் இடிந்துபோன அல்காஸர் கோட்டை.



பம்பாயில் ஸ்ரீமான் புலாபாய் தேசாயின் வாஸஸ்தலத்தில் கான் அப்துர் கபார்கானும் தீனபந்து ஸி. எப். ஆண்ட்ரூஸூம் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

# அவன் தவறு

—— : : ——

"சின்னு"

'பணம் பணமென்று அடிக்கடித் தொந்தரவு செய்தால் நான் என்ன செய்வது? இதுவரையில் நீ என்னிடம் வாங்கிக்கொண்டிருப்பதே பத்தாயிரத்துக்குமேலிருக்குமே. என்றால் இனிமேல் ஒரு பைசாகூடக் கொடுக்க முடியாது. "ஐந்தா? பத்தா? ஆயிரம் ரூபாய் என்றால் திடீரென்று எங்கே போவது? என் வீட்டுப் புறக்கடையில் மரத்தில் காய்த்துத் தொங்குகிறதா?" என்று தீர்மானமாய்க் கூறிவிட்டான் சுந்தரேசன்.

அதைக் கேட்டதும் சம்பத்குமாரன் அவனிடம் மேன்மேலும் மன்றாடுவதில் யாதோர் பயனுமில்லை என்று தெரிந்துகொண்டு, மிகவும் முடுக்காக எழுந்து கதவைப் படாலென்று சாற்றித் தனது அருவருப்பையும் கோபத்தையும் ஒருவாறாய் வெளிப்படுத்திவிட்டுப் படிக்கட்டுகளின் வழியாய் இறங்கி, எதிரிலிருந்த தன் வீட்டை நோக்கிப் போய்விட்டான்.

சம்பத்குமாரன் போய்விட்டதும் சுந்தரேசன் மனதில் பல எண்ணங்கள் தோன்றின மாதமொன்றுக்கு நானூறு ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதித்தும் அவனுடைய ஏராளமான அனாவசியமான செலவுகளுக்குத் தன்னை அடிக்கடித் தொந்தரவு செய்துகொண்டிருப்பது அவனுக்கு மிகவும் மனவருத்தமாக இருந்தது.

தான் இதுவரையில் பற்பல சந்தர்ப்பங்களில் இனாமாகவும் கடனாகவும் பெருந்தொகைகளைக் கொடுத்து உதவியிருந்தும் நன்றி என்பதே சிறிதுமில்லாமல் இச்சமயம் அவன் அருவருப்பைத் தன்னிடம் வெளிப்படையாய் காட்டிவிட்டுச் சென்றது அவன் மனதை வாட் கொண்டறுப்பது போலிருந்தது. இப்போது ரூபாய் ஆயிரம்கொடுத்து உதவினாலும் அதைமறுதினமே குதிரைப் பந்தயத்திலும்குடியிலும் இழந்துவிட்டு மறுபடியும் இதேமாதிரி தான் பணத்திற்குத் தொந்தரவு செய்யப் போகிறான். ஐயோ! நமக்கென்று சகல துர்க்குணங்களையும் ஒருருவாக்கி கடவுள் ஓர் சகோதரனைச் சிருஷ்டித்தாரே; இப்படிப்பட்டவர்கள் வைத்தியத் தொழில் செய்வதும் மக்களுக்கு ஆபத்தல்லவா? இவன் கொலை செய்வதற்கும் அஞ்சமாட்டான்..."

சம்பத்குமாரன் தனது சகோதரனின் தீர்மானமான பதிலைக் கேட்டதும் ஆத்திரத்துடன் நேராய் வீடு சென்றவன் மாடிக்குச் சென்று ஓர் சோபாவில் சாய்ந்துகொண்டு யோசனையிலாழ்ந்து விட்டான்.

"ஆகா, நாம்தாம் நூற்றுக்கணக்காகச் சம்பாதிப்பதாய் எண்ணியிருந்தோம். ஆனால் சுந்தரேசன் ஆயிரக்கணக்கில் சம்பாதித்தும் என்னிடம் வரவரத் தனது லோபித் தனத்தைக்காட்ட ஆரம்பித்துவிட்டானே. நான் அவனை இனாமாகவா கேட்கிறேன்? கடனாகத் தானே? நமக்கு வரவரச் செலவும் ஜாஸ்தியாகிக்கொண்டே வருகிறது. நியாயமான வரும்படி மிகவும் சொற்பம்...உம்... என்ன செய்வது. நியாயமான வரும்படியை நம்பினால் சரியான கஷ்டத்திற்குத்தான் உள்ளாகவேண்டி நேரிடும். இந்தக் காலத்தில் தகப்பனாவது—அண்ணனாவது—வேண்டியது பணம்...ஆஹா ஒன்றை மறந்தே போய்விட்டேனே. என்ன எனது ஞாபக சக்தி. இன்றைய தினம்தான் சுந்தரேசனுக்கு ஒரு லக்ஷ ரூபாய்க்குமேல் வியாபாரத்தில் கிடைத்திருக்கிறது. அவன் அதைப் பாங்கியில் எங்கும் கட்டாமல் தனது மேஜையில் இடது டிராயரில் வைத்திருக்கிறான். நல்லது; அந்த நோட்டுகள் நம் கைக்குக் கிட்டினால் பிறகு அம்மூதேவி முகத்திலும் விழிக்க வேண்டியதில்லை" என்று பலவாறு எண்ணமிட்டவாறே நேரம் கழிவதையும் கவனியாமல் உட்கார்ந்திருந்தான்.

* * * *

அடடா! இவ்விரு சகோதரர்களின் அன்பு என்ன விசித்திரமாயிருக்கிறது! இருவரும் ஒரே தாய் வயிற்றில் பிறந்து ஒன்றாகவே வளர்ந்து மூத்தவன் வியாபாரத்துறையில் சிறுவயதிலேயே புகுந்து இப்போது சென்னையிலுள்ள முக்கிய வியாபாரிகளிலொருவனாய் விளங்குகிறான். இளையவன் M. B. B. S. பாஸ்செய்து சொந்தத்திலேயே தொழில் நடத்திவருகிறான். அவன் மகா கொடிய துஷ்டர்களுடன் சிநேகம் செய்துகொண்டு சென்னையிலுள்ள தேவதாசிகளை ஒருவர் பாக்கியிராமல் ருசி பார்த்துப் பாரபட்சமின்றி அவர்களை ஆதரித்தும் இன்னும் சீமைச் சரக்குகளைத் தாராளமாய் உபயோகித்தும் கண்டோர் வெறுக்கத்தக்க பல குணங்களுக்கு உறைவிடமாய் விளங்கினான். சுந்தரேசன், 'என்ன இருந்தாலும் நமது தம்பிதானே' என்ற ஒரு பாசத்துடன் அவன் வேண்டும் சமயங்களிலெல்லாம் ஏராளமாய் பெரிய தொகைகளைக் கொடுத்துதவியும், சம்பத்குமாரனை நேரிலும் அத்யந்த நண்பர்கள் மூலமாயும் வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி அவனைப் பலவழிகளிலும் திருத்த முயன்று வந்தான். சம்பத்குமாரனுக்குக் கிடைத்த பூர்வீகமான சொத்துக்களை அநேக தினங்களுக்கு முன்பே மனம்போனபடிச் செலவு செய்துவிட்டு, இப்போது மாத வருவாயையே நம்பிக் காலட்சேபம் செய்து வந்தான். அடிக்கடிச் சூதாட்டத்திற்கும், குடிக்கும், தேவதாசிகட்கும் பெருந் தொகைகளைக் கடன் வாங்கிச் செலவுசெய்ய நேரிட்டது. பார்ப்பவர்களுக்கு மதிப்பாய் எப்போதும் மோட்டார் சவாரியும் தன் சகோதரன் வீட்டிற்கு எதிராக வசித்துவந்த அவன் ஓர் மாடிவீடும், வீட்டை அலங்கரிக்க ஏராளமான நாற்காலி, மேஜை, சோபாக்களும், பிலிப்ஸ் ரேடியோவும் பார்ப்பவர்கள் மனதில், சம்பத்குமாரன் ஓர் பெருத்த தனவந்தனென்றே நம்பும்படிச் செய்தன.

சுந்தரேசன் மிக்க மானவஸ்தனானபடியால், எப்படியாவது தன் குடும்பத்தின் பெயர் கெடாவண்ணம் நடந்துகொள்ள வேண்டுமென்ற உத்தம எண்ணத்துடன் சம்பத்குமாரனைப் பலதாம் கண்டித்தும் அவன் செவிசாய்க்காதபடியால், அவனுக்குக் கடன் கொடுப்பதை மறுத்துவிட்டால், எப்படியாவது அவன் தனது அநியாயச் செலவுகளை நிறுத்திவிடுவானென்று நம்பினான். தன்னைப்போலவே பிறரையும் எண்ணிக்கொள்ளுவது மனிதர் சுபாவமல்லவா? சுந்தரேசன் நல்ல எண்ணத்துடன் பணம் கடன் கொடுக்க மறுத்துவிட்டது சம்பத்தின் துர்க்குணங்களைக் கிளறி, அவனை மோச எண்ணம் கொள்ளும்படித் தூண்டியது.

இரவு பகலாய் யோசனை செய்ததின் பலனாகச் சுந்தரேசனின் லக்ஷரூபாய் நோட்டுக்களைக் கவர சம்பத்குமாரனின் அதிசய மூளைக்கு ஓர் அபூர்வ மோசஎண்ணம் தோன்றியது. பிறர் அறியாவண்ணம் சுந்தரேசனைக் கொலை செய்து விட்டு அந்தப் பணம் முழுவதையும் தானே கைப்பற்றி விட ஓர் வித முடிவுக்கு வந்தான். சாதாரணமாய் அம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் குற்றவாளிகள் அவசரமாய் செய்துவிடும் ஓர் சிறு குற்றமும் அவர்களுக்குச்சனியனாய் முடிந்து விடுகிறதல்லவா? அவைகளெல்லாம் சம்பத்குமாரனின் மனதிற்கு ஓர் தைரியத்தையே கொடுத்தன. அவன் தான் செய்யப்போகும் குற்றத்திற்கு வேண்டிய எல்லா பூர்வாங்கமான ஏற்பாடுகளையும் செய்ய ஆரம்பித்தான்.

இச்சம்பவங்கள் நடந்து ஒரு வாரம் கழிந்தது. சம்பத்குமாரன் தன் சகோதரன் வீட்டிற்குச்செல்லுவதை முற்றிலும் விட்டுவிட்டான். அவனை வெளியில் எங்காவது சந்திக்க நேரிட்டாலும் முன்பின் பழக்கமில்லாதவன் போலவே நடந்துகொண்டான். மாலை வேளைகளில் எங்கும் வெளியில் செல்லாமல் தான் வசிக்கும் வீட்டு மாடியில் அமைத்திருக்கும் ரேடியோ சங்கீதக் கருவியினருகிலேயே கழிக்கும் வழக்கத்தை மேற்கொண்டான். மாலை 5-30 மணி முதல் பத்துமணி வரையில் அவ்வறையில் யாரையும் வரவொட்டாமல் தான் மாத்திரம் ஏகாந்தமாய் சங்கீதமனுபவிப்பது, பிறகு வெளிதேச வர்த்தமானங்களைக் கவனிப்பது முதலிய சில குறிப்பிட்ட வேலைகளைக் கவனித்து வந்தான். தனது

இஷ்டமித்திரர்களுடன் தினமும் மாலைவேளைகளை வேசியர் வீடுகளில் கழித்து வந்த அவனுடைய அதிசய மாறுதலைக் கண்டு சுந்தரேசன் தன் சகோதரனுக்குக்கடைசியில் கடவுள் நல்ல புத்தியளித்து அவன் நடத்தைகளை மாற்றிக்கொள்ளும்படிச் செய்ததாகத் தப்பான யூகம் செய்துகொண்டான்.

* * * *

ஒருநாள் சம்பத்குமாரனின் மனைவி மக்கள் எல்லோரும் தமிழ் பேசும் படம் பார்ப்பதற்காக மாலை ஆட்டத்திற்குச் சென்றுவிட்டனர். அன்று ரேடியோவில் ஓர் பிரபல தென்னிந்திய சங்கீத வித்துவானின் சங்கீதக் கச்சேரி நடக்கப் போவதாய் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. அன்றைய தினமே தனது துர்எண்ணத்தை எவ்விதத்திலாகிலும் முடித்துவிட்டு லக்ஷ ரூபாய் நோட்டுக்களையும் கைப்பற்றிவிடத் தீர்மானித்து, சம்பத்குமாரன் தனது வேலையாளை அழைத்துத் தான் மேல்மாடியில் ரேடியோ கேட்கப்போவதாகவும் தன்னை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாமென்றும் உத்தரவளித்துவிட்டு, சில முக்கிய சாமான்களையும் அப்போதே போய் வாங்கிக் கொண்டு வரும்படி கூறி அவனையும் அனுப்பிவிட்டு ரேடியோவை மிகவும் உரத்த சப்தத்துடன் பாடும்படி அமைத்துவிட்டு ஓர் சோபாவில் அமர்ந்து எண்ணமிடலானான். வேலையாள் தன் எஜமானனின் உத்திரவுப்படிச் சாமான்கள் வாங்கிக்கொண்டுவரப் புறப்பட்டு வீட்டில் எல்லோரும் சினிமா சென்றிருப்பதால் தெருக் கதவைப் பூட்டிக்கொண்டு சாவியைத் தன்னுடனேயேகொண்டு போய்விட்டான்.

சரியாய் 6-45க்கு எதிரிலிருந்த அலாரம் மணிவிடாமல் அடிக்க அந்த சப்தத்தினால் தட்டி எழுப்பப்பட்ட சம்பத்குமாரன் சுறுசுறுப்புடனெழுந்து நேராய் கீழே இறங்கி மாறுவேடத்துடன், கொல்லைப்புற வழியாய் வெளிப்பட்டு எதிர் வீட்டிற்குச்சென்றான்.

சுந்தரேசன் தனியாக ஓர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஏதோ சில காகிதங்களைப் புரட்டிக் கொண்டிருந்தான். சம்பத் சந்தடி சிறிதும் செய்யாமல் மெதுவாகப் பூனைபோல் அந்த அறைக்குள் நுழைந்தபடியாலும் சுந்தரேசன் முதுகுப்புறம் வெளிநோக்கி இருந்தபடியாலும் அறையில் வேறு ஆள் நுழைந்தது சுந்தரேசனுக்குத் தெரியவில்லை. சம்பத்குமாரன் சிறிதும் யோசனை செய்யாமல் திடீரென்று முன்னேறிதான் ஆயத்தமாய்க்கொண்டுவந்திருந்த ஓர் கூரியசிறிய ஈட்டியை ஓங்கிப் பிடரியை நோக்கி பலமாய் குத்தவும், அவ்வாயுதம் சுந்தரேசன் கழுத்தில் ஆழமாய் பாய்ந்து அவன் ஆவியை அக்கணமே அகலும்படி செய்தது.

அச்சமயம் சம்பத்குமாரனுக்கும் ஓர்வித அச்சம் ஏற்பட்டது. இரண்டொரு நிமிடங்கள் தன்னையும் மறந்து திகைத்து நின்றுவிட்டான். பிறகு ஒருவாறாய் தன் நிலைமை அவனுக்குப் புலப்பட அங்குதானிருக்கும் சமயம் யாராவது வரநேரிட்டால்தான் அகப்பட்டுக்கொள்ள நேரிடும் என்று, துரிதமாய் அங்கிருந்த மேஜையின் அறைகளை ஆராய்ந்து அதினுள்ளிருந்த நோட்டுக்களை அப்படியே வாரி ஓர் கட்டாய்க் கட்டித் தன் ஆடைகளில் மறைத்துக் கொண்டு, தான் அங்கு வந்து போனதே தெரியாதபடி ஒழுங்குபடுத்திவிட்டு தான் வந்த வழியாகவே தன்னறைக்குச் சென்றுவிட்டான். அப்போதுதான் மணி ஏழடித்தது ரேடியோவும் பெருத்த தொனியுடன் பாடிக்கொண்டிருந்தது. ஒருவரும் தன்னைக்கவனித்திருக்க முடியாதென்று அறிந்து ஒருவாறு அகமகிழ்ந்து போலீசார் தன்னை எப்படியும் விசாரிப்பார்கள். அப்படி அவர்கள் விசாரிக்கும்போது தான் எவ்விதம் அவர்களுக்குச் சற்றும் தன்மீது சந்தேகம் தோன்றாவண்ணம் நடந்துகொள்ளவேண்டுமென்பதைப்பற்றி பற்பலவிதமாய் தனக்குள்ளாகவே தீர்மானம் செய்துகொண்டான். ஒருவாரகாலமாக சுந்தரேசனைக் கண்டு சம்பத் குமாரன் பேசுவதில்லை இதனால் சகோதரர்களிருவருக்கும் மனஸ்தாபமிருக்கலாமென்று போலீசார் யூகிக்கலாம். ஆனால் அன்று கொலை நடந்த தினம் சம்பத்குமாரன் வெளியில் எங்கும் செல்லவில்லை என்று போலீசார் நம்பும்படி சாட்சியங்கள் ஏற்பட்டு விட்டால் சுந்தரேசன் பெருத்த வியாபாரங்களிலெல்லாம் சம்பந்தப்பட்டிருப்பதால் அவனுக்குப் பல விரோதிகளேற்பட்டிருப்பது சகஜம். மேலும் முதலைக் கண்ணீர் சற்று தாராளமாக வடித்து விட்டு போலீசாருடன் உடனே குற்றவாளியை தேடுவதாய் புரளி நாடகம் நடித்தால் அன்று வேலைக்காரன் வீட்டு வெளிக்கதவை பூட்டிக் கொண்டு கடைத்தெருவிற்குச் சென்றதும் ஒருவிதத்தில் நன்மையே—என்று பற்பலவாறாய் போலீஸார் தன்னை உத்தேசமாய் கேட்கக்கூடிய கேள்விகளையெல்லாம் தன்னால் கூடுமானவரையில் ஆராய்ந்து அவைகளுக்கு ஏற்ற பதிலையும் தயார் செய்து கொண்டான். மணி ஏழரைக்கு மேல் ஆய்விட்டபடியால், ரேடியோவை நிறுத்திவிட்டுச் சற்று உல்லாசமாய் வெளியில் போய் வரலாமென்று புறப்படக் கதவைத் திறக்கும்

(10-ம் பக்கம் பார்க்க)


## மருவுகள், பருவுகள் முதலிய தோல் வியாதிகள் ஸ்திரீகளின் அழகைக் கெடுக்கின்றன.

தெளிவும், மிருதுவும், மேன்மையுமான தோல் அதிக மனோகரமானதென்று ஒவ்வொரு ஸ்திரீக்கும் தெரியும். இந்தகாரணத்தினலேதான் ஆயிரக்கணக்கானவர்கள் குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) உபயோகிக்கிறார்கள். குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) தினந்தோறும் உபயோகித்தால் அது தோலைச் சுத்தமாக்குவதுமல்லாமல் அழுக்கைநீக்கி, வேர்க்குரு பருவுகள் முதலிய அவலக்ஷணங்களை போகச் செய்யும்.




இந்த செழிப்புள்ள நோய் தடுக்கும் நுரை நல்ல வாசனையாயும், உல்லாசமாயுமிருப்பதுமன்றி திரேகமுழுதற்கும் சவுக்கியத்தைக் கொடுக்கும். உனக்கு கரப்பானாவது மற்ற எந்த தோல்நோய்களினாலாவது கஷ்டம் வந்தால் குடிகூரா தைலத்தை (Cuticura Ointment), சோப்புக்கட்டியால் கழுவுமுன் உபயோகிக்கவேண்டும். அது தோலைத் தேற்றி ஆற்றி தெளிவாக்குகிறது.

### குடிகூரா சோப்புக்கட்டி
### CUTICURA SOAP

குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) இன்றைக்கே வாங்கு. எல்லா மருந்துகடைகளிலும் பஜார்களிலும் விற்கப்படும்.



ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

## கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.



BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW




வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளை தான உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக வண்ணமாதலால் ஆண்வரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமிராது. 541 டின்களின் பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய சீல்களும் இருக்கிறதா என்பதைக் கவனித்துப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். செந்தூரத்தில் "மான்மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents: M. R. V. AIYER & Co., 49, பந்தர் தெரு, மதராஸ்



ஸ்ரீ மேஹர் பாபாவின் அமெரிக்க சிஷ்யர்கள் பம்பாய் வந்து சேர்ந்தபோது எடுத்த படம்.

# விளம்பர உரிமை

(கிருஷ்ணகாந்தன்)

"நம்பினபேர்களுக்கு நடராஜன். எங்களுடைய நடராஜ கவசத்தை உபயோகித்த ஒருவர் கொடுக்கும் நற்சாட்சியத்தைக் கவனியுங்கள். சௌகார் லோகநாததாஸ் பின்வருமாறு எழுதுகிறார்: "எனக்கு தெய்வத்திலோ, அமானுஷ சக்திகளிலோ இதுவரை நம்பிக்கை கிடையாது. இருந்த போதிலும் விளையாட்டாக உங்கள் நடராஜ கவசமொன்றை வாங்கிக் கைப்பெட்டியில் போட்டு வைத்தேன். அதன் பலன் என்ன வாயிற்றென்று நினைக்கிறீர்கள்? இது காறும் கடன்காரர்களிடம் கால் கடுக்க நடந்துபோய் ஐந்தும் பத்துமாகப் பணம் பிரித்துக்கொண்டிருந்ததுபோக, இப்பொழுது கடன்காரர்களே என்னைத் தேடிவந்து ஏற்பட்ட விகிதத்திற்கதிகமாகவே வட்டி சகிதம் முதலைக் கொடுத்துவிட்டுப் போகிறார்கள். உங்கள் நடராஜ கவசத்தின் மகிமையை வர்ணிக்க ஆதிசேஷாவதாரமான அந்தப் பதஞ்சலியாலும் முடியாதென்றால் அது மிகையாகாது."

இந்த விளம்பரத்தைப் பத்திரிகையில் படித்ததும் வக்கீல் வறட்சிநாத அய்யர் ஒரு தரம் பெருமூச்செறிந்தார். இந்தக் கவசத்தை வாங்கி அணியத் தன்னிடம் பணம் இல்லையே என்று அவர் துக்கப்படவில்லை. லேவாதேவிக்காரர்களெல்லாம் ஆளுக்கொரு கவசமாக வாங்கி யணிந்து விட்டால் சிவில் கோர்ட்டுகளில் வேலையில்லாமல் போய்விடுமோ வென்றும் அவர் பயப்படவில்லை. பெட்டிக் கலைகுனியும்படி பொய்யும் புரட்டும் விளம்பரம் செய்ய எல்லோருக்கும் உரிமை இருக்கும்பொழுது வக்கீல்கள் மட்டும் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளக்கூடாது என்று ஏன் ஒரு அர்த்தமற்ற ஐதிகம் இருக்கவேண்டும் என்பதே அவர் பட்டகவலை.

அவர் கக்ஷியில் நியாயமில்லையென்று யாரால் கூறமுடியும்? என்னைக் கேட்டால் போட்டியை அடிப்படையாகக் கொண்ட தொழில்களிலெல்லாம் விளம்பர உரிமை இருக்க வேண்டுமென்றே கூறுவேன்.

வக்கீல்களுக்கு விளம்பர உரிமை கொடுத்து விட்டோமானால் பின் வருமாறு விளம்பரங்களை நாம் அடிக்கடி பத்திரிகைகளில் காணலாம்.

I

பாரிஸ்டர் பஞ்சு, எ. பி. ஸி. டி. ஈ. குறுக்கு விசாரணை நிபுணர். உங்கள் கேசுகளை அவரிடமே ஒப்புவியுங்கள். உயர்ந்த சேவை, பீஸ் சரசம்.

II

"அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" போலீஸார் உங்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்திருந்தால் உங்கள் கக்ஷிக்கு வக்கீல் வாமகேசுவர ஐயரை அமர்த்திவிட்டு மேற்கண்டவாறு பாடிக்கொண்டிருங்கள். விடுதலைக்கு உத்திரவாதம் தரப்படும்.

III

வக்கீல் தொழிலிலேயே ஒரு புதிய ரிக்கார்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது 1935-ம் வருஷத்தில் மட்டும் தூக்கு மேடையிலிருந்து 925பேர்களையும் தீவாந்திர சிக்ஷையினின்றும் 1256 பேர்களையும் காப்பாற்றியதீரர் யாரென்று தெரியுமா? அவர் தான் அட்வகேட் அங்காமிநாயர்.

IV

ஏழ்மைப்பட்ட கக்ஷிக்காரர்களுக்கோர் நற் செய்தி!

ஜெயித்தால் மட்டுமே பீஸ். தோல்வியேற்பட்டால் எமது சொந்தச் செலவில் அப்பீலுக்கு ஏற்பாடு செய்யப்படும். முழு விபரங்களுக்கு பிளீடர் பிஞ்சாலப்பருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

V

'விடுதலை, விடுதலை, யாவருக்கும் விடுதலை!"

இந்தியன் பீனல் கோடியுள்ள செக்ஷன்கள் எல்லாவற்றின் பிரகாரமும் உங்கள் பேரில் சார்ஜுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தபோதிலும் அஞ்ச வேண்டாம். எதிர்க்கக்ஷி பயங்கரம் எமகாதநாயுடுவை உங்கள் சார்பாக அமர்த்துங்கள். அவர் பெயரைக் கேட்டாலே பப்ளிக் பிராசிக்யூடர்களுக்கெல்லாம் அடிவயிற்றில் நெருப்புதான்!"

VI

ஒரு அரைகூவல்!

இந்த ராஜதானியில் கிரிமினல் கேசுகளிலெல்லாம் டிபன்ஸ்தரப்பில் அபினவ நார்ட்டன் ஆனந்தம் அய்யரை அமர்த்தினால் ஜெயில் டிபார்ட்மெண்டையே சர்க்கார் கலைத்துவிட வேண்டியதுதான்! அவருடைய சாமர்த்தியத்தைப்பற்றி கள்ளர் வகுப்பாரில் பிரசித்திபெற்ற ஒருவர் கூறுவதைக் கவனியுங்கள்.

"சுவாமிகளுக்கு அநேக நமஸ்காரம். விடுதலையானதும் அவசரமாக மாமியார் வீட்டிற்கு வரவேண்டியிருந்தது. கூடியசீக்கிரம் தங்களை வந்து பார்க்கிறேன்.

இந்தத்தடவை நான் தப்பியது எனக்கே ஆச்சர்யமாகத்தானிருக்கிறது. போலீஸ் கக்ஷி பலமாயிருந்தும் நான் விடுதலை பெற்றது உங்களுடைய சாமர்த்தியத்தினால்தான். பிராஸிக்யூஷன் சாக்ஷிகளை நீங்கள் திணற அடித்ததிலிருந்து மற்ற வக்கீல்களைக் காட்டிலும் ரொம்ப ரொம்ப சட்டம் வாசித்திருக்கிறீர்களென்று தெரிகிறது. என்னுடைய ஆயுசுபூராவும் உங்களை மறக்கவேமாட்டேன். இனிமேல் கேசுகளில் அகப்பட்டுக்கொண்டாலும் உங்களைத்தவிர வேறு வக்கீல்களை நான் தேடப்போவதில்லை. இந்தக் கேசிலிருந்து நீங்களிருக்கும்வரை தைரியமாகக் கொள்ளையடிக்கலாம் என்ற ஓர் துணிவு எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

VII

இன்ஷூரன்ஸ் உலகில் ஓர் அதிசய நவீனம்.

"சிப்பாயைக் கண்டஞ்சுவார்—ஊர்ச்சேவகன் வருதல் கண்டு ஓடி யொளிப்பார்"

என்ற இகழ்ச்சிக்கு இனி நீங்கள் ஆளாகவேண்டாம். மாதாமாதம் ஒரு அற்பத்தொகை தான் நீங்கள் பிரீமியம் செலுத்தவேண்டும். உங்கள் சம்பந்தப்பட்ட சகல கிரிமினல் வழக்குகளிலும் எங்கள் பிரசித்தி பெற்ற சட்ட நிபுணர் யாதொரு செலவுமின்றி ஆஜராவார். துரதிருஷ்டவசமாக நீங்கள் சிறை செல்ல நேரிட்டால் உங்கள் குடும்பத்திற்குப் போஷன அலவன்சு கொடுக்கப்படும்.

VIII

கடன்காரர்களுக்கு அஞ்ச வேண்டாம்.

"கடன் கொண்டார் நெஞ்சம் போலும் கலங்கினன் இலங்கை வேந்தன்"

என்று பாடப்பட்டுள்ளதற்குக் காரணம் இராமாயண காலத்தில் இன்சால்வென்ஸி சட்டமில்லாதிருந்தது தான். கடன்காரர் தொல்லை உங்களை வருத்தும் பக்ஷத்தில் இன்சால்வென்ஸி சட்டத்திற்கு பிரசித்திபெற்ற பாஷ்யம் எழுதியிருக்கும் பங்காருசாமி அய்யங்காரை இன்றே கலந்து பேசுங்கள். சகல கடிதப் போக்குவரத்தும் இரகசியமாக வைத்துக் கொள்ளப்படும்.

IX

"இன்றைக் கிருப்பாரை நாளைக்கிருப்ப ரென்றெண்ணவோ திடமில்லையே!"

ஆன்றோர்களின் எச்சரிக்கையை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். உயில்கள் தயாரிப்பதில் நிகரற்ற உண்டியப்பபிள்ளை அவர்களைத் தாமதமின்றிக் கண்டு பேசுங்கள்.

மாதிரிக்கு இவை போதுமென்று நினைக்கிறேன். எது எப்படியானாலும் வக்கீல்களுக்கு விளம்பர உரிமை கொடுக்கப்பட்டால் பத்திரிகைகளாவதுபடிப்பதற்குசுவாரஸ்யமாயிருக்குமல்லவா?

நமது தொடர் கதை.



# ராதா

(குருமலை ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை.)

## முன் கதைச் சுருக்கம்.

மகேந்திரத்தில் பாரெஸ்ட் ரேஞ்சராயிருந்த நந்தகோபமுதலியாரின் குமாரி ராதாவிற்கு அமரேசன் செட்டியார் தமிழ்ப்படிப்புச் சொல்லிக்கொடுத்து வருகிருர். நந்தகோபரும் அவரது மனைவி அநந்தகல்யாணி அம்மாளும் தாய் தகப்பனற்ற அமரேசனை மிகவும் பக்ஷமாக நடத்திவருகின்றனர். சிலகாலத்தில் அமரேசன் அவர்களது குடும்பத்திற்கே உற்ற தோழனுகிருன்.

நந்தகோபரின் பிறப்பிடம் பாற்கடல். அங்கு அவரது மைத்துனன் நச்சுமுதலியார் தனது ஏராளமான சொத்துக்களை அழித்து சிறைக்கும் போய்வந்தார். அவரது அந்தரங்க நண்பன் பிச்சு அய்யர். நச்சுமுதலியாரின் பிள்ளை தண்டபாணியும் தகப்பனைப்போல் குடி, விலைமாதர்கள் முதலிய விஷயங்களில் ஈடுபட்டான். நந்தகோபர் தாம் ஸ்வயமாகச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு பாற்கடலில் சொத்துக்கள் வாங்கியிருந்தார். அதை நச்சு முதலியே மேற்பார்வை பார்த்து வந்தார்.

மகேந்திரம் இளவரசன் நரபதி பல கொள்ளைகளை நடத்தி வந்ததல்லாமல் அநேக யௌவன ஸ்திரீகளை சிறைகடத்தி மானபங்கம் செய்து வந்தான். இவற்றை அமரேசன் பத்திரிகைகளுக்கு எழுதி பரபரப்புண்டுபண்ணி விட்டான். இதுகாரணமாகக் கொடிய பகை ஏற்பட்டு அமரேசன் மகேந்திரத்தில் தங்குவதே அபாயமாக விருந்தது.

நச்சுமுதலியார் தண்டபாணிக்கு ராதாவைப் பெண் பேச மகேந்திரம் வந்தார். அவர் அமரேசனை வெறுத்தார். அவரது துர்ப்போதனையால் நந்தகோபர் அமரேசனை படிப்புச் சொல்லிக் கொடுக்க வராது ஏற்பாடு செய்துவிட்டார். இக்காரணங்களால் அமரேசன் மகேந்திரத்திலிருந்து வெளியேறினுன்.

தண்டபாணிக்குப் பெண் கொடுப்பதற்கு அநந்தகல்யாணி அம்மாள் இசையவில்லை. அதன்மேல் நச்சுமுதலியார் தன் ஊருக்குப் புறப்பட்டார். ரயில்வே ஸ்டேஷனில் அவர் நந்தகோபர் தம் மனைவியை நடத்திவரும் முறை சரியல்ல யென்றும், கெடுபிடியுடனும் கடுமையுடனும் நடத்தவேண்டுமென்றும், அப்பொழுதுதான் கௌரவமாயிருக்குமென்றும் துர்ப்போதனை செய்துவிட்டுச் செல்லுகிருர். இதன் பேரில் விவாகப்பேச்சு சம்பந்தமாக அநந்தகல்யாணிக்கும் நந்தகோபருக்கும் மனஸ்தாபம் உண்டாகிறது.

## 8. ஜோதிஷம்

நச்சு முதலியார் மகேந்திரம் விட்டுச்சென்ற பத்தாவது நாள் இரவு நந்தகோபர் போஜனம் செய்து முற்றத்தில் உலாத்திக்கொண்டு நின்ருர். அப்பொழுது வெளியிலிருந்து வந்த சுமார் அன்பது அறுபது வயதுள்ள ஒரு கிழவர்:—ஐயா, அடியேனுக்கு சாலிவாடி; இதுதானே ரேஞ்சர் முதலியார் வீடு?

நந்த:—இதுதான். தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?

கிழ:—ஐயா, நான் இவ்விடத்திற்கு ஒரு ஜோலியாய் வந்தேன். படுப்பதற்கு இடமில்லை. இங்கே பாண்டி நாட்டார் வீடொன்றிருப்பதாய்க் கேள்விப்பட்டு வந்தேன். தயவு செய்து கொஞ்சம் இடம் கொடுக்க முடியுமோ?

நந்த:—ஆகா! தடையென்ன? அப்படி உட்காருங்கள். தங்கள் திருநாமமென்ன? சாலிவாடி கன்பாரவா தங்களுக்கு?

கிழ:—என் பெயர் குமாரசாமி ஜோதிஷர். சாலிவாடிக்கடுத்த குண்டுக்கல்.

நந்த:—குண்டுக்கல் என்று ஒரு ஊரா? இங்கே வந்த ஜோலி என்ன?

கிழ:—நான் இப்பொழுது ஒரு ஜோதிஷ நூல் எழுதி வருகிறேன். அது விஷயமாய் மகேந்திர பர்வதத்தில் ஒரு சிலா சாஸனத்தைப் பார்த்துவிட்டுப் போவதற்காக வந்தேன். பாண்டி தேசத்துப் பிராமணுள் விடுதியொன்றில் சாப்பிட்டுவிட்டு வருகிறேன். தங்கள் நாமதேயம்?

நந்த:—ஐயா, என் பெயர் நந்தகோபன். சேலம் ஜில்லா பாற்கடல்.

கிழ:—அப்படியா? பாற்கடலுக்கு நான் ஒரு தபா வந்திருக்கிறேன். அடியேனும் ராமநாதபுரி சேதுராஜ பாண்டிய மகாராஜாவுமாக அந்த மார்க்கம் போனேம். அதாவது சுமார் இருபது வருஷமிருக்கலாம். அப்போது அவ்வூர் பெரியதனக்காரர் ஒரு முதலியார்—பேர் ஞாபகமில்லை—அவர் பெயர் நல்ல பெயர்—அவர்கள் வீட்டில் தான் எங்களுக்கு விருந்து நடந்தது.

நந்த:—நச்சாலிங்க முதலியாரா?

கிழ:—அவாள் பெயர் அப்படியல்ல. ஆனுல் நல்ல பெயர்

நந்த:—ராஜாதிராஜ முதலியாரா?

கிழ:—அப்படியுமல்லவே? சிவப்பாய்த் தடித்து உயர்ந்த மனிதன். அப்போதே வயது அறுபதுக்கு மேலிருக்கும்.

நந்த:—ஓகோ! பவாநந்த முதலியாரா?

கிழ:—ஆம். பவாநந்த முதலியார்தான். அவர்கள் தங்களுக்கு எப்படி?

நந்த:—அவர்கள் என்னுடைய சொந்த மாமாதான். அவர்கள் இப்போது காலம் சென்றுவிட்டார்கள்.

கிழ:—அடடடா! சென்று போனுர்களா! எப்போது! நல்ல உதாரவான்! தங்கள் மாமாவா? ரொம்ப சந்தோஷம்! குழந்தைகள்?

நந்த:—அவாளுக்கு இரண்டு மக்கள். மூத்தவர் போய்விட்டார். இளையவர் நச்சாலிங்க முதலியார்தான் இருக்கிருர்கள்.

கிழ:—அப்படியா? ரொம்பக் கிட்ட வந்துவிட்டீர்களே? கொஞ்சம் தாகத்துக்கு ஜலம் தருவியுங்கள். தங்களை யாரோ வேறேவென்று சந்தேகித்து ஜலம் கேட்கத் திகைத்துக் கொண்டிருந்தேன்.

நந்த:—ராதா, ஒரு தம்ளரில் நல்ல ஜலம் கொண்டுவா?

கிழ:—ஜலம் பேஷாயிருக்கிறதே! விடுதியில் ஏதோ ஜலத்தைக்கொடுத்தான். நான் குடிக்கவேயில்லை. குழந்தை தங்கள் புத்திரிதானே?

நந்த:—ஆம்; என்னுடைய குழந்தைதான்.

கிழ:—முகச்சாடை தெரிகிறதே? ஆண் குழந்தைகள எத்தனையோ?

நந்த:—(சிறிது நகைத்து) தங்கள் கிருபையால் இனிமேல் கிடைக்கவேணும். தாங்கள் ஜோதிஷர் என்ருல் என்ன வருணமோ?

கிழ:—ஐயா, நான் தங்களைப் போல சைவன்தான். ஆனுல் பிள்ளைமார். எங்கள் குடும்பத்துக்கு மட்டும் ஜோதிஷர் என்று பெயர். ஜோதிஷத்தில் "குமாரசாமியம்" என்று ஒரு பெரிய நூல் தாங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அது சுப்பிரமணியக் கடவுளை இயற்றியதென்று உலகில் பெருமையாய்ச் சொல்வார்கள். ஆனுல், வாஸ்தவத்தில் அந்த நூல் செய்தது என்னுடைய பாட்டனுருடைய முப்பாட்டனுர் தான். ஜோதிஷத்துக்கே எங்கள் குடும்பம் குருஸ்தானம். குண்டுக்கல் குமாரசாமி ஜோதிஷர் என்ருல் எல்லாப் பிரபுக்களுக்கும் தெரியும். ராஜாக்களிடத்திலும் எங்களுக்குச் சரியிருப்புத்தான். சர்க்கார் மான்யங்களே எங்களுக்குண்டு.

நந்த:—அப்படியா? நல்லது நல்லது.

கிழ:—தவிரவும், நாங்கள் பொருள் வாங்கிக்கொண்டு ஜாதகம் பார்ப்பதில்லை. பொருள் வாங்குகிற இடத்தில் புறட்டதிகம். உள்ளதைச் சொல்லார்கள். அதற்காகவே, அதாவது நிஜத்தைச் சொல்லவேண்டுமென்றே அந்தக் காலங்களில்—திருமலை நாயக்கர் அதிகாரத்தில் எங்களுக்கு ஏராளமான மான்யங்கள் விடப்பட்டன. ஜனங்களிடம் பொருள் வாங்கப்படாதென்ற நிபந்தனை. அந்தப்படி இதுவரை, கேட்டவர்களுக்கெல்லாம், இனமாய் ஜாதகம் பார்த்து வருகிறேம். சொன்னது கொஞ்சமும் தவருது. ஜாதகமில்லாதவர்களுக்கும் கூட, கைரேகையால், ஜனனகாலத்தை நிச்சயித்து விடுவோம்.

நந்த:—அப்படியா? அப்படி நிச்சயிப்பது சரியாய் இருக்குமா?

கிழ:—அநேகமாய்ச் சரியாய் இருக்கும் பலாபலன்கள் கொஞ்சம் வித்தியாஸப்படும். ஜாதகமிருந்தால் விசேஷம். எங்கள் தொழிலே கணக்கின் பேரில் போகிறதுதானே?

நந்த:—தாங்கள் இன்னும் எத்தனை நாள் இவ்விடத்தில் தாமஸம்?

மனோரஞ்சனி

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பினேட், மதராஸ்.



ஜோஸியக் கிழவர், "பிதா வீட்டிற்கு இவளால் அவ்வளவு க்ஷேமமில்லை. இவளுக்குப்பின் குழந்தைகள் ஜனித்தே இராது. இவள் இந்தக் குடும்பத்தை விட்டுப் பிரிந்தால் ஒரு ஆண் குழந்தை பிறக்கலாம்" என்றார்.

கிழ:—நாளைக்காலையில் புறப்படவேண்டியதுதான். எத்தனையோ ஜோலிகளிருக்கிறது. இங்கே வந்த காரியமும் முடிந்துவிட்டது.

நந்த:—தங்களைக்கண்டமட்டிலும், இந்தக் குழந்தையின் ஜாதகத்தைக் காண்பிக்கலாமென்றெண்ணினேன்.

கிழ:—இப்போது மணி எட்டிருக்குமா? காலையில் நேரமிராது. ஜாதகமிருந்தால் கொண்டு வாருங்கள். சாவகாசப்பட்டமட்டிலும் சொல்லுகிறேன்.

நந்த:—தாயே ராதா, பெரிய பீரோவில் ஒரு சிவப்பட்டை போட்ட நோட்டுப் புஸ்தகம் இருக்கிறதுபார், அதை யெடுத்துக்கொண்டுவா! அடே ராஜு! ராந்தலைத் தூண்டு. (என்று ராதா கொண்டு வந்த நோட்டுப் புஸ்தகத்தை வாங்கி ஒரு பக்கத்தைத் திருப்பி) ஐயா, இதுதான் குழந்தை ஜாதகம்.

கிழ:—ஜனன நாளிகையில் பிசகிருக்காதே. நாளிகையில் வித்தியாஸமிருந்தால் நான் சொல்லுவதும் கொஞ்சம் பிசகும்.

நந்த:—நாளிகை கொஞ்சமும் பிசகாது. கடியாரம் வைத்துக் குறித்தது.

கிழ.—(மூக்குக் கண்ணாடியை யெடுத்துமாட்டி) ஐயா, நான் உள்ளதையெல்லாம் ஒளியாமல் சொல்லிவிடவேணுமா அல்லது மற்ற ஜோதிஷர்களைப்போல், முகஸ்துதியாய் நல்லதைமட்டும் சொல்லி மற்றதை ஒளித்துக் கொள்ளவேண்டுமா?

நந்த:—உள்ளதைச் சொல்வீர்களென்றுதானே தங்களிடம் காட்டினேன்? விதிப்படி நடப்பது நடக்கும். சும்மா உள்ளதைச் சொல்லுங்கள்.

கிழ:—நீங்கள் மறைத்துச் சொல்லும்படிக் கேட்டாலும், அந்த வழக்கமே என்னிடமில்லை பொருள் வாங்காதவன் ஏன் மறைக்கப் போகின்றேன்? ஜாதகம் யோக ஜாதகமென்பதில் தடையில்லை. ஆயுள் தீர்க்கமும் மாங்கல்ய தீர்க்கமும் தெளிவாயிருக்கிறது. அதைப்பற்றித் தங்களுக்குக் கவலை வேண்டாம். ஆனால் இந்த ஜாதகம் நாயகன் வீட்டிற்குத்தான் நல்ல ஜாதகமேயன்றிப் பிதா வீட்டிற்கு அவ்வளவு விசேஷமில்லை. உள்ளதைச் சொல்லுகிறேன்.

நந்த:—அதென்ன சங்கதி? சும்மா உடைத்துப் பேசுங்கள்.

கிழ:—அதாவது இந்த ஜாதகனுக்கு ஆயுள் தீர்க்கம், மாங்கல்ய தீர்க்கம். முன்னமே சொல்லிவிட்டேன். புத்திரபாக்கியம் போதிய மட்டுமிருக்கிறது. நாயகன் இழந்துபோன பூர்விக ஆஸ்திகளெல்லாம் இவள் கால்வைத்த பின்பு திரும்பிவிடும். நூதன ஆஸ்திகளும் வந்து சேரும். இன்னும் நாயகனைத் தன்னிஷ்டம்போல் நடக்கும்படிச்செய்யக்கூடிய வசியசக்தியும் இவளுக்குண்டு.

நந்த:—(ஹக் ஹக் ஹக்கா வென்று குலுங்க நகைத்து) ராதா அவ்வளவு கெட்டிக்காரியா? நல்லது இன்னும் சொல்லுங்கள். (இதுவரை சடைவாய்ச் செவி கொடுத்துக் கொண்டிருந்த அநந்த கல்யாணி தன் கணவர் சிரிப்பதைக் கேட்டுத் தானும் தனக்குள் நகைத்துக் கொண்டு பக்கத்திலிருந்தாள். பக்கத்தில் ராதா தூங்குபவள் போல் படுத்திருந்தாள்.

கிழ:—ஆனால் பிதா வீட்டிற்கு இவளால் அவ்வளவு க்ஷேமமில்லை. இவளுக்குப்பின் அநேகமாய்க் குழந்தைகள் ஜனித்தேயிராது; ஒருக்கால் ஜனித்தாலும் கர்ப்பத்திலே சிதைந்திருக்கும். இவள் இந்தக் குடும்பத்தைவிட்டுப் பிரிந்தால்—அதாவது இந்த ஜாதகனுக்கு விவாகமான பின்பு ஒரு ஆண் குழந்தை பிறக்கலாம்.

நந்த:—அதாவது இவள் விவாகத்துக்கு முன் பிறந்தாலும் ஜீவித்திருக்காது என்கிறீர்களா?

கிழ:—பிறக்கிறதேது? பூரணகர்ப்பமானாலுங்கூட சிசு இறந்துதான் வெளியிலுதிக்கும். இந்த ஜாதகன் விவாகமாகி வெளியேறுகிறவரை, சிறு குழந்தை அழுகிற சப்தமே இந்த வீட்டிற் கேட்கமுடியாது. சகோதர தோஷம் அவ்வளவு ஜாஸ்தியாய் அமைந்திருக்கிறது.

நந்த:—அவ்வளவு கண்டிப்பாய்த் தெரிகிறதா? அப்படியானால் விவாகம் எப்போது நடக்கும்?

கிழ:—அது சொல்ல வேண்டுமானால் ஒரு பென்சிலும் காயிதமும் கொடுங்கள் கொஞ்சம் கணிக்கவேணும்.

நந்த:—தாயே ராதா (பதில் சப்தமில்லை) அதற்குள்ளே தூங்கிவிட்டாளா ராதா? அடே ராஜு, ஒரு காயிதமும் பென்சிலும் கொண்டு வா.

(35-ம் பக்கம் பார்க்க).


## ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதுகளும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1 ஒரு தசைக்கு புக்தி பலன் ரூ 2: அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபலர், N. சுப்பிரமணியம்,
நெ. 2 (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை





## கால் புண்கள் ரணங்கள்

இவற்றிற்கான நிவாரணி

ஜாம்-பெக் தழும்பின்றி ஆற்றுகிறது.

இவ்வற்புத மூலிகை மெழுகு வலியை நிறுத்தி, ரணத்தை ஆற்றி, எரிச்சலையடக்கி, சுமைச்சல், சொறி, சிரங்கு, கத்திவெட்டு, தீப்புண், மூலச்சூடு இவற்றைத் தீர்க்கிறது. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஜாம்-பெக் பெட்டி 1-க்கு ரூ. 1 அல்லது ரூ. 2—4 வீதம் கிடைக்கும். ஏஜண்டுகள்: மேஸர்ஸ் தாதா & கம்பேனி, பார்க் டவுன், மதராஸ்.



மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்
Zam Buk



"குறிபார்த்து டம்ளரை வீசினேன்

# அ வ தி யே ஐந்துமணி வண்டியே

——:[o]:——

"காதம்பரி"

"லீலா, நாம் ஏற்பாடு செய்திருந்தவாறு என்னால் இன்று மாலை வண்டியில் சென்னை வருவது முடியாது. சில முக்கிய காரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நீயும் குழந்தைகளும் புறப்படுங்கள். நான் நாளை விடியற்கால வண்டியில் வந்து சேருகிறேன்" என்று என் மனைவியை நோக்கிக் கூறலானேன்.

லீலா:—முக்கிய காரியங்களா, உங்கள் வாழ்க்கையில் காரியம் என்று கூட ஒரு வார்த்தையிருக்கிறதா? நான் சற்று அறியலாமோ அது என்னதான் என்று.?

"அதுதானடீ, என் கட்டுரைகளையும் காவியங்களையும் ஒரு ஆசிரியர் ஏற்றுக்கொள்வார்போல் தோன்றுகிறது. என்று நண்பன் கேசவன் நேற்று சொல்லிப்போனான். இன்று மாலை அப்பத்திரிகாசிரியரைப்போய்ப் பார்க்க வேண்டும். நாளைக் காலை சாப்பாட்டுக்கு வந்து விடுகிறேன், பயப்படாதே, போ."

லீலா ஒரு மாதிரியாக என்னைப் பார்த்துக்கொண்டு "அப்படிப்பட்ட ஒரு ஆசிரியனும் இருக்கிறானா, ஸரி, அதுபோகட்டும், போன தடவையும் இப்படித்தான் நீங்கள் காலை வண்டியில் வருவதாகச் சொல்லிவிட்டு, மாலை ஏழு மணிக்கு வந்து சேர்ந்தீர்கள். அம்மாமி விருந்தெல்லாம் வீணாகிவிட்டது என்று முகத்தை நீட்டிக் கொண்டாள். வேண்டாம், இன்றைக்கே புறப்படுங்கள்" என்றாள்.

நான் "போடி பைத்தியக்காரி, என்னவோ ஒரு தடவை தூங்கிவிட்டேன், வண்டி தப்பிவிட்டது. என்னைப்போல் தீவிர மூளையுள்ளவர்கள் எவ்வளக்கெவ்வளவு அதிகமாக தூங்குகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு அபார சாமர்த்தியமான கட்டுரைகள் எழுதுவார்கள், தெரியுமா." லீலா "சரி, பாத்திரம் வைக்கும் கள்ளிப்பெட்டி நிறைய உங்களுடைய அபார கட்டுரைகள் நிமிர்கிறது. இன்னும் அலமாரியையும் வேண்டுமானால் நிரப்பிவிடுங்கள், அதற்கென்ன. ஒரு நாள் வெந்நீர் அடுப்புக்கு ஆகிறது. போகட்டும். தூக்கத்தில் உங்களுக்கு அஸாத்திய பிரேமை யுண்டே, கும்பகர்ணனும் உங்களைப்பார்த்து வெட்கிப் போவான். நீங்கள் காலை வண்டியில் பிரயாணம் செய்யும் உத்தேசமிருந்தால் ஒரு அலாரம் கடிகாரம் முதல் காரியமாக வாங்கி தலைமாட்டில் வைத்துக் கொள்ளுங்கள். நான் சொல்வதைச் செல்லிவிட்டேன். பிறகு உங்கள் பாடு" என்று புருவத்தை நெரித்துத் தலையையசைத்து விட்டுப் போய் விட்டாள்.

நானா ஏமாந்து போகிற ஆஸாமி, கடைக்குப் போய், பாண்ட் வாசிப்பது போன்ற சப்தத்துடன் கூடிய ஒரு அலாரம் கடிகாரத்தை வாங்கி 4-30க்கு ஸரியாக வைத்து சாவியும் கொடுத்தேன். தலைமாட்டில் வைத்துக்கொள்ளச் சொன்னாளே, லீலா பாவம், அப்படிச் செய்தேனானால், அது மேளம் வாசிக்க ஆரம்பித்ததும், என் கை, எப்படியோ அதன் தொண்டையை அமுக்கி நிசப்தம் செய்துவிட்டு மறுபடி போர்வைக்குள் வந்துவிடும் என்பது அவளுக்குத் தெரியாது. என் அறையின் கோடியில் இருந்த ஒரு மேஜைமீது கடிகாரத்தை வைத்துவிட்டேன். அது அடிக்க ஆரம்பித்ததும், நிறுத்துவதற்காவது நான் படுக்கையை விட்டுக் கிளம்பி பத்தடி தூரம் நடந்துதானே ஆக வேண்டும்! படுக்கையை விட்டு மாத்திரம் எழுந்துவிட்டேனானால், பிறகு பயமில்லை.

பின்னுமொரு ஜாக்கிரதையும் பண்ணி வைத்தேன். பால்கார குப்பன் மூன்றாவது கிளாஸ் வரையில் படித்தவன், கொட்டை எழுத்துகளில் "குப்பா, பாலைக் கறந்து உள்ளே எடுத்துவா". காமிரா உள்ளில் நான் தூங்கிக்கொண்டிருப்பேன். நன்றாகத் தட்டி என்னை எழுப்பிவிட்டுப் பிறகு போ. பூனை பாலை உருட்டிவிடும்" என்றெழுதி வாயிற்கதவில் ஒட்டிவைத்து விட்டேன்!

என்னுடைய கட்டுரைகளில் விசேஷ அர்த்தங்கள் பொருந்தியனவாக சிலவற்றையும், உருக்கமான காவியங்களில் பலவும், பாச்சை, தூசி முதலியவற்றைத் தட்டிப்பொறுக்கி எடுத்துக்கொண்டு, கேசவனுடன் ஆசிரியரைப்பேட்டிகாணப் போய்ச் சேர்ந்தேன். வேளைப் பிசகோ, வெள்ளைப் பூனை குறுக்கே ஓடின காரணமோ, அந்த மகானுபாவருக்கு என் அரிய நூல்களின் அருமையை அறியத் தெரியவில்லை. மதிப்புள்ள தன் காலத்தை வீணாக்கியதற்கு கேசவனைக் கடிந்து கொண்டார். வரும் வழியில், ஜாடையாக முனிசிபாலிடி வண்டியில் என் காகிதக்கட்டுகளைச் சொருகி உள்ளே தள்ளிவிடலாமாவென்று நினைத்தேன். பிறகு, பெட்டி நிறைய இருக்கும் அடுக்குகளில் எது குறைந்தது, அல்லவென்று லீலாவுக்கு எப்படித் தெரியப் போகிறது என்றெண்ணி மறுபடியும் அவைகளை யதாஸ்தானத்தில் ஆவாகனம் பண்ணி விட்டேன்.

ஹோட்டல் சாப்பாடு ருசிகரமாகத்தானிருக்கிறது. லீலாவும் இரண்டு வேளையும் வியர்த்து விருவிருத்து கண்ணையும் கசக்கிக்கொண்டு அடுப்பினெதிரே வளையாடி வருகிறாள். இலையில் வந்து விழுவது ஒரு புளித் தண்ணீர், வேகாத காய்கறி தினுசுகள், உப்பில்லாத ரசம், புளித்த காடியின் வாஸனையை நிகர்த்த ஊறுகாய், இவைதான். விழுங்கவும் முடியாமல் துப்பவும் முடியாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டு, நடுவில் சேவகியைப் பார்த்து ஒரு புன்னகை வேறு போட வேண்டும்! இல்லாவிடில் அன்று முழுவதும் இடியும் மழையும்தான்.

(15-ம் பக்கம் பார்க்க)

குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது
ஸ்ரீ வைத்தியர், அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை



# த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி.ஏ. எழுதியது

I

பல்லவி

ஹரி ஹரி! நீ யொக்க திவ்ய பாதாரவிந்த மிய்யவே (ஹரி)

அநுபல்லவி

தரனு கலுகு போக பாக்யமெல்லனு தத்யமுகாது ஸ்வாமீ ஸ்ரீ க்ருஷ்ண! (ஹரி)

சரணம்

1. ஸநகஸநந்தன ஸ்ரீநாரத சுகார்ஜுன முனுலெல்ல நுதிம்சு
வநஜநயன! ப்ரம்ஹாதி ஸங்க்ரந்தன கனுலெல்ல ஸேவிம்சு (ஹரி)

2. முனுவேத புராணகம சாஸ்த்ர-வித்ய னெல்ல சரிம்சு
கனஸம நீல! நிரஞ்ஜன! நிர்குண! கனிகரமுக த்யாகராஜு பாவிம்சு (ஹரி)

II

| | |
|---|---|
| ஸ்ரீக்ருஷ்ண | —ஸ்ரீக்ருஷ்ணபகவானே! |
| ஸநக, ஸநந்தன, ஸ்ரீநாரத, சுக, அர்ஜுன முனுலு எல்லனு நுதிம்சு | —ஸநகர், ஸநந்தனர், ஸ்ரீநாரதர், சுகர், அர்ஜுனன் முதலிய முனிவர்களனைவரும் கொண்டாடுகின்ற |
| வநஜ நயன | —செந்தாமரைக் கண்ணனே! |
| ப்ரம்ஹா ஆதி ஸங்க்ரந்தன கனுலு எல்லனு ஸேவிஞ்சு | —ப்ரம்ஹா முதலிய ஸகல தேவர்கள், பெரியோர்கள் எல்லாரும் சேவிக்கிற |
| ஹரி ஹரி! | —ஸ்ரீஹரியே! |
| முனுவேத புராணகம சாஸ்த்ர வித்யலெந்து சரிம்சு | —அநாதியாய வேத புராண ஆகம சாஸ்திரங்கள் முதலிய வித்யைகளிலெல்லாம் ஸஞ்சரிக்கிற |
| கனஸம நீல | —மேகத்துக்கொப்பான ச்யாமள நிறம் பொருந்தியவரே! |
| நிரஞ்ஜன! | —பாபரஹிதரே! |
| நிர்குண! | —நிர்குண ஸ்வரூபரே! |
| கனிகரமுக த்யாகராஜு பாவிம்சு (ஹரி ஹரி) | —பக்தியோடு த்யாகராஜன் த்யானித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீஹரியே! |
| தரனுகலுகு | —பூமியிலுள்ள |
| போகபாக்யமெல்லனு | —போக பாக்யங்களெல்லாம் |
| தத்யமுகாது ஸ்வாமீ | —நித்யமானவைகளல்லவையா! |
| (ஆகையால்) | |
| நீ யொக்க திவ்ய பாதாரவிந்தமு இய்யவே | —உம்முடைய திவ்யமான பாதகமலங்களை அடியேனுக்குத் தந்தருளும்! |

III

இக்கீர்த்தனம், ஸ்வாமிகளியற்றிய நௌகா சரித்திரத்தில் உள்ளது. நரஸிம்ஹ பாகவதர் பதிப்பில் 'நீயொக்க திவ்ய பாதாரவிந்தமு' என்று பாடம் காணப்படுகிறது.

திவ்ய பாதார விந்த மிய்யவே:—பகவானுடைய பாதாரவிந்தங்களை த்யானிப்பதனால் உண்டாகும் நிரதிசயானந்தமே நித்யமானது; மற்ற எல்லாம் அழிவன. இதுபற்றியே, ஸ்ரீகுலசேகராழ்வாரும், 'திவிவா புவிவா மமாஸ்துவாஸோ, நரகேவா நரகாந்தகப்ரகாமம், அவதீரித சாரதாரவிந்தௌ, சரணௌ தே மரணேபி சிந்தயாமி' [ஸ்வர்க்கமேயாகட்டும், பூமியேயாகட்டும், நரகமேயாகட்டும், அடியேன் எங்கு வஸித்தாலும், பகவானே, சரத்கால கமலமலர்போன்ற திருவடிகளை மரணம் ஸம்பவித்தாலுங்கூடத் தியானித்துக்கொண்டிருப்பேன்.] என்று அருளிச் செய்தார்.

தரனுகலுகு.. தத்யமுகாது:—பூமியிலுள்ள போக பாக்யங்களனைத்தும் அழிவுள்ளவை. அழிவற்ற நின் சரணகமலங்களில் பக்தியே வேண்டும். ஏனெனில், 'த்வத்பாத் பத்ம ப்ரவணாத்ம வ்ருத்தேர் பவந்தி ஸர்வே ப்ரதிகூலரூபா:' [உனது திருவடிக் கமலங்களில் ஈடுபட்டவர்களுக்கு எல்லாப் பொருள்களும் (ஐச்வர்யம் முதலியவைகள்) ப்ரதிகூலங்களாக விளங்குபவை] என்று பெரியோர்கள் கூறியுள்ளனரல்லவா?

ஸ்ரீநாரத:—நாரத மஹர்ஷி ஸ்ரீத்யாகராஜஸ்வாமியின் குருவாதலால் ('நாரத குருஸ்வாமி' 'ஸ்ரீநாரத' முதலிய கீர்த்தனங்களைப் பார்க்க) ஸ்ரீநாரத என்று விசேஷித்துக் கூறினரென்னலாம்.

அர்ஜுன:—அர்ஜுனனையும் ஒரு மஹர்ஷியாக ஸ்வாமிகள் கொண்டிருப்பதைக் கவனிக்கவும். ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவின் பரமானுக்ரஹத்தைப் பெற்று அவருடைய விசுவரூபத்தைத் தரிசித்துத் துதிக்கும் பாக்கியத்தைப் பெற்றவன் அர்ஜுனன்.

IV

புந்நாகவராளி ஆதி தாளம்

இந்த ராகம் 72 மேள கர்த்தா முறையின்படி 8-வது கர்த்தா ராகமான (ஹநும) தோடியில் ஜன்யம். நிஷாதாந்ய ராகம், (அதாவது தக்குஸ்தாயி நிஷாதத்திலிருந்து மத்யஸ்தாயி நிஷாதம் வரைமட்டுமே ஸஞ்சாரமுடைய ராகம்.) சில கிரந்தக்காரர்கள் இதன் ஸஞ்சாரம் தக்குஸ்தாயி நிஷாதமுதல் மத்யஸ்தாயி தைவதம்வரையில் மட்டுமேயாகும் என்று அபிப்பிராயப்படுகின்றனராயினும் ப்ரஸித்த வாக்கேயகாரர்களின் கீர்த்தனங்களில் மத்யஸ்தாயி நிஷாதம்வரையில் ஸஞ்சாரம் காணப்படுகின்றது நிஷாதமின்றி இதன் களை புலப்படாது. தக்குஸ்தாயி நிஷாதத்தையும் மத்யஸ்தாயி காந்தாரமும் தீர்க்கமாகப் பிடிக்கப்படுவதனால் இதன் களை நன்கு புலப்படும். 'கரிகா' என்ற இடத்தில் சதுச்ருதி ரிஷபம் பேசுகிறதென்றும் ஆகையால் இது பாஷாங்கராகமென்றும் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர் நிஸரிகமபதநி-நிதபமகாரிஸநிஸ என்று ஸஞ்சாரம்.

(10-ம் பக்கம் பார்க்க.)

வெகு அருமை யாகப் பாடும் Broadcast வெகு நாள் உழைக்கும்

# புதிய வெளியீடு

## வித்வான் பிடில் சிரோமணி

ரிகார்டு

G. R. 2408 { பிடில் ஸோலோ
ஸங்கீத ஞானமு—தன்யாசி
பாகம் 1 & 2



கும்பகோணம்-ராஜமாணிக்கம் பிள்ளை.

**விலை ரூ. 2-12.**

நவீன டிராமா செட்

## மனோரஞ்சனி

(நான்கு சகோதரிகளின் சரிதம்)

ஐந்து ரிகார்டுகளில் அடங்கியது

இம்மாதிரியான ஸெட் ரிகார்டுகளை இதுவரையில் கேட்டிருக்கமாட்டீர்கள்

B. 2397 லிருந்து — B. 2401 முடிய

**ரூ. 11-4-0**

## தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்.

10, கன்ஸிஸ்டரி கட்டிடம், பிரன்ட்தெரு, கொலம்பு. 12, வாடர்லு தெரு, கல்கத்தா. 318, எஸ்பிளனேட், சென்னை. 16, ராப்பார்ட் ரோ போர்ட், பம்பாய்.

F. M. S. & S. S.க்கு ஸோல் டிஸ்ட்டிரிப்யூட்டர்கள்:—தி இண்டியன் பிலிம் ஏஜன்ஸி, பினங்—சிங்கப்பூர்.

## அவன் தவறு

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

போது யாரோ படிகளில் ஏறி வரும் சப்தம் கேட்டு சோர்ந்து போய் மறுபடியும் நாற்காலியில் அமர்ந்தான்.

"வெளியே ஒரு ஐயா வந்திருக்காரு. ஒங்களோட ரொம்ப முக்கிய சங்கதி பேசனுமா" என்று சொல்லிக்கொண்டே வேலைக்கார முனுசாமி நாயுடு உள்ளே நுழைந்தான்.

"அவர் யார் விசாரித்தாயா?"

"யாரோ பாஷ்யமுங்களா. இனிஸ்பேட்டருன்னு சொன்னாரு"

"இனிஸ்பெக்டர்" என்றதும் அவன் திடுக்கிட்டுப் பயத்தால் உடல் நடுங்கி, வியர்வையால் ஆடைமுழுவதும் நனைந்துவிட்டது. தான் எவ்வளவோ முன் ஜாக்கிரதையாகக் காரியங்களை நடத்தியிருக்க, இப்போலீஸ் சனியன்களுக்கு எவ்விதமாகவோ தகவல் தெரிந்துதன்னைப் பிடிக்க வந்துவிட்டார்களே என்று பலவாறு எண்ணமிட்டுக்கொண்டே இருக்கும்பொழுது முனுசாமி எதிரில் நிற்பது திடீரென்று ஞாபகத்திற்குவர ஏதோ சொல்ல வாயெடுக்க முயன்றான். ஆனால் வாயினின்றும் யாதோர் சப்தமும் வெளிவரவில்லை. 'பரவாயில்லை இதோ நானே வந்துவிட்டேன்' என்று சொல்லிக்கொண்டே சப் இன்ஸ்பெக்டர் பாஷ்யம் அய்யங்கார் உள்ளே நுழைந்தார்.

இக்கட்டான சந்தர்ப்பத்தில் இன்ஸ்பெக்டர் வந்துவிட்டதைப்பற்றிப் பயமும கோபமும் ஒருங்கே எழுந்தாலும் அந்தச் சமயம் வெளிக்காட்டினால் தனக்கு ஏதாவது கெடுதலாய் முடியலாம் என்ற எண்ணத்துடன் மிக்க சாமர்த்தியமாய் புன்னகை வருவித்துக்கொண்டு அவரை எதிர்கொண்டழைத்து ஆசனத்தில் அமரும்படிக் கூறினான்.

'என்ன சம்பத், நாம் இருவரும் சந்தித்து எவ்வளவு நாட்களாயின? உனக்கு இன்று கிடைத்த அதிர்ஷ்டத்தால் உண்மையில் நான் மிக்க சந்தோஷமடைகிறேன்' என்றார் இன்ஸ்பெக்டர்.

"என்னப்பா பாஷ்யம், என்னைக் கேலி பண்ணுகிறாயா என்ன? என்ன அதிருஷ்டம் என்கிறாய் உடனே சந்தோஷம் என்கிறாய். யாருக்கு அதிர்ஷ்டம்? யாருக்கு சந்தோஷம்? நீ சொல்லுவது கொஞ்சம்கூட எனக்கு விளங்கவில்லையே" என்றான் சம்பத் சற்றுக் கலவரத்துடன்.

"ஆமாம்; இப்போது விஷயங்கள் விளங்குமா? விளங்காதுதான். எனக்குக்கூட ஒரு லக்ஷ ரூபாய் ஒரே சமயத்தில் எதிர்பாராத விதமாய் கிடைத்தால் ஒன்றும் விளங்காது. அது கிடக்கட்டும். இன்று 6-45 மணிக்கு மேல் நீ எங்கு சென்றிருந்தாய் சொல். பிறகு விஷயங்களை நான் விளங்கவைக்கிறேன்" என்று இன்ஸ்பெக்டர் சொல்லிவரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் கேட்ட சம்பத்குமாரன் இடியோசை கேட்ட நாகம்போல்நடுநடுங்கி, "நான் சத்தியமாய் சொல்லுகிறேன். நான் இன்று மாலை 5-30 மணியிலிருந்து இதோ இந்த சோபாவின்மீது உட்கார்ந்துகொண்டு பாட்டுக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்" என்று தடுமாற்றத்துடன் கூறினான்.

"பொய்! வெறும் பொய். நீ இடையில் வெளியில் போய் விட்டு வந்திருக்கிறாய்"

"ஆஹா! என் வார்த்தைகளை நீ நம்பவில்லையா? உன்னிடம் ஓர் அற்பவிஷயத்திற்காகப் பொய் சொல்லுவேனா? இன்று ரேடியோ கேட்பதற்காகவே எங்கும் போகாமல் இவ்வறையிலேயே உட்கார்ந்திருக்கிறேனே!"

"ரேடியோவில் 6-50 மணிக்குமேல் என்ன கேட்டாய்?"

"பாட்டுதான"

பாட்டுதானா? அதைக்கொண்டுதான் 6-45 முதல் சற்று நேரம் நீ இங்கில்லை என்று நான் சொல்லுகிறேன்.

டாக்டர் சம்பத்தின் முகம் சவம்போல் வெளுத்துவிட்டது என்னவிதமான பதில் சொல்லலாம் என்று யோசனை செய்தவாறே ஒன்றும் தோன்றாமல் விழித்தான். இன்ஸ்பெக்டர் தன்னைக் கைது செய்து கொண்டு போகவே வந்திருப்பதாய் அவனுக்கு உறுதியாய் தோன்றியது.

அதே சமயத்தில், "ஐயோ! ஐயோ!! இவ்வக்கிரமம் எங்குண்டு? எவனோ கொலை செய்துவிட்டானே! இதைக் கேட்பார் யாருமில்லையா? என்று கூக்குரல் சுந்தரேசன் வீட்டின் மாடியினின்று கிளம்பியது. தெருவில் அரை நிமிஷத்திற்குள்ளாக ஏராளமான கூட்டம் கூடிவிட்டது.

டாக்டர் பயத்தினால் மிகவும் நடுங்கி, "ஐயோ எனக்கொன்றுமே தெரியாதே? வீணாய் என்னையேன் துன்பப்படுத்துகிறாய்?" என்று இன்ஸ்பெக்டரை நோக்கிக் கேட்டான்.

இன்ஸ்பெக்டர் பாஷ்யம் அய்யங்கார் சட்டென்று எழுந்து வெளியில் நோக்கினார். அவருடைய சூக்ஷ்ம புத்தியும் நெடுநாளைய அனுபவமும் சுந்தரேசனை யாரோ கொலை செய்துவிட்டிருக்க வேண்டும் என்று கூறியது. உடனே சம்பத்தை நோக்கினார். டாக்டர் மிகவும் குழம்பித் தத்தளித்துக்கொண்டிருந்தது அவருக்கு நன்றாய்ப் புலப்பட்டது. அவனும் அக்குற்றத்தில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டுமென்று யூகித்துக்கொண்டார். அதனால்தான் தன்னைக் கண்டதும் அர்த்தமில்லாமல் உளறினான் என்று அவருக்குத் தோன்றியது. அவன் அன்று மாலை, எங்கும் போகாமல் ரேடியோவினருகிலேயே அமர்ந்திருக்கும் பட்சத்தில் தான் கூறப்போகும் அதிர்ஷ்டத்தைப்பற்றி அவனுக்கு முன்னரே தெரிந்திருக்க வேண்டுமல்லவா?

உடனே சம்பத்குமாரைக் கூப்பிட்டு, "இனி ஒளிப்பதில் பயனில்லை நான் எல்லாவற்றையும் விளக்குகிறேன் கேள். சரியாக 6-50 மணிக்கு ரேடியோவில் ஓர் சிறிய பிரசங்கம் கேட்டது. ஆப்பிரிக்காவுக்குச் சிறு வயதிலேயே சென்றுவிட்ட உன் சிறிய தகப்பனார் அதிர்ஷ்டவசத்தினால் கிம்பர்லியில் ஓர் வைரச் சுரங்கத்திற்குச் சொந்தக்காரராகிக் கோடிக்கணக்காய் பணம் சம்பாதித்தார். அவருக்கு வாரிசு ஒருவரும் இல்லாதபடியால் அவர் இறக்குமுன்பு எழுதிவைத்த உயிலின்படி உனக்கு ஒரு லக்ஷரூபாயும் உன் சகோதரன் சுந்தரேசனுக்கு ஒரு லக்ஷ ரூபாயும் மீதி பெருந்தொகை பலவகைப்பட்ட பொதுத் தர்மங்களுக்கும் சேரவேண்டுமென்றும், நீயும் உன் சகோதரனும் இருக்குமிடம் அங்குள்ள அதிகாரிகளுக்குத் தெரியாதபடியால், உங்கள் இருப்பிடத்தைக் கண்டறியப் பலவழிகளும் அவர்களால் கையாளப்பட்டது இன்று ரேடியோவில் 6-50 முதல் 6-55 வரையில் உங்கள்இருவருடைய அங்க அடையாளங்கள், பெயர், ஊர் முதலிய விவரங்களைக் குறிப்பிட்டு நீங்கள்மூன்று தினங்களுக்குள் பம்பாயிலுள்ள ஓர் லாயரை நேரில் காணவேண்டுமென்றும் ஒரு பிரபல வக்கீலின் விலாசமும் கொடுக்கப்பட்டது. 6-50 மணிக்கு நீ இங்கிருந்திருக்கும் பட்சத்தில் அப்பிரசங்கம் கண்டிப்பாய் உனக்கும் தெரிந்திருக்கும்" என்று கூறிச் சுவாதீனமாய் அவனைப்பிடித்துக்கொண்டு வெளியே புறப்பட யத்தனித்தார்.

அப்போது தான் சம்பத்குமாரனுக்குத்தான் முட்டாள்தனமாய் செய்துவிட்ட தவறு தெரியவந்தது. என்ன பயன்?

---

### பல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; * ஸரி-காகா-காகா- | கரிகா | ; | ஸரிகாரீ | ஸ. ; | ஸரிநீ |
| ; * ஹரி-ஹரி-நீ- | யொக்க | ; | தி வ்ய பா | த ; | |
| ; * ஸரிகாரிஸா ;- | ஸாரீ | கமபா ; | பம | காரீ ; | ஸா |
| ; * அரவிந்த ;- | மீ ய | வே ; | | ... ; | |
| ; * ஸரிகாகா-காகா- | கரிகா | ; | ஸரிகாரீ | ஸா ; | ஸாரிஸ நீ ; |
| ; * ஹரி ஹரி-நீ | யொக்க | ; | தி வ்யபா | த ; | ... ; |
| ; * ஸரிகாரீஸா ;- | ஸா ஸா | மபதபாம | பம | காரீ | ஸா ; |
| ; * அர விந் த ;- | மிய்ய | வே... | | ... | . ; |

### அநுபல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; * பபா-பபா-பாமா- | பமகரி | கா-கம | டாபா | பாபா | தநிதப |
| ; * தா-நக-லுக- | போ,... | க-பா | க்ய | மெல் | லனு |
| ; * தநி தாபா- | பா, மதாபா | பமகா ; | பம | காரீஸாநி | |
| ; * தந் யமு- | கா, துஸு | மி ; | ஸ்ரீ | . க்ருஷ்ண | |
| ; * | | | | | |
| ; * (ஹரி ஹரி) | | | | | |

### சரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; * ஸரி-காகா- | கா ; கரிகா | ரீ | கமா கரீ | ஸாஸா | ஸா ஸா |
| ; * ஸா-கஸ- | நந் ; தன | . | ஸ்ரீ நா | ர த- | சு கா |
| நீ * ரிகா ரிஸா | ஸா ; ஸா நீ | ; | ஸரிகாரீ | ஸா ; ; ; | |
| * ஜுமுனு | வெல் ; லனு | ; | திம்... | சு ; ; ; | |

'வநஜ நயன...லேவிம்சு'—அநுபல்லவிபோல் பாடப்படவேண்டும். மற்ற சரணத்தையும் இப்படியே பாடுக.

தென்னிந்தியப் பிரமுகர்கள்

# தர்மரத்ன ஏ. சங்கரய்யா

(1843—1919)

(கே. எஸ். ஆர்.)

### பழைய சம்பிரதாய பிச்சுக்களுடன் போராட்டம்

கொச்சி சமஸ்தானத்தில் பத்தொன்பதாவது நூற்றாண்டில் தம்து வேலைத் திறமையினாலும் குணாதிசயங்களின் மஹிமையினாலும் மிகப் பிரசித்தி வாய்ந்தவர் திவான் பேஷ்காராகவிருந்த ஸ்ரீமான் ஏ. சங்கரய்யா ஆவார். இன்றைக்குச் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு கொச்சி சமஸ்தானம் எந்த நிலையில் இருந்திருக்கக்கூடும் என்பதை ஊஹித்தறியவல்லவர்களுக்கு அச்சமயம் இவர் அங்கு இயற்றிவந்த வேலையின் அதிசயங்கள் எளிது புலப்படும். இவர் கொச்சிக்குச் சென்றபோது அங்கு நாகரீகம் பரவாமல், எல்லாம் புராதன முறையிலேயே நடைபெற்று வந்தன; ஆங்கில வித்யா வாசனைகூட ஒருவருக்கும் கிடையாது. விஷயங்களை எழுதி வைப்பதற்கு ஓலைச் சுவடிகள்தான் உபயோகிக்கப்பட்டு வந்தன. போக்குவரத்து சாதனங்கள் மிகவும் தீனஸ்திதியில் இருந்தன. ஆகையினால் ஜனசௌகர்யங்கள் குறைவாகவே இருந்து வந்தன. ஆனால் இவரது காலத்தில் இவர் அங்கும் தற்கால முறைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தார். இதற்காக இவர் அநேகம் "பழைய சம்பிரதாயப் பிச்சு"க்களுடன் போராட வேண்டி நேர்ந்தது. இவரது சேவை சமஸ்தானத்திற்கு மட்டுமே இல்லை, பொதுவாக ஹிந்துக்களின் உத்தாரணத்திற்காக இவர் உழைத்து வந்தார். இவருக்கிருந்த பரந்த ஞானமானது இவர் பலவிஷயங்களைப் பற்றியும் தயங்காமல் பிரஸ்தாபித்து வருவதற்கு உதவியது. எவ்விஷயத்திலும் இவர் தீவிரப் போக்கை அனுசரித்தது கிடையாது? சமரஸத்திலேயே இவருக்கு நோக்கம் இருந்ததுபற்றி இவருக்கு எங்கும் ஆதரவு கிடைத்தது. இவரது மரணத்திற்கு முந்திய நாற்பது வருஷகாலத்தில் இருந்து வந்த பத்திரிகைகளை நாம் இப்போது பார்ப்போமாயின், அவற்றில் ஏறக்குறைய தினசரியாக இவருடைய பெயருடன் விஷயதானத்தைக் காணலாம். இவ்வாறு அப்போது நிலவி வந்த பல பத்திரிகைகளுக்கும் இவர் அவ்வப்போது ஏற்படும் பிரச்னைகளைப்பற்றி எழுதி வந்தார். இதனுடன் இவரது ஆங்கில நடையும் ரம்மியமாகவிருக்கும்; ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மிகவும் பொருத்தமான பதங்களை உபயோகித்து வந்திருப்பது இவரது பாஷாஞானத்தைத் தெளிவாக்கும். இவரது சாமர்த்தியமும் திறமையும் மிகச் சிறந்ததாகவிருந்தபோதிலும் இவருக்குக்கொச்சி சமஸ்தானத்தில் அநீதி இழைக்கப்பட்டது. திவான் பதவிக்கு எவ்விதத்திலும் அருகரான இவர், சமஸ்தானங்களில் இருந்து வரும் பலவிதமான அருவருப்புக்குரிய சூழ்ச்சிகள் காரணமாக நியமிக்கப்படவில்லை.



### புகழுடன் வித்தியாப்யாஸம்

தர்மரத்ன ஏ. சங்கரய்யா 1843-ம் வருஷம் ஜனவரிமாதம் ஸ்ரீமான் அப்பாத்துரை அய்யர் என்பவரின் புத்திரராகப்பிறந்தார். அப்போது இவரது தகப்பனார் மஞ்சகுப்பம் (கூடலூர்) தாசில்தாராகவிருந்தார்; அவர் மிகப் பிரசித்தமானவர். அவரிடம் ஜில்லாக் கலெக்டர்களுக்கு விசேஷப்ரீதி இருந்து வந்தது இவர்கள் மழநாட்டைச் சேர்ந்த தமிழ் பிராம்மணர்கள். மழநாடு தற்போது எங்கிருக்கிறது என்பது தெரியவில்லையாயினும், அது திருச்சி ஜில்லாவில் லால்குடிக்குச் சமீபத்தில் இருந்ததாகத் தெரிகிறது. அவ்வூரில் ஒரு சிற்றரசன் இருந்துவந்ததாகவும், அங்கிருக்கும் தேவாலயத்தைச் சேர்ந்த தடாகமானது எவ்வித வியாதிகளையும் நிவாரணம் செய்யும் சக்தி வாய்ந்தது என்பதாகவும் நாம் சரித்திர பூர்வமாக அறிகிறோம். இவர் பிறவியிலிருந்தே இவர் பிற்காலத்தில் உன்னத ஸ்தானத்தைக் கிட்டுவார் என எதிர்பார்க்கப்பட்டது. அக்காலத்தில் அநேகம் பள்ளிக்கூடங்கள் கிடையாது. அப்பாதுரை அய்யருக்கு தமது மக்களுக்கு ஆங்கிலப் படிப்பைப் போதிக்க வேண்டுமென்ற தீர்மானம் இருந்து வந்தது ஆகையினால், அவர் உத்தியோகத்திலிருந்து விலகிய பின்னர் கும்பகோணத்திலேயே வசிக்கலானார். இவர் கும்பகோணத்தில் படித்து மெட்ரிகுலேஷன் பரிக்ஷையில் தேறினார். பள்ளிக்கூட மாணவர்களுள் இவரே முதல்வராகப் பரிக்ஷையிலும் பிரகாசித்தார். முதலாவதாகத்தேறியதுபற்றி இவருக்குக் கவர்ன்மெண்டார் இவர் காலேஜில் உயர்தர வித்யாப்யாஸத்தை நடத்துவதற்காக "ஸ்காலர்ஷிப்" ஒன்றை வழங்கினர். உடனே இவர் சென்னைக்கு வந்து பிரஸிடென்சி காலேஜில் மாணாக்கரானார். இயற்கையாகவே இவருக்குக்கணித சாஸ்திரத்தில் ஆச்சரியமான திறமை உண்டு. தவிர மற்ற பாடப் பகுதிகளிலும் இவர் தேர்ச்சி பெற்றிருந்தது பற்றி, ஆசிரியர்கள் யாவரும் இவரைக் கொண்டாடினர். நான்குவருஷகாலம் இவர் கலாசாலையில் படித்தார். 1860-ம் வருஷம் டிசம்பர் மாதம் இவர் "புரொபிஷியெண்ட்" பரிக்ஷையில் தேறினார். 1861-ம் வருஷம் பிப்ரவரி மாதம் இவர் "பி. ஏ." பரிக்ஷையில் முதல் வகுப்பில் தேறினார். இவருடன் படித்துத் தேறியவர்களுள் தஞ்சை வக்கிலாகச் சோபித்த ஸ்ரீமான் என். சுப்ரமணிய அய்யரையும், ராஜா டி. ராமராயரையும்குறிப்பிடலாம். 18 0-ல் ஆங்கிலப் பரிசும், 1861-ல் தமிழ்ப் பரிசும், எல்பின்ஸ்டன் பரிசும் இவருக்குக் கலாசாலையில் வழங்கப்பட்டன. பிரின்ஸிபாலாகவிருந்த மிஸ்டர் பவல் இவருடைய "ஊக்கத்தையும். திறமையையும், உயர்ந்த நடத்தையையும்" பாராட்டி எழுதினார்.

### திவான் சேஷாத்ரி அய்யருக்குக் குரு

பட்டதாரியான இவர் உத்யோகத்தை நாடவே, வித்யா இலாகாத் தலைவராக விருந்த மிஸ்டர் (ஸர்) அலெக்ஸாண்டர் அர்பத்நெட்டு,இவருக்குக் கள்ளிக்கோட்டை ப்ரொவின்ஷியல் ஹைஸ்கூலில் பிரதம உதவி ஆசிரியர் பதவியை அளித்தார். அப்போது இவருக்குச் சம்பளம் 150 ரூபாய்கள். அங்கு இவர் முதலில் மிஸ்டர் இ. தாம்ப்ஸன், பின்பு மிஸ்டர் இ. எல் ஹோகார்த் என்பவர்கள் கீழ் வேலை பார்த்தார். மைசூர் திவான் ஸர். கே. சேஷாத்ரி அய்யர் இவர்கீழ் படித்தார். 1865-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் மிஸ்டர் ஹோகார்த் இவரது திறமையைப்பற்றித்தாம் உயர்ந்த அபிப்பிராயம் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். 1865-ம் வருஷம் பிப்ரவரிமுதல்1866-ம் வருஷம் ஏப்ரல் வரையில் இவர் சென்னை பிரஸிடென்சி காலேஜில் உதவி போதகாசிரியராகவிருந்தார்; இக்காலத்தில் பிரின்ஸிபாலாகவிருந்தவர் மிஸ்டர் தாம்ப்ஸன். இதே காலத்தில் இவரிடம் ராவ் பஹதூர் பூண்டி ரங்கநாத முதலியார் படித்ததாகவும் சொல்வதுண்டு. இதன் மத்தியில் 1864-ம் வருஷ இறுதியில் இவர் "அன்கவெனன்டட் சிவில் சர்விஸ்" பரிக்ஷையில் தேறினார்; இதனுடன் "டிஸ்டிரிக்டு முனிசிப் ப்ளீடர்கள்" பரிக்ஷையிலும் இவர் முதலாவதாகத் தேறினார். இவ்விராஜதானியில் முதலாவதாகத் தேறியவர் இவர்தான். சிலகாலம் இவர் சட்ட சாஸ்திரத் துறையில் இறங்கி, நியாயவாதியாகத் தொழில் நடத்துவதைப் பற்றிப் பெரிதும் சிந்தித்து வந்தார்.

மின்சாரரசம்

சகல வியாதிகட்கும் தேவாமிருதம் போன்றது. புட்டி 1-க்கு ரூபா 2. மின்சார ரசம் கம்பெனி, (லிட்) சேலம்,

## கொச்சி சமஸ்தானத்தில் உத்தியோகம்

இந்தச் சந்தர்ப்பத்தில் கொச்சி திவானாகவிருந்த ஸ்ரீமான் டி. சங்குண்ணி மேனன் ஸி. எஸ். ஐ. இவருக்கு1866-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் கொச்சியில் ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜி உத்தியோகத்தைக் கொடுத்தார். இவர் கள்ளிக்கோட்டையில் இருந்தபோது திவானின் புதல்வர்கள் இவரிடம் படித்து வந்தனர். தமது மக்கள் மூலமாகவும் இதரர்கள் மூலமாகவும் இவரைப்பற்றித் திவான் நன்கு தெரிந்துகொண்டார். வெகு சீக்கிரத்தில் இவரைத் திவான் பேஷ்காராக உயர்த்துவதாகவும் அவர் வாக்களித்தார். சாதாரணமாகத் திவான் பதவிக்கு அடுத்தபடியாகவிருப்பது திவான்பேஷ்கார் ஸ்தானமாகும். இதை உத்தேசித்தும், ராஜா ஸர். டி. மாதவராயரின் ஆலோசனைக்கிணங்கியும் இவர் கொச்சி சமஸ்தான உத்தியோகத்தை மறுக்காமல் ஸ்வீகரித்துக்கொண்டார். பின்பு சில வருஷங்கள் இவர் ஜில்லா ஜட்ஜியாகவிருந்தார். 1870-ல் இவர் திவான் சங்குண்ணி மேனனால் திவான் பேஷ்காராகவும் உயர்த்தப்பட்டார். இந்த ஸ்தானம் பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் ஜில்லா கலெக்டர் பதவிக்குச் சமமானதாகும். இவர் இக்காலம் முழுமையும் திருச்சூரில் இருந்து வந்தார். நிர்வாகத்தில் இவர் அநேகம் சீர்திருத்தங்களை ஏற்படுத்தினார். இன்றும் திருச்சூர் வாசிகள் இவர் இயற்றி வைத்துள்ள நன்மைகளை மறக்காமலிருந்து வருகின்றனர். சதா இவர் பொது ஜனங்களின் நன்மையையே நாடிவந்தார். வீண்செலவுகளை மேற்கொள்ளாமல், பொது ஜனங்களின் அனுகூலங்களுக்காக இவர் சிரமப்பட்டு வந்தார். அக்காலத்தில் எல்லா அதிகாரங்களும் திவான்பேஷ்காரிடம் இருந்து வந்தன. ஜில்லாவில் மேலான மாஜிஸ்திரேட்டாகவும் அவர் இருந்து வந்தார். சமஸ்தான பொக்கிஷத்திலிருந்து திவான் பேஷ்கார்கள் பணத்தை வேண்டாமல், தங்களது ஜில்லாக்களை நிர்வஹித்து வரும்வரையில் அவர்களுக்குச் சிறிதும் தொந்திரவு கிடையாது. ஆகவே, இவர் போன்ற சமர்த்த நிர்வாகிகளுக்கு எவ்விஷயத்திலும் பயம் கிடையாது. இவர்போன்றவர்களுக்கு விசேஷ மதிப்பும் இருந்துவந்தது அக்காலத்தில் கொச்சி சமஸ்தானம் முற்போக்கு இல்லாமல் இருந்தது. ராஜாக்கள் பரமவைதிகர்களாகவிருந்தபடியால், திவானுக்கும் திவான் பேஷ்கார்களுக்கும் விசேஷ அதிகாரங்கள் இருந்துவந்தன. இவ்வுத்தியோகஸ்தர்கள் யாவரும் உயர் குடும்பத்திலிருந்து வந்தவர்கள். ஆகையினால் கௌரவத்திற்காகப் பதவியை வஹித்து வந்த இவர்கள் மிகுந்த பெருந்தன்மையுடன் சமஸ்தானத்தை நிர்வஹித்து வந்தனர்; சங்கரய்யா முதலிய யாவரும் நன்னடத்தையுடன் நம்பிக்கையாக வாழ்ந்துவந்தனர். அக்காலத்தில் மேஜை, நாற்காலிகள் உபயோகிக்கப்படவில்லை; தேகத்தின்மேல் அங்கிகள் தரிக்காமல் உத்யோகஸ்தர்கள் ஆபீஸிற்குவந்து வேலை பார்ப்பது வழக்கம. இத்தகைய நிலையை இவர் அகற்றி வைத்தார். இவ்விஷயமாக இவர் பிறப்பித்த உத்திரவுகளையும் அங்கு அநேகர் மதாசாரத்திற்குத் தீங்கு விளைவிப்பதாகக் கருதி சண்டையிட்டனர் என்பதிலிருந்து அச்சமஸ்தானத்தில் ஆடிவந்த மூடநம்பிக்கையின் அளவு ஸ்பஷ்டமாகும். ஆனால் இவர் எதிர்ப்புகளை அலக்ஷியஞ் செய்து, உத்ஸாஹத்துடன் அச்சமஸ்தானத்திற்கு இதர நன்மைகளைச் செய்து வந்தார்.

## திருவாங்கூர் மஹாராஜாவின் கடிதம்

இவர் திவான் சங்குண்ணி மேனன் ரஜாவில் சென்றபோதெல்லாம் அவருக்குப் பதிலாகத் தாற்காலிகத் திவான் பதவி வஹித்து, எல்லோருக்கும் திருப்திகரமாகத் தமது அலுவலைச் செய்து முடித்தார். சுமார் 1879-ல் திவான் சங்குண்ணி மேனனுக்குத் தேக அசௌகர்யம் மேலிடவே, அவர் வெகுகாலம் பதவியில் இருப்பது இயலாதுபோயிற்று; அவர் ரஜாவில் உடனே சென்றார். அந்த ஸ்தானத்திற்கு அவரது சகோதரர் கோவிந்த மேனனை நியமிக்க சூழ்ச்சிகள் கைப்பற்றப்பட்டன. திவானாக வேலைபார்த்து வரும் இவருக்கு இவ்வாறு அநீதிகளை விளைவிக்க வழிகள் பின்பற்றப்பட்டன. கோவிந்த மேனன் விஷயத்தில் அவரது சகோதரரும் தகப்பனார் சங்கர வாரியரும் அந்தச் சமஸ்தானத்தில் திவான்களாகவிருந்தவர்கள் என்பது பெரிதாகக் கருதப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில்கொச்சி முதலாவது இளவரசராகவும், பின்பு வீரகேரளவர்மா என்ற மகுடத்துடன் பட்டத்துக்கு வந்தவருமான கொச்சி மன்னர் இவருக்கு எழுதியதாவது:—"எப்போதும் நன்மையை எதிர்பார்க்கவேண்டும் என்பதும் அதே சமயத்தில் கெடுதலை வரவேற்கத் தயாராகவும இருக்கவேண்டும் என்பதும் என் கொள்கை. துணிந்து செய்யத் தருணம் அதை விட்டால் வேறு கிடையாது" திருவாங்கூர் மஹாராஜா ஸ்ரீ விசாகம் திருநாள் இதே சமயத்தில் (1879-ல்) இவருக்கு எழுதிய அன்பான கடிதம் பின்வருமாறு:—தங்க

(29-ம் பக்கம் பார்க்க.)


சிறந்த கூந்தல் ஆகாரம்



உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10.
வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்
(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா.
தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—
The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.



வருங்கால பலன்



புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில் அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.



பண்டிட் M. R K. மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்
பண்டிட் E. S. K. சுவாமி, ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன் கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2 ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10. ஜாதகமாவது, பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்" 70, தேவராஜமுதலி தெரு, பி.டி. மதராஸ்



இரங்கோன் கலர் சிந்தடிக்கற்கள் மணிமாலைகள்




இந்தியாவில் எல்லா பாகங்களிலும் ஏராளமாய் விரும்பக்கூடிய தற்கால நாகரீகத்துக்கேற்றவாறு கெமிகல் கோல்டினால் புது மாதிரியாய் தயார் செய்தவை. இதை ஸ்திரீகள் குழந்தைகள் நேர்த்தியாய் அணிந்து கொள்ளலாம்.

25" நீளமுள்ள கலர் கல்மாலை 1க்கு ரூ. 4-0 0
டை பெண்டன்டு போட்டது 1க்கு ,, 5-0-0
ஜாலர் ஒட்டியாணம் பெரியது 1க்கு ,, 6-8-0
நெ. 1. சாதா கெஜ்ஜை ஒட்டியாணம் 1க்கு 5-8.
நெ. 2. 1க்கு 3-8-0 நெ. 3. 1-க்கு 2-8-0
கைவளையல்கள் பெரிய சைஸ் ஜதை 1-க்கு 2-8-0. கெமிகல் கோல்ட் ரங்கோன் டைமண்டு 14 கற்கள் உள்ள கம்மல் ஜதை 1க்கு 6-0-0. எல்லாவற்றிற்கும் 5 வருஷம் உத்தரவாதம். F. M. S. ஆர்டருக்கு முன் பணம் அனுப்பவும்.

கே. நாதமுனி & சன்ஸ்,
(ஸ்தாபிதம் 1910.)
168, சைனா பஜார் ரோட், மதராஸ்.



பம்பாயில் முதல் காங்கிரஸ் கோகுலதாஸ் பாடசாலையில் நடைபெற்றது. சென்ற 17-ந்தேதி காலை அங்கேயிருந்து எடுத்துச் செல்வதெனத் தீர்மானித்திருந்த தீபஸ்தம்பத்தை ஸ்ரீமான் கே. எப். நாரிமன் கொளுத்தினர். அதன்பிறகு அவர் பிரசங்கஞ் செய்தபோது எடுத்த படம்.

# இந்திய வர்த்தமானம்

---

### ரூபாய் மதிப்பை மாற்ற உத்தேசமில்லை"

ரூபாய் மதிப்பு சம்பந்தமாக தனது கட்சியை எடுத்துரைக்க சந்தர்ப்பம் கொடுப்பதற்காக ஒரு தூது கோஷ்டியை வரவேற்குப்படி கோரி சென்னை காங்கிரஸ் லீக் ராஜப்பிரதிநிக்கு எழுதியிருந்தது. அதற்கு ராஜப்பிரதிநிதியின் அந்தரங்கக் காரியதரிசி பின்கண்டபடி பதில் எழுதியிருக்கிறார்:—தற்போதைய ரூபாய் மதிப்பு நிலை சம்பந்தமாக இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய கொள்கையை மாற்றிக் கொள்ள உத்தேசிக்கவில்லை. இந்த நிலைமையில் அது சம்பந்தமாக தூது கோஷ்டியை ராஜப் பிரதிநிதி வரவேற்பதால் ஒரு பிரயோஜனமுமில்லை யென்பது தெளிவு

* * * *

### 480 ஹரிஜனக் குடும்பங்கள் சீக்கியராயினர்.

ஷாஹ்பூரையும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களையும் சேர்ந்த சுமார் 480 ஹரிஜன குடும்பத்தினர் டில்லிக்கு வந்து சேர்ந்தனர். பாண்டுகள் முழங்கவும், உருவிய கத்திகள் ஏந்திய சிக்கியத் தொண்டர்கள் சூழவும் இந்த ஹரிஜனங்கள் டில்லிக்குள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். முடிவில் சிஸ்கஞ்சு குருத்துவாரத்திற்குச் சென்றனர். இவர்கள் சீக்கியராக மதமாற்றம் செய்யப்பட்டனர்.

சீக்கிய பிரசார மிஷன் தலைவர் ஸ்ரீமான் பிரதாப் ஸிங் இவர்கள் கூட்டத்தில் பேசுகையில் சீக்கிய மதத்திற்கு மாறியபின் ஒரு கொடுமையான சமூகத்தினின்று இவர்கள் விடுதலை பெற்றவர்களாவார்களென்றும், மற்ற சீக்கியர்கள்போலவே இவர்களுக்கும் எல்லாவித மத சமூக உரிமைகள் அளிக்கப்படுமென்றும் சொன்னர்.

* * * *

### "கவர்னர்கள் தலையிட்டால் மந்திரிகள் ராஜிநாமாச் செய்ய வேண்டும்."

பம்பாயில் நடைபெற்ற மேதகிந்திய மிதவாதச் சங்க வருஷாந்தரக் கூட்டத்தில் ஸர் சிமன்லால் செதல்வாடு தலைமை வகித்துப் பேசுகையில் புதிய அரசியலை அமுல் நடத்தி அதனுலேற்படக்கூடிய நன்மையைச் சாதிக்கப் பார்ப்பதே சிறந்த முறையென குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—புதிய அரசியலை அமுல் நடத்துவதென்ருல் மந்திரிகளோ சட்டசபைகளோ எவ்விதக் கொள்கையையும் விட்டுக் கொடுக்கவேண்டுமென்று நான் கூறவில்லை அல்லது இவர்கள் கவர்னர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்றும் நான் கூறவில்லை. பொது ஜனங்களின் க்ஷேமாபிவிருத்திக்கான தங்கள் திட்டங்களை மந்திரிகள் தைர்யமாக நிறைவேற்ற முயற்சிக்கவேண்டும். நியாய விருத்தமாகக் கவர்னர் தலையிட்டால் மந்திரிகள் ராஜிநாமாச் செய்யவேண்டும்.

புதிய அரசியல் பற்றிக் காங்கிரஸ் கொண்டுள்ள பான்மை வருந்தக்கூடியதாகும். புதிய அரசியலை புறித்துவிடுவதென்று பேசுவதெல்லாம் தேச முன்னேற்றத்திற்கு உதவியளிப்பதாகாது. பதவியேற்பதா இல்லையா வென்பதில் காங்கிரஸ் இன்னும் நிச்சயம் செய்து கொள்ளவில்லை

* * * *

### மாணவர்களுக்கு சர்தாரின் செய்தி

திருச்சி மாணவர்களுக்கு சர்தார் படேல் பின் வரும் செய்தியை வெளியிட்டிருக்கிறார்:— புதிய அரசிய திட்டத்தில் ஏராளமான மாணவர்களுக்கு ஓட்டுரிமை கிடைக்கும். அரசியல் காரியங்களில் கலந்து கொண்டு அவர்கள் விஷயங்களைத் தெரிந்து கொள்ளாத வகையில் ஓட்டுரிமையைச் சரியாக உபயோகிக்க முடியாது. ஆகவே மாணவர்களுக்கும், அரசியலுக்கும் சம்பந்தமில்லை யென்று சொல்வது தவருகும்.

* * * *

### எம். எஸ். எம் ரயில்வே

எம் எஸ் எம். ரயில்வே சம்பந்தமான ஒப்பந்தம் சீக்கிரத்தில் முடிவடைகிறது இன்னும் சில வருஷங்களுக்குக் கம்பெனியிடமே ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுமென்று வதந்தி சரியானதென்றே தோன்றுகிறதென டில்லியிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. ஆனல் அதிகாரிகள் இதில் முற்றிலும் மௌனமாகவே இருக்கின்றனராம். கவர்ன்மெண்டார் ரயில்வே நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டுவிட வேண்டுமென்று இந்தியா சட்ட சபையில் வலுவான அபிப்பிராயம் வெளியிடப்பட்டும் அக்கொள்கையை ரெயில்வே போர்டு இப்பொழுது ஏற்கத் தயாரில்லையெனத் தெரிகிறது

* * * *

---

குணமில்லையேல்
ரூ. 100 இனம்.
**யானைக்கால்**
விரைவாதம், முடக்குவாயு, டைஜூரம் முதலிய வாயு ஸம்பந்தமான வியாதிகள் 20 நாளில் குணம் ரூ. 5. குணமானவர்களின் புகைப்பட நற்சாக்ஷி பத்திர லேட்லாக் வேண்டுவோர் 1 அணுஸ்டாம்புடன் எழுதவும்.
யானைக்கால் வைத்தியசாலை, 53 பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

நேர்த்தியான
பிளாக் காட் மைனர் பேனக்கள்
(BLACK CAT MINOR)
நன்ருக எழுதுபவை — மலிவான விலைகள் பேன 1-க்கு 12 அண.
பிரின்ஸ் லேடீஸ் பேன
பென்சல்
ஸ்பெஷல் ஸெட் — ஸெட் 1-க்கு ரூ. 4—8
உங்களுக் கருகிலுள்ள வியாபாரியை அணுகி பேனவை எழுதப் பாருங்கள்.
எல்லா "மித்திரன்" புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
D. L. G Co, 176 BROADWAY, MADRAS.

மற்ற பக்கங்களில்


| | |
|---|---|
| அவன் தவறு | 2 |
| விளம்பர உரிமை | 4 |
| ராதா (தொடர்கதை) | 5 |
| அவதியே ஐந்து மணி வண்டியே | 7 |
| [illegible] | 8 |
| தென்னிந்தியப் பிரமுகர்கள் | 11 |
| இந்திய வர்த்தமானம் | 13 |
| [illegible] பிரமுகர்கள் | 16 |
| விருக்ஷங்களும் அவற்றின் உபயோகங்களும் | 17 |
| மிஸ் கமலா | 18 |
| கீழ்க்குலத்தோனும் உபதேச முறையும் | 23 |
| புஸ்தக விமர்சம் | 25 |
| நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி | 26 |
| நவநாகரீகம் | 31 |
| மீன்களின் வஞ்சம் (சிறுவர் பகுதி) | 33 |
| விநோதக்கொத்து | 37 |




(இடதுபுறமிருந்து) 1. லார்டு பிரவுன்லோ 2 மிஸஸ் ஹெர்மன் ரோஜர்ஸ், 3. மிஸஸ் ஸிம்ஸன். 4 மிஸ்டர் ஹெர்மன் ரோஜர்ஸ். மிஸஸ் ஸிம்ஸன் ரோஜர்ஸ் தம்பதிகளின் விருந்தாளியாக இருந்து வருகிறார்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

### "அபிஸீனியாவை விழுங்கி விட்டோம்"

இவ்வாரம் கிடைத்துள்ள அபிஸீனியா சம்பந்தமான செய்திகள் மிகவும் ரஸமானவை. அவை கீழே பிரசுரிக்கப்படுகின்றன:—

ஸீனர் முஸோலினி ஸெனட் சபையில் பின் வருமாறு பேசினார்:—இப்பொழுது நாம் அபிஸீனியா முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டோம். அதைப் பாதுகாக்க நாம் உறுதியுடன் கத்தியேந்திப் போராடுவோம்.

காமன்ஸ் சபையில் அந்நிய நாட்டு மந்திரியான மிஸ்டர் அந்தோணி ஈடன் பின் வருமாறு அறிவித்தார்:—இத்தாலி அபிஸீனியாவைத் தனது ஆதிக்கத்துக்குட்படுத்தியிருப்பது நியாயமானதுதான் என அங்கீகரிக்க பிரிட்டிஷ் சர்க்கார் உத்தேசிக்கவில்லை.

இத்தாலியிலுள்ள டூரினிலிருந்து வெளியாகும் "லாஸ்டாம்பா" என்ற பாஸிஸ்ட் கட்சிப் பத்திரிகையில் பின்வருமாறு ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது:—அபிஸீனிய மன்னர் அடிஸ் அபாபாவிலிருந்து புறப்படு முன், அந்நகரத்தை அழித்து விடுமாறு உத்தரவிட்டார். இது காரணமாக, இன்ஷியூர் செய்திருந்தவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய லாய்ட் இன்ஷியூரன்ஸ் கம்பெனி 1,20,000 பவுன்கொடுக்க நேர்ந்தது. இத்தொகையை மன்னரிடமிருந்து வசூலிக்க அவர்மீது வழக்குத் தொடுப்பதென அக் கம்பெனியார் உத்தேசித்திருக்கின்றனர்.

ரோமாபுரியிலிருந்து பின் கண்ட செய்தி வெளி வந்திருக்கிறது:—மேற்கு அபிஸீனியாவில் கோர் நகருக்கு மேற்கே 75 மைல் தூரத்திலுள்ள காம்பலாவுக்குள் ஒரு இத்தாலியப் படை பிரவேசித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அப்படையினர் காம்பலாவுக்கும், ஸூடானுக்குமிடையேயுள்ள கப்பல் போக்குவரத்துபற்றிய சுங்கக் காரியாலயத்தை ஆக்கிரமித்துக்கொண்டனர். அதே சமயத்தில் பல இத்தாலிய யுத்த விமானங்கள் காம்பலாவுக்குப் போய்ச் சேர்ந்து, அங்கு ஏராளமான யுத்த தளவாடங்களையும் சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்களையும் இறக்குமதிசெய்ததாகத்தெரிகிறது.

இத்தாலியரை இதுகாறும் எதிர்த்து வந்த ராஸ் இம்ருவை அவர்கள் சிறைப்படுத்தியிருப்பதாகவும் அவருடன் 80 எதியோபியர்கள் சிறைப்படுத்தப்பட்டனரென்றும் அவர்களிடமிருந்து ஆயிரம் துப்பாக்கிகளையும், 5 இயந்திர பீரங்கிகளையும் கைப்பற்றியதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்தாலியரை எதிர்த்தோரில் ராஸ் இம்ருவின் படையொன்றுதான் இதுவரை பிடிபடாமலிருந்து வந்ததென்றும் இனி அங்கு இத்தாலியருக்கு எத்தகைய எதிர்ப்புமிராதென்றும் சொல்லப்படுகிறது.

* * * *

### ஜெர்மனியில் அடக்குமுறை

ஜெர்மன் சர்க்கார் 93 ஜெர்மன் பிரமுகர்களின் பிரஜாவுரிமையைப் பறிமுதல் செய்துவிட்டார்கள். அவர்கள் சர்க்காரிடமும் ஜனங்களிடமும் விசுவாசக் குறைவாக நடந்து

(27-ம் பக்கம் பார்க்க)


நரையை ஒழியுங்கள்!

இந்த ஆயிலால் தலைநரை ஒழிந்துவிடும். வேரிலிருந்தே கூந்தல் கருமை பெறும்; 60-வயது வரை அப்படியே இருக்கும். பலனில்லையேல் 2 மடங்கு கிரயம் வாபீஸ். சொற்ப நரைக்கு ரூபா 3-க்கும், கால்பங்கு நரைக்கு ரூபா 5-க்கும் பாதிக்கு மேலோ அல்லது பூராவுமோ விழுந்தால் ரூபா 9-க்கும் ஆயில் வாங்குக.

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படவேண்டும்.

BALA KALA STORES,
P. O. Kansi Simri (Darbhanga.

எந்தப் பல் பசையானாலும் சரி—அதன் விலை எவ்வளவானாலும் சரி, அதன் புகழ் எவ்வளவு உயர்ந்ததாயினும்சரி—"நீம் டூத் பேஸ்ட்"டைவிட வேறு எதுவும் உங்கள் பற்களைப் பத்திரமாகச் சுத்தி செய்யாது; ஈறுகளைப் பாதுகாக்காது. இவ்வளவு தூரம் நாம் புகழ்ந்து பேசுவதற்குக் காரணம் யாதெனில் "நீம் டூத் பேஸ்ட்" ஒன்றில்தான் வேப்பங்குச்சி (நீம்)யின் சத்து பூராவும் அடங்கியிருக்கிறது; நம் தேசத்தில பற்களைச் சுத்தப் படுத்தவும், பயரியாவைத் தடுக்கவும் ஈறுகளைக் கெட்டிப் படுத்தவும் வேப்பங்குச்சி உபயோகப்பட்டு வருகிறது.

இன்றே "நீம் டூத் பேஸ்ட்" டியூப் ஒன்றை வாங்கி பற்களையும் ஈறுகளையும் கவனியுங்கள்.



'Neem' TOOTH-PASTE

பவுடர் வேண்டுமானால் மார்கோசீல் நீம் பல் பவுடரை உபயோகிக்கவும்.

கல்கத்தா கெமிக்கல்



## அவதியே ஐந்துமணி வண்டியே

(7-ம் பக்கத் தொடர்ச்சி.)

திருப்தியாகச் சாப்பிட்டு விட்டு, படுக்கையில் படுத்தேன். ஐந்து நிமிஷம் கூட கடந்திருக்கவில்லைபோன்று தோன்றியது. கிளம்பி விட்டது. அந்த பாண்ட் அலாரம்! மூன்று தடவை தலையைத் தூக்கித்தூக்கப் பார்த்தேன், முடியவேயில்லை. போர்வையைத் தள்ளப்பார்த்தேன், அடடா, கைகள் பஞ்சுபோல் துவண்டு உடம்போடு ஒட்டிக் கொண்டனவேயன்றி உயரவே ஸம்மதிக்கவில்லை அலாரத்தை நிறுத்திவிட்டால் போதும், அதுதான் எப்படி? எதையாவது அதன் மீது விட்டெறிந்து அதன் வாயை மூடவேண்டும். தலைமாட்டில் ஒருபெட்டி சிகரெட் (லீலா ஊரிலில்லையல்லவா) 600 பக்கங்கள் கொண்டு காலிகோ பையிண்ட் செய்யப்பட்ட ஒரு நவீனம், வெண்கல டம்ளர் இவையிருந்தன. குறிபார்த்து டம்ளரை வீசினேன். கடிகாரம் ஒரு காலில் சாய்ந்தது, டம்ளர் கீழே விழுந்து 'கண்' என்ற சப்தத்துடன் இரண்டாக உடைந்தது. நடராஜாவின் ஆனந்தத் தாண்டவத்தில் அலாரம் பாட்டை நிறுத்தாமல் பாடிக் கொண்டிருந்தது. மர சிகரெட் பெட்டியை வீசினேன். கடிகாரத்தின் பின்புறமிருந்த பீங்கான் நாயை (லீலாவின் செல்வம், அந்த ஆந்தைக் கண்கள் மீது அவளுக்கு அளவில்லாப் பிரியம்) கீழே தள்ளித் தவிடு பொடியாக்கிவிட்டது. மூன்றுவது பாணமான புஸ்தகம், ஜன்னல் கண்ணாடிக் கதவை நொருக்கிக் கொண்டு, கதிரவன் இளம் ஒளியை அனுபவிக்க தோட்டத்திற்குச் சென்று விட்டது.

"ஐயோ, எழுந்திருக்கத் தான் வேண்டும் போலிருக்கிறதே' என்று பெருமூச்செறிந்தேன். விடியற்கால ரயில் வண்டியை ஏற்படுத்தி நடத்தி வரும் கம்பெனிக்காரர்களை மனமாற சபித்தேன். மனித வாழ்க்கைக்கு இன்னுயிர் தோழியான நித்ராதேவியை காதலிப்பதை விடுத்து மனிதன் செய்யும் தொழில் தான் என்ன? மறுபடியும் சிரமப்பட்டு தலையைத் தூக்கிப் பார்த்தேன். யார் செய்த புண்ணியமோ, கதவைத் திறந்து கொண்டு பால்காரக் குப்பன் பிரஸன்னமானன்.

"குப்பா, உனக்கு சிரமம் கொடுக்காமல் நானே நன்ருக விழித்துக்கொண்டு விட்டேனடா. இந்தா, பாலை இப்படி வைத்துவிட்டு, அந்த கடிகார முள்ளைக் கொஞ்சம் அந்தண்டை தள்ளிவிட்டுப் போய் விடடா. இதோ எழுந்து விட்டேன் நான்"

அந்த சப்த பைசாசத்தின் வாயும் பூட்டப்பட்டது. குப்பனும் வெளியே சென்ருன். போர்வையை நன்ருக இழுத்து மூ, க்கொண்டு ஆனந்தமாக தூங்கலானேன்.

* * * *




இவ்வளவு நேர்த்தியான கூந்தல் ஆரோக்கியமான தலையினின்றுமே வளருகிறது.

ஜெய் கூந்தல் தைலமும், லோஷனும் அழகிய புட்டிகளில் கிடைக்கின்றன. லோஷன் ரோமக்கால்களுக்கு உயிரூட்டி, கூந்தலுக்கு ஆரோக்கிய வளர்ச்சியைத் தருகிறது. கூந்தல் தைலம் தலை வறட்சியைத் தணிப்பதில் சிறந்தது.



ஜெய் பிரிலியண்டைன்



இது நவீன தயாரிப்பு; பல வகை டப்பிகளில் கிடைக்கும். இதர டாம்கோ கூந்தல் தயாரிப்புகள்: ஜெய் கூந்தல் தைலம், லோஷன் & பிரிலியண்டைன்ய வாசனை மிகுந்த கூந்தல் டானிக். லைம்ஸ் & கிளிஸரின்.

டாம்கோ விற்பனை இலாகா. 91 A, வானியர்தெரு, மதராஸ்

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெ..,

டாடாபுரம் & பம்பாய். (T H 411 A)



துணமுற்றது மலிவுற்றது தீங்கற்றது

"நஞ்சன்கூட பல்பொடி"

ஹைகோர்ட் உரிமை தீர்ப்பு பெற்றது

சாதாரணம் புதுபாக்கெட் 10டஸ்.பெடியேட்

பாலகூஸ் ஜிஞ்சர் கூலாயில் ஜவரேக் ...மகாதவஜ

சோல் ஏஜண்ட்ஸ்: யூனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதராஸ்.

(வைத்தியர்களுக்கு மட்டும் பஸ்பங்கள் விற்கிறேம்.)








குழந்தைகளின் வயிற்று ஜுரக் கட்டிகளை

சந்தேகமின்றி சமனப்படுத்துவது

பால சஞ்சீவினி

இதுவேதான்

உண்மையான அசல் விஜயநகரம் மருந்து

விஜயநகர சமஸ்தான வைத்திய பரம்பரை பிள்ளா குடும்பத்தாரால் தயார் செய்யப்பட்டது.

Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு பிரதர், விஜயநகரம்.

மதராஸ் பிராஞ்சு: 98-99, பிராடீஸ் ரோட், மைலாப்பூர்.

(ராமகிருஷ்ண மடம் எதிர்.)



Tele:—"SIMILICURE" Box 643 CAL.

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.

Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.



ஸ்ரீமான்
சே. கோவிந்தாச்சாரி.



ஸ்ரீமான் எம். ஸிடி. எம்.
சிதம்பரம் செட்டியார்.

# கண்ணோட்டம் பிரமுகர்கள்

## ராஜாங்க சபையின் புதிய அங்கத்தினர்கள்



ஸ்ரீமான் நாராயணதாஸ்
கிர்தர்தாஸ்.



ஸ்ரீமான் வி. ராமதாஸ்
பந்துலு



ஜனாப் சையத் முகம்மது
பாஷா.



சமீபத்தில் இவருக்கு 'வித்வத் சிரோமணி' பட்டமும், பதக்கமும் கல்கத்தா தென்னிந்திய வாஸிகளால் அளிக்கப்பட்டது. ஸ்ரீ உபய வேதாந்த வித்வான் கடாதூர் கிருஷ்ணமாச்சாரிய ஸ்வாமிகள்.



பிரிட்டன் பாதுகாப்புப் படைகளுக்கு உணவுகளைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் புதிய மந்திரி மிஸ்டர் எச். எம். பிரெஞ்ச் இந்த உத்தியோகம் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.



"பிஸாரோ" என்ற நாடகத்தில் கோராவாக நடிக்கும் ஸ்ரீமதி எஸ். ஜானகி அம்மாள். இவர் சென்னை சர்வகலாசாலையில் சங்கீத டிப்ளோமா பெற்றவர்.

# விருக்ஷங்களும் அவற்றின் உபயோகமும்

——[ ० ]——

"விளம்பி"

உலகத்தைப் பலதுறைகளிலும் ஆராய்ச்சி செய்யும் இக்காலத்தில், நம்மைச் சூழ்ந்துள்ள அநேக வஸ்துக்களை ஆராயும் ஆற்றல் வெகு சிலருக்குத்தானுண்டு. அதிலும் நம் கண்ணெதிரே நிற்கும் அநேக இயற்கை வனப்புகளை, ஒவ்வொரு நிமிஷமும் சலிக்காது பார்த்துக்கொண்டிருந்தும் அவைகளைப் பற்றிச் சிறிது நேரம் சிந்திக்கவாவது, அதன் மூலகாரணத்தை அறிய விரும்பவாவது, மனம் இடங்கொடுப்பதில்லை நிம்மதியான வாழ்வு மாறி, பொறுமை வாழ்வு நம்மைச் சூழ்ந்துள்ளது.

இயற்கையில் நமக்குக் கிடைத்து வரும், உணவுப் பொருள், நிலக்கரி, எண்ணெய். தண்ணீர், இவைகள் காலக்கிரமத்தில் ஜனக்கூட்டத்திற்குப் போதாமல் குறைந்துவிடும் எனப் பயப்பட்டு வந்த சில அதீதவாதிகள் ஓரோர் சமயம் ஐரோப்பாவில் தோன்றியதுண்டு. தெய்வ நம்பிக்கையற்றவருக்கு இம்மாதிரி பீதி உண்டாவது சகஜமே.

இந்த முதிர்ந்த நாகரீக காலத்தில் மனிதன் விரும்பும் ஒவ்வொரு ஆபாச விருப்பத்தையும் இயற்கை சலியாது கொடுத்துக்கொண்டே வருகிறது. இந்த அகண்டமான உக்கிரான அறையில், எல்லோருக்கும் எல்லாப் பதார்த்தங்களும் கிடைக்கும். உயிர் வாழ்வதற்கு அவசியமாயுள்ள அன்னபானதிகள் முதல் கள்ளத்தனமான பேராசை சாதனங்கள் முடிய, எல்லாவற்றையும் தெய்வம் கொடுத்துக்கொண்டே வருகிறது. பால், மாமிசம் உடுப்பு இவற்றிற்குச் சகஜமாக எங்கும் கிடைக்கும் புல், நாணல் காரணமாயிருப்பது போல ரப்பர், பசை, சர்க்கரை, மருந்துகள் (கொடிய விஷமுள்பட) எல்லாவற்றிற்கும் மூலப்பொருளாகவுள்ளது பெரிய விருக்ஷங்களேயாகும்.

பல சாதனங்களுக்கு மூல காரணம்

இவ்விருக்ஷங்களைப் பார்த்ததும் மனிதனுக்குத் தேவையாயுள்ள எத்தனை சாதனங்களுக்கு அவை மூலகாரணமாகின்றனவென்று யாராவது எண்ணிப்பார்த்ததுண்டா? வெளிச்சம், குடியிருப்புக்கு வீடு, பிழைக்கும் வழிக்கான கருவிகள், அடுப்புக்கு நெருப்பு, அநேக சுகாசனங்கள் இவைகளை உண்டுபண்ணியிருப்பது எவை? பிரம்மாண்டமான தொழிற்சாலைகளையும், யுத்தக் கப்பல்களையும், வேகமான ரயில் ஆகாசக் கப்பல்கள் இவைகளை ஓட்டுவது எவை? இம்மரங்களின் அபூர்வ சாதனங்களை, இருகூறாகப் பிரிக்கலாம். ஒன்று தெய்வம் ஒளித்து வைத்திருந்து உதவினது; மற்றொன்று, ரஸாயன மந்திரத்தால் மனிதன் உண்டுபண்ணுவது அநேக யுகங்களுக்கு முன்னாலிருந்தே, பூமியில் புதைபட்டுப்போயிருந்த மரங்கள்தான், மேற்சொன்ன இயந்திரங்களுக்கும், கப்பல்களுக்கும் முக்கியமான ஆதாரமாக விளங்குகிறது. முன்னர் 7 கோடி டன் எடையுள்ள நிலக்கரிதான் உலகிலேயே உண்டு என அபிப்பிராயப்பட்டனர். ஆனால் 1923-ல் 130 கோடி டன் எடை எரிக்கப்பட்டிருப்பதைக் கணக்கிட்டுப் பார்த்தார்கள். மனிதன் இவ்விதம் வீணாக்கும் வேகத்தைக் காட்டிலும் இயற்கை கொடுத்துதவும் வேகம் அதிகமாகவிருக்கிறது இப்போது இன்னும் 500 வருடங்களுக்கு உலகத் தேவைக்கு நிலக்கரி கிடைத்து வருமென நிச்சயித்துப் பெரிய யுத்த முஸ்தீப்புகளைத் தீவிரமாகச் செய்து வருகின்றனர்.

நிலக்கரியும் அதன் உப பொருள்களும்

மின்சாரம் வருவதற்கு முன் துவக்கப்பட்ட இந்த நிலக்கரி முதலில் காஸ் அடுப்புக்கும் தெரு விளக்குகளுக்குமே உபயோகப்பட்டு வந்தது. ஆனால், இன்றைக்கும் அவை பெரிய பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். தார் எண்ணெயும், அம்மோனியாவும், இந்தக் காஸிலிருந்து எடுக்கப்பட்டு வியாபார வஸ்துக்களில் முதன்மையாகவிருக்கிறது. இந்தத்

(28-ம் பக்கம் பார்க்க)


# மிஸ். கமலா

தமது சுய சரிதையை கூடிய சீக்கிரம்

திரை மூலம் வெளியிடுவார்.

ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்

விவரங்களுக்கு:—

## ஸ்ரீ ராஜம் டாக்கீஸ்,

1, ராஜரத்தினம் தெரு,

கீழ்ப்பாக்கம் : : மதராஸ்.

போன்: 4230.

# "மிஸ் கமலா"

## ஸ்ரீ ராஜம் டாக்கீஸாரின் தமிழ் பேசும் படக்கதை

கமலா ஒரு கலாசாலைப் பெண் அவள் தன் சிறுவயதிலேயே பெற்றோரை இழந்துவிட்டாள். அவளை வளர்த்து வந்த சோமசந்திரரும், அவர் மனைவி மாணிக்கவல்லியும் கமலாவை மிகக் கொடுமையாக நடத்தினார்கள்.

ஒருநாள் கமலா கலாசாலையிலிருந்து வீட்டிற்கு வருகையில் உமையப்பனும் அவனுடைய சகாக்களான திருடர்களும் அவளைக் கட்டித் தூக்கிக்கொண்டுபோக முயற்சி செய்தார்கள். அப்பொழுது கண்ணப்பன் என்பவர் அவளை விடுவித்தார். அதுமுதல் கண்ணப்பனுக்கும் கமலாவுக்கும் நேசம் விருத்தியாகிக் காதலாக மாறியது.

நிற்க, வளர்ப்பு தாய் தந்தையர் கமலாவை அவள் விருப்பத்திற்கு மாறாக டாக்டர் சந்திரசேகரர் என்பவருக்கு விவாகம் செய்து கொடுக்க நிச்சயித்து ரூ 5000 அவரிடம் பெற்றுக்கொண்டார்கள். இதையறிந்த கமலா கண்ணப்பனுக்கும் சந்திரசேகரருக்கும் இரு கடிதங்கள் எழுதி தபாலில் போடும்படி தன் வீட்டு வேலைக்காரியிடம் கொடுக்க அவள் அதை மாணிக்கவல்லியிடம் கொடுத்துவிட்டாள். விவரத்தையறிந்த வளர்ப்புப் பெற்றோர்கள் அவளை முன்னிலும் அதிகமாகக் கொடுமை செய்தார்கள்.

டாக்டர் சந்திரசேகரர் தன் நண்பன் கோபுவுடன் தமது கலியாணத்தைப்பற்றிப்பேசிக்கொண்டு சந்தோஷமாயிருக்கிறார். ஆனால் கமலாவோ தான் எழுதிய கடிதங்களுக்குப் பதிலில்லையே என ஏங்கித் தவித்தாள். கலியாண தேதி நெருங்கிவிட்டது. கலியாணத்திற்கு வேண்டிய சகலவிதமான ஏற்பாடுகளும் தயாராகிவிட்டது. மறுநாள்விவாகம் கமலாவுக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. அன்றிரவு 12 மணிக்கு ஒருவருக்கும் தெரியாமல் சந்திரசேகரர் வீட்டிற்குச் சென்று அவரிடம் தான் கண்ணப்பனையே உண்மையான காதலனாய் கொண்டிருப்பதாய்விவரித்து தன்னைச்சந்திரசேகரர் மணக்க சம்மதிக்காதபடி அவரிடம் உறுதிமொழி வாங்கிக்கொண்டாள். ஆனால் அவர்கள் இருவரும் திரும்பி மோட்டாரில் கமலாவின் வீட்டிற்கு வரும் சமயம் அவ்வழியே மோட்டாரில் போய்க் கொண்டிருந்த கண்ணப்பனும் அவன் தோழன் மகாலிங்கமும் இவர்களைப் பார்த்துச் சந்தேகித்து உண்மையறியாத கண்ணப்பன் கமலாவை வெறுக்க ஆரம்பித்தான்.

மறுநாள் காலை கலியாண ஏற்பாடுகள் தடபுடலாய் நடந்துகொண்டிருக்கிறது குறித்த நேரமாகியும் மாப்பிள்ளைவரவில்லை அதற்குப்பதிலாக கோபுவின் மூலம், தான் கமலாவை மணந்து கொள்ள முடியாதென டாக்டர் செய்தி அனுப்பிவிட்டார். இவ்விதமாக கலியாணம் தடைப்பட்டுவிட்டது.

சோமசந்திரம் மாணிக்கவல்லி இருவரும் கமலாவின் மூலமாகப் பொருள் சேர்க்கலாம் என்று நினைத்து அவளை விபசாரத்திலீடுபடத் தூண்டினார்கள். அதையறிந்த கமலா நேராக போலீஸுக்குச் சென்று விபரத்தைச்சொல்லி தன்வழிக்கு அவர்கள் வராதபடி செய்துவிட்டு கண்ணப்பனிடம் சென்று உண்மையைக் கூறி மன்றாடினாள். ஆனால் கண்ணப்பன் ஒரே பிடிவாதமாய் அவளை வெறுத்தான்.

அதன் பிறகு கமலா தெருவழியே அலைந்து அலைந்து சோர்ந்துபோய் ஒரு கடைக்குச் சென்று சில 'ஜிப்ஸி' (குருவிக்காரர்கள் போன்ற ஒரு வகை ஜாதியார்) உடைகளை வாங்கிக்கொண்டிருக்கும் சமயம் அவளை முதலில் கொண்டுபோக விருந்த திருடர்கள் அவளைத் தொடர்ந்தார்கள்.

நிற்க, கண்ணப்பன் சிநேகிதன் மகாலிங்கத்தின் போதனையின் பேரில் இருவரும் வெளியூர் சென்று வசித்தனர். கமலா ஜிப்ஸி பெண்ணாக மாறி அவ்விருவரும் இருந்த விடத்திற்கே செல்லுகிறாள். ஒரு சமயம் கண்ணப்பன் ஜிப்ஸி உடையில் இருந்த கமலாவைக்கண்டு அவள் யாரென்றறியாமல் அவளிடமே காதல் கொண்டு அவளைத்தவிர வேறு யாரையும் மணம் செய்து கொள்வதில்லை என்று அவளுக்கு எழுதிக் கொடுக்கிறான். இவர்கள் பரஸ்பர காதல் நாளுக்கு நாள் விருத்தியடைந்து வந்த சமயம் கண்ணப்பன் தகப்பனார் அசௌக்யம் என்று தந்தி வர அவர் புறப்பட்டுச் செல்லுகிறார். மகாலிங்கமும் கமலாவும் தனியாய் விடப்படுகின்றனர். இப்பொழுது மறுபடியும் திருடர்கள் கமலாவைத் தூக்கிச் செல்ல முயலுகின்றனர் ஆனால் அவர்கள் வெற்றி பெறவில்லை தப்பித்துச் சென்ற கமலாவையும் மகாலிங்கத்தையும் திருடர்கள் தொடர்கின்றனர். ஆனால் அப்பொழுது டாக்டர் சந்திரசேகரர் அங்கு வந்து அவர்களைக் காப்பாற்றுகிறார்.

டாக்டரிடம், ஜிப்ஸி உடையிலிருந்த கமலா தான் யார் என்பதையும் தான் அவ்விதமிருக்கும் காரணத்தையும் சொல்ல சந்திரசேகரன் தான் நேரில் சென்று கண்ணப்பனிடம் கமலாவை ஏற்றுக்கொள்ளும்படி செய்வதாகவும் அதுவரை தன் வீட்டிலேயே இருக்கும்படியும் சொன்னார். ஆனால் டாக்டரின் தகப்பனார் அவளை வெளியே துரத்திவிட்டார்.

வெளியே வந்த கமலா தெருவில் காலிடறி கீழேவிழ அச்சமயம் அவ்விடம் காரில் வந்த ஒரு பாரிஸ்டர் அவளைப் பார்த்து தன் காரில் தூக்கித் தன் வீட்டிற்குக் கொண்டு போய் டாக்டர் சந்திரசேகரரை வரவழைத்து மருந்து கொடுக்கச் செய்தார். அச்சமயம் அங்கு நின்று கொண்டிருந்த பாரிஸ்டரின் பெண் செல்வாம்பாளைக் கண்டு டாக்டர் மோகம் கொண்டார்.

மறுநாள் மருந்துக்காகச் சந்திரசேகரரின் ஆஸ்பத்திரிக்குச் சென்ற செல்வாம்பாளை டாக்டர் காதலிப்பதாய்க் கூற அவளும் அதற்குச் சம்மதப் படுகிறாள். பிறகு பாரிஸ்டரின் வேண்டுகோளின்படி டாக்டர் பாரிஸ்டர் வீட்டுக்குச்சென்று கமலாவின் விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் சமயம்கண்ணப்பன் பாரிஸ்டர் மனைவி பத்மாவின் சகோதரன் என்பதைத்தெரிவிக்க அதைக் கேட்டு பத்மா திகைத்து அப்படியாயின் தானே கண்ணப்பனை வரவழைத்து கமலாவின் விவாகத்தை முடித்து விடுவதாகக் கூறுகிறாள்.

அதேமாதிரி மறுநாள் பாரிஸ்டர் வீட்டில் கண்ணப்பன், மகாலிங்கம், சந்திரசேகரர், கோபு, பத்மா எல்லோருமாகக் கூடி கண்ணப்பன் கமலாவைக் காதலித்துக் கைவிடுவது சரியில்லையென்று சொல்ல, கண்ணப்பன் கமலாவைக் காதலித்தது வாஸ்தவமேயென்றும் ஆனால் அவள் நடத்தை ஒழுங்கீனத்தால் தான் தான் ஒரு ஜிப்ஸிபெண்ணைக் காதலிப்பதாய்ச்சொல்லி முடிக்குமுன் கமலா அவ்விடம் வந்து தனக்குக் கண்ணப்பன் எழுதிக்கொடுத்த கடிதத்தைக்காட்டுகிறாள். கண்ணப்பன் உண்மை அறிந்து கமலா மீதுள்ள சந்தேகத்தை ஒழித்தான்.

கமலாவிற்கும் கண்ணப்பனுக்கும், டாக்டருக்கும் செல்வாம்பாளுக்கும் காதல் மணம் இனிதே நிறைவேறியது.

ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மியும், வி. எம். துரையும் முக்கிய நடிகர்கள்.

## வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா

ஜலதோஷத்தால் தூக்கம் கெட்டால்

உஷாராக விருங்கள்!



ஜலதோஷத்தால் ராத்தூக்கம் கெட்டால் உங்கள் தேக வலிவு குன்றி, ஜீவசக்தி அழியும். மூக்கு அடைபட்டுக் கிடந்தால் மிஸ்டோலை உபயோகிக்கத் தொடங்குங்கள். ஜலதோஷம் பரவாது. விரைவில் சுவாச கஷ்டம் நீங்கி, அயர்ந்து தூங்குவீர்கள். இலவச டிராப்பருடன் கூடிய ஒரு புட்டி மிஸ்டோலை இன்றே வாங்கிக்கொள்க.



Mistol
REG. TRADE MARK

ஜலதோஷத்தை முளையிலேயே கிள்ளி விடுகிறது.

M10



"மிஸ் கமலா"
என்ற தமிழ் பேசும் படத்தில் நடிக்கும்
ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மி.

# ஜப்பானின் படை வலிமை



சமீபத்தில் ஜப்பானின் எல்லாவிதப் படைகளின் அணிவகுப்பு நடைபெற்றது. சீனாவில் கலகம் ஏற்பட்டிருப்
படை வலிமையைக் காட்டும் இப்படங்கள் இப்பொழுது பிரசுரம் செய்யப்படுகின்றன. இ
பிரதிவர்தனம் செய்கிறார். வலது பக்கப் படத்தில் ஜப்பானிய கடற்படை,



துருப்புகள் சிட்டோஸ் ஆற்றைக் கடந்து செல்லுகின்றனர்.



டாங்கிகள் முள் வேலிகளையும் பள்ளங்களையும் தாண்டி

# ஜப்பானின் படைவலிமை



...ஏற்பட்டிருப்பதாலும், ஜப்பானும ஜெர்மனியும் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டிருப்பதாலும்::ஜப்பானின்
...ன்றன. இடது பக்கப் படத்தில் ஜப்பானிய அரசர் அணிவகுப்புகளைப் பார்வையிட்டுப்
...டற்படை, விமானப்படை ஆகியவை அணிவகுத்துச செல்வதைக் காணலாம்.



...தாண்டி எதிரிகளை நோக்கிச் சுடும் காட்சி.



ஷிகாரி பள்ளத்தாக்கில் துருப்புகள் அணிவகுத்துச் செல்லும் காட்சி.



இங்கிலாந்திலுள்ள இந்திய ஹை கமிஷனரான ஸர் பிரோஸ் கான்நூன சமீபத்தில் ஒரு விருந்து நடத்தினர். அதில் பிரஸன்னமாயிருந்த தென் ஆப்பிரிக்கா இந்திய ஏஜண்ட் ஜெனரலான ஸர் ராஸா ஆலியும் அவரது மனைவியும். இவர்களது விவாகத்தைப் பற்றி முன்பு எதிர்ப்பு இருந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும்.

(வலது பக்கம்) துருக்கியில் ஸ்திரீகளும் சைந்நியத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று சட்டம் ஏற்படுத்தப்பட்டு விட்டது. இதனுல் இப்பொழுது ஏராளமான ஸ்திரீகள் சைந்நியத்தில் சேர்ந்து வருகின்றனர். புதிதாகச் சேர்ந்தவர்கள் இஸ்டாம்புல்என்னுமிடத்தில் அணி வகுத்துச் சென்றகாட்சி.





ஸ்பானிய கலகத் தலைவர்களுள் ஒருவரான ஜெனரல் வாலிராவும் (மத்தியிலிருப்பவர்) அவரது தளகர்த்தர்களும்.

பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு மேலும் தர்மங்களைப் பற்றி சொல்லிக்கொண்டு வருகையில் வாக்குத் தத்தம் செய்துவிட்டால் அதன்படி நடக்க வேண்டுமென்று சொல்லி நரி, குரங்குகளின் கதையையும் சொன்னார்:— சிறிதானாலும் பெரிதானாலும் கொடுப்பதாக வாக்குத் தத்தம் செய்ததைக் கொடாமற் போகிறவன் எவனோ அவனுடைய எல்லா எண்ணங்களும் நபும்ஸகனது விவாகம் போலப் பயனற்றவையாகும். இருவர் மானிட ஜன்மத்தில் நட்பாயிருந்து பிறகு குரங்காகவும் நரியாகவும் பிறந்தனர். வேறு பிறப்பையடைந்தும் ஆங்காங்கு கலந்து பேசுவதனால் அவற்றிற்கு ஒன்றுக்கொன்று ஸ்நேகம உண்டாயிற்று. பிறகு ஒரு நாள் மயானத்தில் நரி பிணத்தைத் தின்றுகொண்டிருந்தது. முன் ஜன்மம் மறவாத குரங்கு இதைப்பார்த்து "மயானத்தில் நாற்றமெடுத்த அருவருப்பான பிணங்களைத் தின்னுகிறாயே? நீ முன்னர் மிகக் கொடிய பாபகார்யம் என்ன செய்தாயோ"? என்று கேட்டது. நரியானது தான் முன் ஜன்மத்தில் ஒரு பிராம்மணனுக்குக் கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றவில்லையென்றும், அதனால் இழிவான பிறப்பில் பிறந்திருப்பதாயும் பசித்தபோது அவ்வித உணவை உண்ணுவதாயும் சொல்லிவிட்டுக் குரங்கு என்ன பாபகார்யம் செய்து அவ்வாறு பிறந்தது என்று கேட்டது. குரங்கும் தான் பிராம்மணர்களுடைய கனிகளைத் தின்று குரங்காகப் பிறந்ததாகச் சொல்லியது.

ஆதலால் தெரிந்தவன் எப்போதும் பிராம்மணன் பொருளை எடுக்கலாகாது. அவர்கள் விஷயத்தில் எக்காலமும் பொறுத்தல் வேண்டும். சிறுவராயினும், வறிஞராயினும், அசக்தர்களாயினும் அவர்களை அவமதித்தலாகாது.

## மஹாபாரதம் - அநுசாஸன பர்வம்

# கீழ்க்குலத்தோனும் உபதேச முறையும்

---

### யாருக்கு உபதேசம் செய்யலாம்

யுதிஷ்டிரர் "ஸ்நேஹிதனது ஸ்நேகம் காரணமாகக் கீழ்க்குலத்தோனுக்கு உபதேசம் செய்கிறவனெவனோ அவனுக்குப் பாவம் உண்டாகுமா?" என்று கேட்டார். இதற்குப் பதிலாகப் பீஷ்மர் ஓர் ரிஷி சூத்ரன் கதையைச் சொன்னார்:—ஹிமய மலைச்சாரலில் பல ரிஷிகள் தங்களது ஆஸ்ரமங்களில் தபோதனர்களாய் வசித்து வந்தனர். ஒரு சமயம் ஒரு சூத்ரன் அங்கு சென்று ஒரு ரிஷியை அணுகித் தனக்கு உபதேசம் செய்யும்படி வேண்டினான். தனக்கு ஸந்யாஸம் கொடுக்கும்படியும் வேண்டிக் கொண்டான். அந்த ரிஷியானவர் சூத்ரன் ஸந்யாஸி வேஷத்தை எடுத்துக்கொண்டு அங்கிருக்கமுடியாதென்றும் வேண்டுமானால் சுஸ்ரூஷை செய்துகொண்டிருக்கலாமென்றும் சொன்னார்.

ஆனால் இதில் திருப்தியடையாத சூத்ரன் முனிவர்கள் வசித்துவரும் ஆஸ்ரமங்களுக்கு அருகிலேயே ஒரு ஆஸ்ரமத்தை அமைத்துக்கொண்டு தானும் ஒரு ரிஷியைப்போலவே தவம் செய்துகொண்டு வசித்து வந்தான்.

இவ்வாறு அவன் வெகு நாட்கள் இருந்து வருகையில் ஒரு சமயம் தற்செயலாய் ஒரு முனிவர் அவனுடைய ஆஸ்ரமத்திற்கு வந்தார். சூத்ரனும் அவரை வழிபட்டு உபசரித்தான். உபசரிப்பதிலும் மற்றும் பல விஷயங்களிலும் அவன் சில தவறுகள் செய்வதைக் கண்ட முனிவர் அவற்றைத் திருத்தி உபதேசம் செய்தார். சில காலத்திற்குப் பிறகு அந்த சூத்ர முனிவர் இறந்துபோனான். அவன் தான் செய்த புண்யகர்மத்தினால் ஒரு மஹாராஜாவின் குலத்தில சிறந்த பராக்ரமமுள்ளவனாகப் பிறந்தான். பின்னிட்டு மரணமடைந்த முனிவரும் அரசனுக்குப்பட்ட ஒரு புரோஹித குலத்தில் பிறந்தார்.


'ஜே' பெருங்காயம்




'ஜே' கோஷத்துடன்

வீடு தோறும் வரவேற்கப்படும் தேக ரக்ஷகன்

கோபால்ஜி & கம்பெனி - மதராஸ், பம்பாய், கும்பகோணம் & மதுரை.

இவ்வாறு ஒரே காலத்தில் அவ்விரண்டு குலங்களிலும் பிறந்த அந்தச் சூத்ரன் ரிஷி இருவரும் காலக்ரமத்தினால் வளர்ந்து கல்விகளில் தேர்ந்தவராயினர். ராஜபுத்ரன் தனது தகப்பனுக்குப் பிறகு ராஜாவானான். புரோஹித குலத்தில் பிறந்த அந்த ரிஷியும் அரசனுக்குப் புரோஹிதனானான். இவ்வாறிருந்து வருகையில் அரசன் புரோகிதனைப்பார்த்து அடிக்கடி சிரித்து வந்தான்.

இதைக்கண்ட புரோஹிதனுக்குக் கோபமுண்டாயிற்று. ஒரு நாள் புரோஹிதனும் அரசனிடம் அவ்வாறு சிரிக்கும் காரணத்தை வினவ அரசன் பின்வருமாறு சொல்லலானான்:—எனக்குப் பூர்வ ஜன்ம ஞாபகம் இருக்கிறது. நான் முன் ஜன்மத்தில் சூத்ரனாகப் பிறந்து தவம் செய்ய நிச்சயமுள்ளவனாயிருந்தேன். நீரும் அப்போது உக்ரமான தவமுள்ள ரிஷியாயிருந்தீர். அப்போது நீர் என்மேல் அன்பு கூர்ந்து எனக்கு அனுக்ரஹம் செய்தீர். எனக்குச் சரியான முறைகளைக் கற்பித்தீர். உமது செய்கையிலுள்ள இக்குற்றத்தினால் நீர் புரோஹிதராகப்பிறந்தீர், நான் ராஜனாகப் பிறந்தேன். காலத்தினுடைய வித்தியாஸத்தைப்பாரும். எனக்கு உபதேசம் செய்ததற்காக உமக்கு இந்தப்பலன் கிடைத்தது. இந்தக்காரணத்தினாலே தான் உம்மைப்பார்த்து நான் நகைப்பது. உம்மை அவமதிப்பதற்காக நான் நகைக்கவில்லை. நீர் ஆசாரியர். உமக்கு இந்த வித்தியாஸம் நேர்ந்ததனால் எனக்குத் துயரமாயிருக்கிறது. நீர் புரோஹிதத்தை விட்டு க்ஷேமமடைய முயலும்.

அரசனால் சொல்லப்பட்ட புரோஹிதரும் பிராயச்சித்தம் தீர்த்த யாத்திரை முதலானவற்றைச்செய்துகொண்டு முன்னிருந்த ஆஸ்ரமத்திற்கே சென்று தவம் செய்து நற்கதியடைந்தார்.

பிறகு யுதிஷ்டிரர் நன்றி மறந்தவர்களுக்குப் பிராயச்சித்தம் எது என்று கேட்டதற்குப் பீஷ்மர் சொன்னதாவது:—நன்றி மறந்தோருக்குப் பல வருஷ காலம் நரகம் தான். இந்த விஷயமாக ஒரு கதை இருக்கிறது. அதையும் சொல்லுகிறேன். முன்பு வத்ஸநாபரென்று ஒரு மஹரிஷியிருந்தார். அந்தப் பிரம்ம ரிஷி புற்று மூடும்படி யிருந்து கொண்டு தவம் செய்தார். தேவேந்திரன் அப்பொழுது பலத்த மழையைப் பெய்வித்தான். ரிஷியோ மழையைக் கவனியாது தவம் செய்து கொண்டிருந்தார். மிக்க தர்மிஷ்டராகத் தவம் செய்யும் அந்தப் பிரம்ம ரிஷியை நினைக்கும் போது தர்ம தேவதையின் இயற்கையில் அமைந்த நல்லெண்ணத்தினால் தன்னை மிகப் பெரிய எருமையாகச் செய்துகொண்டு வத்ஸநாபரைக் காப்பதற்காக நாலு கால்களாலும் மேலே நின்றது. பிறகு மழை ஓய்ந்தவுடனே வத்ஸநாபர் தவத்திலிருந்து எழுந்து பார்க்கையில் எருமையைக் கண்டார். தான் மழையில் எருமையால் காப்பாற்றப் பட்டிருப்பதைத் தெரிந்து கொண்டார். "விலங்கு ஜாதியிலேயும் தர்மத்தில் அன்புள்ளது காணப்படுவது என்னவியப்பு? ஆனால் இந்த எருமை பருத்து வன்மையுள்ளதா யிருக்கிறது. இதனிடம் மாம்ஸம் மிகுதியாயிருக்கும்" என்று நினைத்தார். மறுபடியும் அவருக்குத் தர்மத்தைப் பற்றிய எண்ணம் பின் வருமாறு உண்டாயிற்று. "நன்றி மறந்தவரும் நம்பினவனைக் கொன்றவனும் நரகமடைவார்கள். நன்றி கெட்டவர்களுக்கு ப்ராணனைவிட்டாலன்றி வேறு எவ்வகையிலும் பரிஹார மில்லை ஆதலால் நான் பிராயச்சித்தம் செய்வதற்காகப் பிராணனை விடுவேன்."

உடனே தர்மதேவதை அவர் முன் பிரஸன்னமாகி "பற்றை விட்டுதேகத்தை விடுவதனால் உம்மிடத்து சந்தோஷம் அடைந்தேன் தர்மத்தைக் காப்பாற்றுகிறவர்களனைவரும் நன்மையையும் தீமையையும் இவ்வாறே ஆலோசிப்பர். உமக்குச் சமமானவர் ஒருவருமில்லை. உம்முடைய மனம் தடைப்படவில்லை. நீர் யாதொரு கெடுதலுமின்றித் தர்மத்தை முழுவதும் நடத்தச் சக்தியுள்ளவர். நீர் பரிசுத்த ஆத்மாவாகிறீர். நீர் நீண்ட காலம் ஜீவிப்பீர்" என்று சொல்லியது. ரிஷியும் அவ்வாறே நீண்ட காலமிருந்து நற்கதியடைந்தார்.

(தொடரும்)

நம்பிக்கையான இடம்.

மார்ச் & செமூர்
மார்ஷல் ரோட், எழும்பூர் மதராஸ்.


உங்கள் குழந்தைக்கு
டோங்கரேயின்
பாலாம்ருதமும்
கோடுங்கள்

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன ?

1. டோங்கரேயின் பாலம்ருதம் குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.

2. சீடித்த தொர்தாவான இருமலையும், சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.

3. மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.

4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவி செய்கிறது

மொத்த ஏஜண்டுகள் :

ஏ. பி. பரேக், 268, சைனபஜார் ரோட்.

நஞ்சன்கூடு சதவைத்யசாலை
ச்யாவனப்ராச
சுவாச டானிக்
யுனைட்டட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்
(குழந்தைகளுக்கு நம்பிக்கையான மருந்துகள் இடம்.)

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு
[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]
குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.
குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால்
இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.
Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD.

NO MORE
GREY HAIR


வெள்ளையாயிருக்கும் கூந்தலை இயற்கை அழகுடனிருக்கச் செய்யுங்கள்—கேஷ்கலா கூந்தலுக்குப் புதிய அழகைக் கொடுக்கும்—கேஷ்கலாவையே உபயோகித்து உண்மையை உணர்வீர்.
KESHKALA
RESTORES NATURAL TINT
Obtainable from:—
அப்பா & கம்பெனி, சைனபஜார் ரோட், மதராஸ் வி. ஜே சேத், பந்தர் தெரு, மதராஸ். டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, டெங்களூர் சிடி & கண்டோன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-பி-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொழும்பு.
Further Inquiries to:—
KESHKALA CHEMICAL CO., P.O. Box No.(M)5506. Bombay 14



கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோயிலும் குளமும். ஒரு புதிய தோற்றம்.

# புஸ்தக விமர்சம்

## குமுதினி

[கவி ரவீந்திரநாத டாகூர் எழுதியது—மொழி பெயர்த்தவர் ஸ்ரீமதி ஸ்ரீரங்கநாயகி (பிரசுராலயம் மதராஸ் லாஜர்னல் பிரஸ். விலை ரூபாய். 1-8-0)]

கவி ரவீந்திரநாத டாகூர் உலகெங்கும் பிரசித்திபெற்றவர். இலக்கியத்துறையில் இவருக்கிருந்த மேன்மைபற்றி இவருக்கு, "நோபல் பரிசு" பல வருஷங்களுக்கு முன்பு அளிக்கப்பட்டது. இவருடைய கவிதைகளும் கற்பனைகளும் மகோன்னதமானவை; அறிஞர்களே அவற்றின் ரஸத்தை நன்கு உட்கொள்ளக்கூடும். கவி ரவீந்திரரின் பெருமைக்கு மேற் குறிப்பிக்கப்பட்ட, "குமுதினி"யும் ஒரு அத்தாக்ஷியாகும். மனிதன் தனது வாழ்க்கையின் பூரண பலனைக் காதலின் மூலம் அடைகிறுன் என்பதே இந்த நவீனத்தின் முக்கியாம்சமாகும். காதல், பிரேமை, அன்பு ஆகிய சூக்ஷ்மமான அனுபவங்களை இக்கற்பனைக் கதையில் நூலாசிரியர் வெகு அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். சகோதரனும் சகோதரியும் ஒருவரோடொருவர் மிக்க அன்பு பூண்டொழுகுகின்றனர். புருஷனும் பத்தினியும் காதல் என்பதையறியாமல் ஒரு நிர்ப்பந்தமான வாழ்க்கையில் ஈடுபடுகின்றனர். களங்கமற்ற குமுதினி சாந்தம் நிறைந்து நற்குணங்கள் மிகுந்த விப்ரதாஸுடன் ஒற்றுமையாக வாழ்கின்றுள். ஆனல் பணத்தையே எப்போதும் பெரிதாகக் கருதி பந்துக்களையும் கேவலமாகக் கருதும் மதுசூதனனிடம் வேற்றுமை ஸ்வரூபத்தைத் தழுவுகிறுள். உள்ளத்தில் அவள் கணவனைக் காதலிக்காவிட்டாலும் பூஜை செய்வதில் குறைவதில்லை இப்புத்தகம் ஸ்திரீ ஸ்வபாவங்களைக் காட்டுவதுடன் வாழ்க்கை அந்தஸ்துக்களில் ஏற்படும் வித்யாஸங்கள் எவ்வளவு தூரம் துயரை விளைவிக்கின்றன என்பதையும் வெளியாக்குகின்றது. கதையின் முடிவானது எதிர்பார்க்கக்கூடிய விதமாக இல்லை. சில சந்தர்ப்பங்களில் காணப்படும் விஷயங்கள் நாம் கவி ரவீந்திரரின் உயர் கற்பனை சக்தியிலிருந்து விரும் பத்தகுந்த விதமாக இல்லை. பொதுவாக இக்கதை வங்காளிகளின் பழக்க வழக்கங்களைப் பற்றி அறிய விரும்புவோர்களுக்கு விசேஷ திருப்தியைக் கொடுக்கும். மொழி பெயர்ப்பிக்கப்பட்டிருக்கிற விதம ரஸமாக இருக்கிறது. பிற பாஷைகளில் இருக்கும் உயர்ந்த நூல்களை தமிழில் மொழிபெயர்ப்பது, தமிழ்மொழி வளர்ச்சிக்கும், இலக்கிய அபிவிருத்திக்கும் நன்கு உதவும்

* * * *

## மனோரஞ்சனி

(மாதாந்தர தமிழ் நாவல் பத்திரிகை. பிரசுரதாரகள்: எம் எஸ் ராமுலு அண்டுகோ, எஸ்பிளனேட், சென்னை தனிப்பிரதி அணு 2.]

இந்த நாவல் பத்திரிகையில் ஸ்ரீமதி செய்யூர் எஸ் சாரநாயகி அம்மாள் எழுதிவரும் இராஜலக்ஷ்மி என்ற தொடர் கதையைப் பற்றி அவ்வப்பொழுது நாம் எழுதி வந்திருக்கிறோம். இப்பொழுது கதை முடியும் தருவாயிலிருக்கிறது. நமக்குக் கிடைத்துள்ள நவம்பர் மாத இதழில் இராஜகோபால அய்யங்கார் தமது இரண்டாவது விவாகத்திற்குப் பிறகு தாம் முன்னிருந்தபடி நடக்க வாரம்பிக்கிறுர். சிலமாதங்களில் ஜெயலக்ஷ்மி கர்ப்பவதியாவதும், தங்கம் தனது சகோதரனுடன் இராஜகோபால அய்யங்கார் வீட்டுக்கு வந்து விடுவதும், ஜெயலக்ஷ்மிக்குப் புருஷப் பிரஜை ஜனிக்கவும் தங்கத்திற்குப் பொருமைத்தீ கொழுந்துவிட்டு எரியவும், அதைத் தங்கத்தின் சகோதரன் குப்புசாமி அய்யங்கார் உபயோகித்துக் கொண்டு குழந்தையைக் கொன்றுவிட ஏற்பாடு செய்வதும், ஆனல் அதற்காக நியமிக்கப்பட்ட முனியன் குழந்தையை ஸ்ரீரங்கத்தில் முன்பு உலகத்தையே வெறுத்துச் சென்ற இராமநு ஜய்யங்கார் கோதையம்மாள் காலடியில் விட்டுவிடுவதும் இந்த இதழில் வந்துள்ள கதையின் சுருக்கம். முன் கோபத்தால் செய்யப்படும் காரியம் எத்தகைய தீங்கை விளைவிக்கிறதென்பதையும், ஒவ்வொருவருக்குமுள்ள மனச்சாக்ஷியென்பது மகத்தான தீங்கு செய்யப்புகினும் அதைச் சிறிதாவது மாற்ற வல்லதாகவிருப்பதென்பதையும் கதையின் இப்பாகம் நன்கு வெளிப்படுத்துகிறது.

* * * *

## இந்திய ஸ்திரீகளின் கடமையும் முன்னேற்றமும்

நாகபுரி தென்னிந்திய ஸ்திரீகள் சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட போது ஸ்ரீமதி எஸ். ஜயலக்ஷ்மி அம்மாள் செய்த உபன்யாஸங்கள்.


**Drawing Materials**

To Students & Engineers

Drawing Papers, Cloth, Pins, Pencils, Erasers, Water & Oil Colours, Canvas, T. Squares, Brushes etc, etc. are always in Stock. Ask for Quotation.

**P. R. NATHAM & Co.,** High Class Stationers.

Phone 2305 China Bazaar Road, MADRAS.




# நாட்டு நடப்பு - சித்திரக் கண்ணாடி



INSTRUMENT OF ABDICATION

I, Edward the Eighth, of Great Britain, Ireland, and the British Dominions beyond the Seas, King, Emperor of India, do hereby declare My irrevocable determination to renounce the Throne for Myself and for My descendants, and My desire that effect should be given to this Instrument of Abdication immediately.

In token whereof I have hereunto set My hand this tenth day of December, nineteen hundred and thirty six, in the presence of the witnesses whose signatures are subscribed.

SIGNED AT
FORT BELVEDERE
IN THE PRESENCE
OF

Edward RI

Albert

Henry.

George.

மாஜிமன்னர் எட்வர்டின் பட்டத்துறவு சாஸனம்.

(வலது பக்கம்) பம்பாயில் ரம்ஸான் தொழுகை.



ருஷ்ய கடற்படைத் தலைவரான அட்மிரல் ஆர்லாப் "உலகத்திலேயே முதன்மையான கடற்படையை ருஷ்யா தயாரிக்கும்" என்று பேசியபோது அதை ஆமோதித்து ஸ்டாலினும் யுத்த கமிஷனர் போரோஷிலாவும் கைதட்டியபோது எடுத்த படம்.





இங்கிலாந்தில் ஒரே வருஷத்தில் மூன்று அரசர்கள். மாஜி ஐந்தாம் ஜார்ஜ் சென்ற ஜனவரி 21-ந்தேதி காலமானார். மாஜி மன்னர் எட்டாவது எட்வர்ட் சமீபத்தில் பட்டத்தைத் துறந்தார். ஆறாவது ஜார்ஜ் பட்டமேற்றுக்கொண்டார்.



சென்னைக்கு விஜயம் செய்த ரயில்வே விசாரணைக் கமிட்டி அங்கத்தினர்கள் ஸெண்ட்ரல ஸ்டேஷனில் மூன்றாவது வகுப்பு வண்டிகளைப் பார்வையிட்டபோது எடுத்த படம்.



காரைக்குடிக்கு சர்தார்படேல் விஜயம் செய்தபோது எடுத்த படம்.

## பிரபஞ்ச வர்த்தமானம்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார்களாம். இப்பிரமுகர்களில் இலக்கியத்திற்காக நோபல் பரிசுபெற்றவரும் ஒருவர். ஜெர்மனியில் இவர்களுக்குள்ள சொத்துக்களை யெல்லாம் பறிமுதல் செய்யப்படும்.

* * * *

### பட்டத்துறவு ரகசியம்

மாஜி மன்னர் பட்டத்துறவு சம்பந்தமாக பின் கண்ட ரஸமான விஷயங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன.

பட்ட மகிஷிக்குள்ள உரிமைகளின்றி ஒரு மங்கையை மன்னர் மணம்புரிந்து கொள்ளலாமென முதலில் ஸர் ஜான் ஸைமனே எட்வர்டுக்கு யோசனை கூறியதாகத் தெரிகிறது. இந்த யோசனையை மந்திரி சபை அங்கிகரிக்கக் கூடுமென்று ஸர் ஸைமன் மாஜி மன்னரிடம் தெரிவித்தாராம்.

எனவேதான் மன்னர் இந்த யோசனையை மந்திரி சபை முன் சமர்ப்பிக்குமாறு மிஸ்டர் பால்டுவினைக் கேட்டுக் கொண்டார். இந்த யோசனையைப்பற்றி, அதே சமயத்தில் குடியேற்றநாட்டுப் பிரதம மந்திரிகளின் அபிப்பிராயத்தையும் கேட்கவேண்டியது அவசியமென மிஸ்டர் பால்டுவின் எடுத்துக் காட்டுவாரென்று மாஜி மன்னர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

* * * *

### "மிஸஸ் ஸிம்ஸன் விவாக ரத்து விஷயம்"

மிஸஸ் ஸிம்ஸன் விவாக ரத்து வழக்கு சம்பந்தமாக, விவாக ரத்தை ஆட்சேபிக்கும் முறையில் ஒருவர் மனுக் கொடுத்திருந்த செய்தி ஏற்கனவே வெளியாகியிருக்கிறது.

மிஸஸ் ஸிம்ஸன் விவாக ரத்து பெற்று எட்வர்டை மணந்து கொள்வதைத் தடுப்பதன் மூலம் ராஜீய நெருக்கடி தீரச் செய்ய வேண்டுமென்பதே அம்மனுதாரின் நோக்கம்.

ஆனால் இதற்குள் எட்வர்டு பட்டத்தைத் துறந்து வெளிநாடு சென்று விட்டாராதலின் அம்மனுதார் தமது மனு விஷயமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்போவதில்லை.

* * * *

### சீனாவில் உள்நாட்டுக்கலகம்

நாங்கிங் சர்க்காருக்கு விரோதமாகத் துவங்கியிருக்கும் கலகம் லாங்தோவுக்கும் பரவியிருக்கிறது. மிஸ்டர் டபிள்யு. எச். டொனால்டு என்ற ஆஸ்திரேலியர் மார்ஷல் சியாங் கெய்ஷெக், மார்ஷல் சாங்ஸுலாங் இவ்விருவருக்கும் நண்பராவார். பிரதம மந்திரியான ஜெனரல் சியாங்கெய் ஷெக்கை விடுவிக்கும் கருத்துடன் மார்ஷல் சாங்ஸுலாங்குடன் சமரசப் பேச்சு நடத்தும் பொருட்டு அவ்வாஸ்திரேலியர் ஸியான்புவுக்குச் சென்றிருந்தார். இப்பொழுது அவர் லோயாங்குக்குத் திரும்பி வந்துவிட்டதிலிருந்தும், சாங்ஸுலாங்கைப் பணிய வைக்கும் பொருட்டு யுத்த மந்திரியின் தலைமையில் ஒரு படையை அனுப்பவேண்டுமென்றும் சர்க்கார் தீர்மானித்திருப்பதிலிருந்து சமரசப் பேச்சு கைவிடப்பட்டு விட்டதெனத் தெரிகிறது.

சீன சர்க்கார் படைக்கும் ஷென்ஸி கலகக்காரர்களுக்கும் கடுமையான யுத்தம் நடந்ததின்பேரில் சர்க்கார் படை ஸியான்புவிலிருந்து கிழக்கே ஐம்பது மைல் தூரத்திலுள்ள வாஸீனைக் கைப்பற்றிவிட்டதாகத் தெரிகிறது. ஷென்ஸி மாகாண கவர்னரின் மனைவியான சோஹிட்ஸியைக் கலகக்காரர்கள் கொலை செய்துவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. ஷென்ஸி கலகத்தில் ருஷ்ய சர்க்கார் சம்பந்தப்பட்டிருந்ததாக முன்பு ஒருசெய்தி வெளியாகியிருந்தது. இப்பொழுது இதற்குச் சிறிதும் ஆதாரமில்லையென்று ஸோவியத் சர்க்கார் அறிவித்திருக்கின்றனர்.

* * * *

### "ஹிட்லர் வந்தனம்" செய்ய மறுத்ததால் தண்டனை

சர்வதேசிய பைபிள் உபந்யாஸ சங்கத்தைச் சேர்ந்த 29 அங்கத்தினர்கள் "ஹிட்லர் வந்தனம் செய்யவும், ராணுவத்தில் சேரவும், மாரிகால உதவிக்கு நன்கொடையளிக்கவும் மறுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு ஒரு வருஷம் முதல் இரண்டு வருஷங்கள் வரை சிறைவாஸ தண்டனை விதிக்கப்பட்டது.

*

### இளவரசியின் காதல்

கரோலினா இளவரசிக்கும் 28 வயதான ஹெர் ஹெர்பர்ட் ஹார்டங் என்பவருக்கும் விவாக ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அவ்விளவரசி மாஜி கெய்ஸருடைய இரண்டாவது மனைவியின் குமாரியாவாள். ஹெர் ஹெர்பர்ட் ஹார்டங் என்பவர் லியுனா ரஸாயனத் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளரில் ஒருவர்.

ஒரு வருஷத்துக்கு முன் அவ்விளவரசி மாஜி கெய்ஸரின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்த ஜார்ஜ் மார்டின் என்பவரை விவாகம் செய்துகொள்ளப் போவதாக ஒரு வதந்தி பரவியது. இதன்பேரில் அவ்விளவரசியை அவருடைய தாயார் நெடுநாள் காவலில் வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

* * * *

மாதிரிப்பிரதி இனாம் 'கலியுகம்' ஆபீஸ் சென்னை

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

**மஹா பில்வாதி லேகியம்**



(Sastriar in Govt. Medical dress)

பித்தவாயு, கில் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத் துவேஷம், அஜீர்ணம், மலச்சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

**ஆனந்த பற்பொடி**

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

**ஆனந்த பற்பசை**

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு எங்கும் கிடைக்கும்.

திவான் ஸர் C. P. ராமஸ்வாமி அய்யர், K. C. I. E. திருவாங்கூர் சமஸ்தானம், அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரி, D. V. S. அவர்கள் ஆயுர்வேத சாஸ்திர ரீதியாய் அநேக வருஷங்களாக ஜயத்துடன் வைத்தியம் செய்து கொண்டு வருகிறார். எனது குடும்பத்திலுள்ள அனைவர்களாலும் இவரால் தயார் செய்யப்பட்ட அநேக மருந்துகள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆதலால் மேற்படி வைத்தியரத்ன அவர்களுடைய விடாமுயற்சிக்கும் அவருடைய மருந்துகளின் யோக வீரியங்களுக்கும் அத்தாக்ஷி செய்வதற்கு நான் அத்யந்தம் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன்."

திவான் ஸர் R. K. ஷண்முகம் செட்டியார், K. C. I. E. கோச்சி சமஸ்தானம், அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரிகளுடைய ஆனந்த பற்பொடியை நான் உபயோகித்து இருக்கிறேன். அப்பற்பொடி உபயோகிப்பதற்கு அத்யந்தம் ஆனந்தகரமாயும் கீர்த்தியாகவும் இருப்பதை நான் அறிந்தேன். ஸ்ரீமான் சாஸ்திரிகளுடைய முயற்சிக்கு நான் அபிவிருத்தியைக் கோருகிறேன்."

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,**

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்



சென்னையில் நடைபெற்ற சென்னை மாகாண ஸினிமா மகா நாட்டைத் திறந்து வைத்த மிஸஸ் ஏனுக்ஷி ராமராவ் செண்ட்ரல் ஸ்டேஷனில் வரவேற்கப்பட்ட காட்சி.

## விருக்ஷங்களும் அவற்றின் உபயோகமும்

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலில், ஒரு அணுகூட எவ்விடத்திலும் சேதப்படுவதில்லை. பார்வைக்கு விகாரமாயும், பசையோடு கூடின இந்தத் தார் எண்ணெயிலிருந்து என்னென்ன பொருள்கள் கிடைக்கக்கூடும்? நகர அசுத்தங்களையும் சாக்கடைகளையும் சுத்தஞ் செய்வதற்கு, உபயோகப்படும் நெடியுள்ள Disinfectant மருந்து, வெகு ரமணியமான வாசனை அத்தர்கள், கண்ணைக் கவரக்கூடிய விதம் விதமான சாயங்கள், அழுக்கைப் போக்கும் சாரங்கள், அதிக இனிப்பான சர்க்கரை பெரிய கோட்டைகளையும் தூள் தூளாக்கும் வெடி மருந்து எல்லாவற்றையும் இதுதான் உண்டாக்குகிறது.

இத்துடன் ஜெர்மனி முதலான தேசங்களில் இன்னும் அநேக பொருள்களை நிலக்கரியிலிருந்து எடுக்கிறார்கள். நிலக்கரியை அடுப்பில் வைத்து எரிக்க முதலில் வெளிவரும் தைலம் பென்சால், தோலுஆல். இவைகளே முக்கினதிலிருந்துதான் மோட்டார் ஸ்பிரிட்டும், விதவிதமான சாயங்களும் செய்யப்படுகின்றன. பிந்தின வஸ்துவிலிருந்து பெரிய வியாபாரச் சரக்கான பென்ஸிக் ஆஸிட் எனும் கொடிய வெடி மருந்தும் அநேக சாயங்களுக்கு மூலப்பொருளான பிக்ரிக் ஆஸிட் என்ற விஷமும், சர்க்கரையைக் காட்டிலும் 300 மடங்கு அதிகச்சுவையுள்ள சாக்கரைன் என்ற வஸ்துவும், உண்டாவதைக்கவனித்தால், இயற்கையின் ஆச்சரியத்தையும், ரஸாயன ஆராய்ச்சியின் மேம்பாட்டையும் வியக்காமலிருக்க முடியுமா?

இதற்குப் பிறகு கார்பாலிக் எண்ணெய் வெளிவருகிறது. இந்தத் தைலம் மருந்து சோப்புக்களுக்கும், வாசனைகள் உற்பத்திக்கும் மிகுதியாக உபயோகப்படுகிறது. பின்னர், முறையே, தெருக்களில் விற்கப்படும் நாப்தலைன் என்னும் வெண்மை நிறமுள்ள வஸ்துவும் எழுதும் பென்ஸிலுக்கு வேண்டிய கருப்புவஸ்துவான கரியும் எடுக்கிறார்கள். கடைசியாக மீதியுள்ள எரிந்துபோன அழுக்கையும் அதிகம் விலையுள்ள சரக்காகமாற்றி விடுகின்றனர். தண்ணீரில் நனையாத தட்டிகளும், நமது முனிசிபாலிட்டிகளில் ஏராளமாக வரவழைக்கப்படும் ரஸ்தாக்களுக்கு வேண்டிய தார் கும்பியுநதான் மீதியுள்ள அழுக்குக்குப் பிரயோஜனம். ஆகவே, மாசத்தாகிய, இந்நிலக்கரியானது, எரிக்கப்பட்டு, விளக்குகளுக்கான காஸை வெளிப்படுத்தும்வழியிலேயே, பற்பல எண்ணெய்கள் வாசனை திரவங்கள் சர்க்கரை, வெடிமருந்து, பாஷாண வகைகள் இவைகள் உற்பத்தியாகி மீதியுள்ள அழுக்கும், உயர்ந்த விலைக்கு வியாபாரமாகிவிடுகிறது. நிலக்கரியைவிட அதிலிருந்து எடுக்கப்படும் வஸ்துக்கள் அதிகமான லாபத்திற்கு விற்கப்படுவதால், நிலக்கரியை கப்பல்களுக்கும், என்ஜின்களுக்கும் உபயோகித்து வருவதைக் குறைத்துக்கொள்ள நூதன ஆராய்ச்சிகளும் நடைபெறுகின்றன.

### உயிர் மரங்கள்

இனி தற்காலத்தில் உயிர் மரங்கள் எவ்விதம் மாறுகின்றனவென்பதை கவனிப்போம். உயிரற்ற மரங்களின் உபயோகத்தைக் காட்டிலும் உயிர் மரங்கள் அதிக ஆச்சரியமான சாதனங்களை உதவுகின்றன. கத்தி முனையைக் காட்டிலும், பேனா முனைக்கு வலுவதிகம் என்பது உண்மையானால், எல்லைகளிட, காகிதம் அதிக வீரியமும் கூர்மையுமுள்ளதாகிறது. இந்நூற்றாண்டின் அபூர்வ ஆராய்ச்சிகளும், அறிவு வளர்ச்சியும், பேப்பர் என்றொரு கருவியில்லாதுபோனால் மிகவும் குறைந்துவிடும். எங்கும் வியாபித்திருக்கும் தினசரிப் பத்திரிகைகளும், மலிவான புத்தகங்களும், இன்றேல். இந்நாகரீகமே சிதைந்துவிடும். ஏன்? நாம் தினந்தோறும் பண்டங்களைச் சுற்றிவரும் பட்டிக் காகிதம் முதல், உயர்ந்த சினிமாப் படங்கள் வரையில் அநேக சாதனங்கள் மறைந்துவிடும்.

### காகித உற்பத்தி

காகித உற்பத்தியில் இருவித முறைகளுண்டு. ஆரம்பத்தில், பெரிய மரங்களைத் துண்டுகளாகச் செய்து, பட்டை நீக்கி, அநேக நாட்கள் வரை, திராவகம் நிறைந்த தொட்டிகளில் ஜீரணிக்கிறார்கள். பிறகு சந்தனம் அரைப்பதுபோல், இயந்திரங்களில் அரைத்து, சன்னமாக்கிச் சலவை செய்யப்படும். களிபோல் ஆகும் இவ்வஸ்துவைச் சுண்ணாம்பு, பசை இவைகளைச் சேர்த்து, வடிகட்டி, பெரிய சல்லடைகளில் பரப்பி ஈரம் உலர்ந்த பின், பாலாடைக்கும் மெல்லிதான பிசுக்குள்ள திரவமாகச் செய்து, சூடான நீராவி உருளைகளின் மத்தியில் அமுக்கப்பட்டு மெல்லிய பேப்பராக மாறுகிறது.

உருளைகளின் சூட்டிற்கேற்ற விதம், பலவகைப்பட்ட மிருதுவும், பளபளப்பும் ஏற்படுகிறது. பெரிய தினசரிப் பத்திரிகாலயங்களில், அச்சடிக்கும் அறைக்குள் நுழைந்தால், பிரம்மாண்டமான காகித உருளைகள் அடுக்கியிருப்பதும், அவைகள் அதிகவேகமாக தாமதமாகவே பிரிந்து, அச்சடித்துக்கொண்டு, தேவையான அளவில் துண்டிக்கப்பட்டு, தபாலளவில் அமைந்து, வாசகர் மேசைமேல், உலக சமாசாரங்களைத்தாங்கி, அடுத்த நிமிஷத்தில் வந்து விழுகின்றன. இதனை வாசிப்போர், தங்களுக்குத் தேவையான விஷயங்களை அறிந்து கொள்ளுவதோடு நில்லாமல், அந்த ஆச்சரியமான பேப்பர் சில நாட்களுக்கு முன்புவரை, பூவுந்தளிருங்கொண்டு இருந்தவை என்பதைச் சிந்திக்க வேண்டும்.

### உயிர்மரங்களின் முக்கிய உபயோகம்

உயிர் மரங்களின் முக்கியமான உபயோகம் மற்றொன்று. தார் எண்ணெயைக் காட்டிலும், வேறு அநேக சாதனங்களுக்கு மூலப்பொருளான ஒரு வஸ்துவே அது. அதற்கு ஸெலுலோஸ் (Cellulose என்று பெயர். பிராணிகள் பிராணவாயுவை சுவாசிப்பதுபோல் இந்தத் தாவரங்கள் கரியமலவாயுவைச் சுவாசிப்பதால் க்ளோரோபைல் (Chlorophyll) என்ற வஸ்து அதன் இலைக்குள் உற்பத்தியாகிறது. பச்சை நிறமுள்ள தளிர்களை வெட்டிவிட்டால், அந்தப் பசுமை நிறம் மாறி, மஞ்சள் நிறமான பழுப்பு ஏற்படுகிறது. துண்டிக்கப்பட்ட அந்தத்தளிரிலுள்ள நீரானது சூரியவெப்பத்தால் கொழுப்பாகமாறி, பிறகு சர்க்கரையாகவும், அதுவே கடைசியாக (Cellulose) ஸெலுலோஸ் என்ற ரஸாயனப் பொருளாகவுமாகிறது. உயிர் மரங்களிலிருந்து வஸ்திரத்துக்கு வேண்டிய பஞ்சும், நாரும் கிடைப்பதோடு, இந்த 'செல்லுலோஸ்' என்ற பதார்த்தத்திலிருந்து, செயற்கைப் பட்டு வஸ்திரங்களுக்கான (Rayon) 'ரேயன்' என்றதும் கிடைக்கிறது. 50 வருடங்களுக்கு முன்பு 30,000 பவுண்டு ரேயன் உற்பத்தி செய்யப்பட்டு, இப்போது 50 கோடி பவுண்டு வரை உண்டாக்கப்படுகிறது. இயற்கைப்பட்டு, ஒரு பவுண்டுக்குச் சுமார் 16,000 பட்டுப் பூச்சிகள் அழிக்கப்படுகின்றன என்பதை நினைக்குமளவில், அதே எடையுள்ள இந்தச் செயற்கைப்பட்டு அநாயாசமாகக் கிடைப்பதை, இந்தத் தாவரங்களின் ஜீவகாருண்ணியமென்றே கருத வேண்டும்.

பேப்பர் உற்பத்தியில், மரங்களைக் களிகளாக அரைத்து, சோடாக்காரத்தால் புளிக்க வைக்கப்பட்டு, விஸ்கோஸ் என்ற பசையாக மாற்றப்படுகிறது. இந்தப் பசையிலிருந்துதான், நுட்பமான இயந்திரங்களினுதவியால், நூலாக இழுக்கப்பட்டு, கண்டுகளில் சுற்றிக் கொள்ளும்வேகத்தில் காய்ந்த இறுகிக் கண்ணைக் கவரும் பளபளப்பான பட்டு நூலாக மாறிவிடுகிறது.

இன்னும், போட்டோப் படங்கள், ஸினிமாவுக்கு வேண்டிய பிலிம் செய்யக்கூடிய 'செல்லுலாய்டு'ம் வெடி மருந்துக்கு வேண்டிய துப்பாக்கி 'பஞ்சு'ம் மேற்படி பசையிலிருந்தே செய்யப்படுகின்றன.

அசல் புளு ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில்
உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல் முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப் சந்த்
175, ஷைனுபஜார் : மதராஸ்.

## தென்னிந்தியப் பிரமுகர்கள்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு உரிமையான ஸ்தானத்திலிருந்து தங்களை விலக்குவதற்காகத் தொடரப்பட்டுவரும் சூழ்ச்சிகளை மிகுந்த விசனத்துடன் அறியலானேன். இந்த சூழ்ச்சிகளைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. ஏனெனில், எனது நீடித்த அனுபவத்தினால் அவை சுதேச சமஸ்தானங்களில் சர்வ சாதாரணமாகக் காணப்படுபவை என்பதை அறிகிறேன். பிரிட்டிஷ் ரெஸிடெண்டிற்குத் தங்களது உரிமையைப்பற்றி ஸ்பஷ்டமாகவும் திட்டமாகவும் எழுதவேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயம். தாங்கள் பல வருஷங்களுக்கு முன்பு சுதேச சமஸ்தானத்தில் உத்தியோகத்தை அந்த சமஸ்தானத்தின் வேண்டுகோளுக்கிணங்கிதான் ஒப்புக்கொண்டீர்கள் என்பதையும், இவ்வாறு ஏற்றுக்கொண்டு பிரிட்டிஷ் சர்விஸைத் தியாகம் செய்ததற்கு அந்தச் சமஸ்தானத்தில் தாங்கள் சந்தர்ப்பம் வாய்க்கும்போது உயர்த்தப்படுவீர்கள் என்ற வாக்குறுதி காரணம் என்றும், பிரிட்டிஷ் சர்விஸில் இருந்திருந்தால், தாங்கள் தற்போது இருந்து வரும் பதவிக்கு மேல் உயர்ந்திருக்கக்கூடும் என்றும், புதிய சிவில் சர்விஸ் திட்டப்பிரகாரம் தாங்கள் கொச்சியில் கிட்டக்கூடிய பதவிகளுக்குமேல் உயரக்கூடும் என்றும் தாங்கள் இதுவரை வஹித்துள்ள கீழ்த்தர உத்தியோகங்களில் த்ருப்திகரமாக நடந்துகொண்டீர்கள் என்பதையும், திவான்களான சங்கராவாரியரும் வெங்கடராவும் திவான்பேஷ்கார் பதவியிலிருந்து திவானாகியவர்கள் என்பதையும், தங்களை உயர்த்துவதில் ஆக்ஷேபிக்கக்கூடிய காரணங்கள் ஒன்றும் இருக்க முடியாதென்றும், தங்களுக்கு உரித்தான அப்பதவி கிடைக்காவிட்டால் அது தங்களுக்கு அதிகமான அநீதியாகும் என்றும் தாங்கள் எழுதவேண்டும்.

### சமஸ்தானத்தில் இழைக்கப்பட்ட அநீதிகள்

இக்கடிதத்திலிருந்து இவர் எவ்வாறு திருவாங்கூர் அரசர் போன்ற பெருமக்களால் மதிக்கப்பட்டு வந்தார் என்பது தெளிவாகும். அந்நாளில் கொச்சி திவான் பதவிக்கு நியமனம் செய்யவேண்டியவர் அங்கிருந்து வந்த பிரிட்டிஷ் ரெஸிடெண்டு ஆவார். சில ரெஸிடெண்டுகள் சிலரிடம் மோஹமுற்று இத்தகைய அக்கிரமங்களுக்குக் காரணஸ்தர்களாகி வந்தனர். ஆயினும் இறுதியில் இவருக்குத் திவான் பதவி கிடைக்கவில்லை. இது இவரை மிகவாட்டியது; இது சஹிக்க வியலாத துயரை விளைவித்தது. ஆகையால் இவர் உத்தியோகத்தினின்றும் விலக எண்ணலானார். பின்பு மஹாராஜா திவான் ஆகியவர்களின் வேண்டுதலுக்கிணங்கி இவர் அங்கு தங்கினார். இதே சமயம் இவரது சம்பளம் உயர்த்தப்பட்டது. இவருக்கு வயது 40 கூட ஆகவில்லை என்றும், அடுத்த சந்தர்ப்பத்தில் இவருக்கு அப்பதவி கொடுக்கப்படும் என்றும் இவர் அறிவிக்கப்பட்டார். இதன் பின்பு மஹாராஜா காலமாகிவிட்டார். புதிய அரசர் வந்தவுடன் புதிய திவானும் வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. புதிய ராஜாவுக்கு ஆங்கிலப் பயிற்சி உண்டு. சிறிது காலத்திற்கெல்லாம் திவான் கோவிந்த மேனன் விலகும் முன் ரஜாவில் சென்றார். புதிய அரசருக்கு இவரிடம் ப்ரீதி இருந்ததுபற்றி அவர் இவரை இரண்டாவது முறை தாற்காலிகத் திவானாகவிருக்கும்படி நியமித்தார். இந்த விசையும் இவருக்கு அநீதி இழைக்கப்பட்டது. ஜில்லா ஜட்ஜியாகவிருந்த ஸ்ரீமான் ஸி. திருவேங்கடாச்சாரியார் திவானாக 1889-ல் நியமிக்கப்பட்டார். இப்புதிய திவான் இவரால் சமஸ்தானத்திற்குக் கொண்டுவரப்பட்டவர். இந்த நியமனத்தைப் பலமாக மரியாதையுடன் ஆக்ஷேபித்துவிட்டு, இவர் நீண்ட ரஜா எடுத்துக்கொண்டார். சில நெருக்கடியான சந்தர்ப்பங்கள் மிகவும் சீக்கிரத்தில் சம்பவித்ததுபற்றி, இவரை மஹாராஜாவும் திவானும் பதவியை ஒப்புக்கொள்ள உத்திரவிட்டனர்; மனமுடைந்தவராயினும் இவர் அதற்கிசைந்து சமஸ்தான சேவையைத் தயங்காமல் செய்தார். இச்சமயமும் இவரது சம்பளம் அதிகமாக்கப்பட்டது.

1877-ம் வருஷம் ஜூன் மாதம் இந்தியா மந்திரியாகவிருந்த ஸாலிஸ்பரி பிரபு கொச்சி சமஸ்தானத்தில் எடுக்கப்பட்ட ஜனனமரணக் கணக்கைச் சிலாகித்துச் சென்னைக் கவர்னர் பிரபுவுக்கு எழுதியதாவது:—"கொச்சி திவான் பேஷ்கார் தமது காரியத்தின் முடிவுகளைப்பற்றி விஸ்தாரமாகத் தயார் செய்திருக்கும் யாதாஸ்தை மிகுந்த ஆவலுடன் படித்தேன். அதைப்பற்றி நான் கொண்டுள்ள உயர்ந்த அபிமானத்தைப்பற்றித் தாங்கள் மஹாராஜாவிற்குத் தெரிவிக்க வேண்டும்." இதனால் திவான் பேஷ்காராக இவர் செய்த நற்காரியங்கள் இங்கிலாந்து தேசத்திலும் பாராட்டப்பட்டது தெரியவரும். இதே வருஷம் 1875-76-ல் கொச்சி நிர்வாஹத்தைப்பற்றி இவர் தயார் செய்த ரிபோர்ட்டானது சென்னைக் கவர்ன்மெண்டாரால் சிலாகிக்கப்பட்டது. 1886-ம் வருஷம் அக்டோபர் மாதம் 25-ம் தேதியன்று சென்னை கவர்னர் ஸர் எம். இ. கிராண்ட் டப் இவருக்குப் பின்வருமாறு எழுதினார்:- "இவ்விராஜதானியின் சென்ற ஐந்து வருஷ காலத்திய நிர்வாகத்தைப்பற்றிய என்னுடைய குறிப்பின் பிரதியொன்றை தங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். தங்களுடைய நலனைப்பற்றிக் கேட்பது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும். முக்கியமாக அமைதியானதும் நிச்சலனமானதும் சாமர்த்தியமானதும் சாதுர்யமானதுமான வழியைப் பின்பற்றி கொச்சி சமஸ்தானத்திலிருந்தும் அங்கு தாங்கள் பழகநேரிடும் ஐரோப்பியர்களிடமிருந்தும் தாங்கள் சம்பாதிக்கவிருக்கும் பொன்மொழிகளைக் கேட்டுச் சந்தோஷப்பட ஆவலுள்ளேன்." பிரிட்டிஷ் ரெஸிடெண்டுகள் பலரும் இவரது சாமர்த்தியத்தையும் வேலைத் திறமையையும் மெச்சியுள்ளார்கள்.

### மூன்றாம் முறையும் அநீதி

1893-ல் திவான் திருவேங்கடாச்சாரியார் திடீரெனக் காலமானார். இச்சமயமாவது தமக்குத் திவான் பதவி கிடைக்குமென இவர் நம்பினார். மஹாராஜாவும் இவரே திவானாக நியமிக்கப்பட்டவர் போன்ற விதமாக நடந்து கொண்டார். சாதாரணமாகத் திவான் மாளிகையில் தாற்காலிகத் திவான்கள் தங்க அனுமதிக்கப்படுவதில்லை. புதிய திவான் உடனே நியமிக்கப்படாமல் காலதாமதம் ஆகியது. வேறு ஒருவர் நியமிக்கப்படுவதாகப் பேச்சுகள் வெளிக்கிளம்பின. இறுதியில் வேறு ஒருவரின் பெயர் சென்னைக்கவர்ன்மெண்டாருக்குச் சிபார்சு செய்யப்பட்டிருப்பதாக இவர் அறிந்தார். இவர் உடனே மஹாராஜாவிற்கும் ரெஸிடெண்டிற்கும் எழுதினார். மஹாராஜா மட்டும் தாம் இவரையே சிபார்சு செய்ததாக எழுதினார். ரெஸிடெண்டும் அவ்வாறே பதில் எழுதினார். இந்தச் சமயத்தில் மூன்றாவது விசையும் தமக்கு இழைக்கப்பட்ட எதிர்பாராத இந்த அநீதி இவரைத் துன்புறுத்தியது; இதை இவர் பெருத்த அவமானமெனக் கருதினார். பிரிட்டிஷ் ரெஸிடெண்டு நேர்முறையில் செல்லாமல் தமக்குத் துரோகத்தை விளைவித்ததை இவர் உணர்ந்து, சென்னை அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். ஆயினும் பலனேற்படவில்லை. 1893-ல் ஸ்ரீமான் சுப்பிரமண்ய பிள்ளை திவானாக நியமிக்கப்பட்டவுடன் இவர் உத்தியோகத்தை விட்டு விலகும் நோக்கத்துடன் நீடித்த ரஜா எடுத்துக்கொண்டார்.

1892-ம் வருஷம் அக்டோபர் மாதக் கடைசியில் கொச்சி மஹாராஜா தாம் வட இந்தியா சுற்றுப்பிரயாணம் செய்யப்போவதால், இவர் ரஜா எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும், திரும்பி வந்தவுடன் அவ்வாறு செய்யலாம் என்றும் இவருக்கு எழுதினார். 1893-ம் வருஷம் மார்ச்சு மாதம் இவர் சிலமாத காலம் ரஜா எடுத்துக்கொண்டார். இதற்கு முன்பு சில மாதம் இவர் மஹாராஜா வட இந்தியாவில் இருந்தபோது திவான்வேலை பார்த்தார். இவர் ரஜா எடுத்துக்கொண்டவுடன் ரெஸிடெண்டு மிஸ்டர் கிரிக்கும் மஹாராஜாவும் இவ

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மஸி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

ரது உழைப்பைப் பாராட்டி எழுதினர்கள். பின்பு இவர் சமஸ்தான சர்விஸில் நிரா வெறுப்புக்கொண்டு உத்தியோகத்தைவிட்டு விலகிக்கொண்டார். இவருக்குப் பென்ஷன் கொடுக்கப்பட்டது. இவருடைய அலக்ஷியமான ஸ்வபாவமானது மஹாராஜாவிற்குப் பிடிக்கவில்லையாதலால், சில தகராறுகள் ஏற்பட்டன. தமது 50-வது வயதிலேயே இவர் இவ்வாறு விலகிக்கொண்டார்.

### "தர்ம ரத்னம்"

பின்பு இவர் திருச்சியில் வாசஞ்செய்யலானர். இவர் அநேக விஷயங்களில் சிரத்தை எடுத்துக்கொண்டார். கல்வி, மதம், சமூகம் முதலிய விஷயங்களில் இவருக்குப் பற்றுதல் அதிகம். கொச்சியில் அநேக சத்திரங்களும் தர்ம ஸ்தாபனங்களும் நன்கு நடைபெறுவதற்கு இவர் உதவினர். வேதங்கள், புராணங்கள், இதிஹாஸங்கள் ஆகியவற்றை இவர் படித்திருந்தார். கொச்சி சம்ஸ்கிருதக் கலாசாலை ஆசிரியர்களை வரவழைத்து அவர்களிடம் இவர் பாடம் படித்துத் தமது ஞானத்தை விஸ்தரிப்பது வழக்கம். ஆகவே, இவருக்குச் சம்ஸ்கிருத கிரந்தங்களில் அதிகமான தேர்ச்சி இருந்தது. விதவா புனர் விவாகப் பிரச்னை சம்பந்தமாக இவர் விதவைகள் மறுபடியும் விவாகம் செய்துகொள்ள அனுமதிக்கப்படலாம் என்றும், ஆனல் அவர்களுக்குப் பிரதான ஸ்தானம் தகாது என்பதும் இவர் கடைபிடித்த மார்க்கம். இவ்வாறு இவர் அநேக சமூக சீர்திருத்த விஷயங்களில் மிகவும் சிரேஷ்டமான மாத்யஸ்த்யத்தையே பின்பற்றி வந்தார். தீவிரமான கொள்கைகளைக் கொள்ளாமல் மிதமான வழியை இவர் போதித்துவந்தார். இவரிடம்படாடோபம் கிடையாது ஒருவரிடம் கடன் வைத்துக் கொள்வதென்றால் இவர் சஹிக்கமாட்டார். அநேக உயர் குணங்கள் இவரிடம் இருந்தன. காசி தர்ம மஹாமண்டல சபையார் இவருக்கு "தர்மாத்னம்" என்ற பிருதை அளித்தனர். இச்சபையாருக்கு இவர் விசேஷ ஆதரவு அளித்து வந்தார். மத சம்பந்தமானவைகளைப் பற்றி இவர் அடிக்கடி வியாசங்கள் எழுதி வந்தார். 1880-ல் இவர் "ஹிந்து சபை"யை ஆரம்பித்தார். தேசத்தின் பல பக்கங்களிலும் இதன் கிளைகள் நிறுவப்பட்டன. ஒரு சமயம் இச்சபை எங்கு இருக்கிறது என்று ஒருவர் குறும்பாகக் கேட்டபோது, "ஹிந்துக்கள் எங்கு கூடினலும் அங்கு இருக்கிறது அது. அதற்குக் காலம் இடம் ஆகியவை ஒன்றுமில்லை" என்று பதிலளித்தார். இவ்வாறு இவர் பலவிதமாகவும் ஹிந்துக்களின் உத்தாரணத்திற்கான முயற்சிகளைப் பின்பற்றி வந்தார்.

### பல துறைகளிலும் உதவி

சென்னை சர்வகலாசாலை செனெட் சபை மெம்பராக 1879 முதல் இவர் 40 வருஷ காலம் இருந்தார் "எப். எல்." பரீக்ஷையை ஆரம்பிப்பதில் இவர் மிக உதவினர். 1906-ல் இங்கு வேல்ஸ் இளவரசர் விஜயஞ் செய்தபோது இவர் சர்வகலா சாலையார் சம்ஸ்கிருதப் பகுதியில் முதலில் தேறுபவருக்கு வழங்குவதற்காக "வேல்ஸ் இளவரசர் தங்கப் பதக்க"த்தை அளிப்பதற்கு நிதியை ஏற்படுத்தினர். திருவல்லிக்கேணி கோஷா ஆஸ்பத்திரியிலும், திருச்சி கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியிலும் இவர் நன்கொடைகள்செய்தார். திருச்சி நேஷனல் காலேஜில் வேதாத்யயனத்திற்காக "வேத வேதாந்த ஹாலை"க் கட்டுவித்தார். சென்னை சமுத்திரக்கரையோரத்தில் ஒரு குழாய் வைக்கும்படி இவர் கார்ப்பொரேஷனைத் தூண்டினர். சாயங்கால வேளையில் அங்கு வைதீகர்களாக வருபவர்கள் சந்தியாவந்தனம் செய்வதற்கு அது அனுகூலமாகவிருக்கவேண்டும் என்பதுதான் இவரது எண்ணம். இதேமாதிரி திருச்சியிலும் கரூர் சுங்கச் சாவடிக்கருகில் இவர் ஒரு குழாயை ஏற்படுத்தினர். இது பிரயாணிகளுக்கும் ஜந்துக்களுக்கும் பெரிய நன்மையை விளைவித்தது. இவர் தினம் வெகுதூரம் நடப்பது வழக்கம், அந்திய கால பரியந்தம் இவர் வியாதிகளால் அவஸ்தைப்பட்டதில்லையாம்!

தர்மரத்ன சங்கரய்யர் 1919-ம் வருஷம் ஏப்ரல்மாதம் திருச்சியில் தமது 76-வது ஆண்டில் காலமானர். இவரது மரணத்தினல் தென்னிந்தியாவிற்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. தங்கள் பத்திரிகைகளில் இவரது வியாசங்கள் இனி தங்களுக்குக் கிடைக்கப் போவதில்லையே என்று பல பத்திரிகைகள் அச்சமயம் விசனித்து எழுதின. வாழ்க்கையில் உயர் லக்ஷியங்களைக் கடைபிடித்து எதற்கும் அஞ்சாமல் வாழ்ந்து வந்த இவரது பெருமை நம்மால் அளவிடற்கரிது. இவருடைய புத்திரர்களில் ஸ்ரீமான் கே. எஸ். சாம்பசிவ அய்யர் வெகு காலம் வக்கீல் தொழிலை நடத்தி, உயர்சட்ட சாஸ்திர புத்தகங்களை இயற்றியுள்ளார். ராஜ தர்ம ப்ரவீண திவான்பஹதூர் சந்த்ரசேகர அய்யர் மைசூர் பிரதம நீதிபதியாக விருந்தவர். ஸ்ரீமான் கே. எஸ். விசுவநாதய்யர் கலால் இலாகாவில் உயர் உத்தியோகம் வஹித்தவர். அரசர் கமிஷன் பெற்ற முதலாவது தென்னிந்தியரான ஸ்ரீமான் பஞ்சு இவருடைய பௌத்திரர் ஆவார்.


நீலகிரி

## காப்பிக்கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜும் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்குத் தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானலும் அனுப்பப்படும்:—

— வி. பி. ரெயில்வே பார்சல் மூலமாய் —

| | | |
|---|---|---|
| 10 lb எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக்கோட்டை | ரூபா | 5—2—0 |
| கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train) | | |
| 1×30 lb மூட்டை நீலகிரி "O" சைஸ் | ,, | 14—4—0 |
| 1×30 lb மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு | ,, | 12—11—0 |

இன்னும் இதர காப்பிப்பொடி டீ தினுசுகளின் விலை விவரங்களுக்கு :: :: கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :: ::

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்.,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்

T ஸ்டேன்ஸ் & Co, Ltd., கோயம்புத்தூர்.

போலிகளைக் கண்டு உஷார்!!!




அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா.






## கெற்ப சஞ்சீவி எண்ணை

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். ருதக க்ஷயம், ருதக சூலை, ருதக ஜுரம், ருதக வாய்வு, ருதக கட்டு, ருதகச் சிக்கல், ருதகத் திராக்ஷி, ருதகக் கட்டினல் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்துலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், ருதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டேடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேறு

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்திய சாலை,

146. புரசவாக்கம் ஹைரோட், சென்னை.

தலைமை ஆபீஸ், பழனி



# நவ நாகரீகம்

## திதிப்புவடை

(காசினி எழுதியது.)

* * * அன்று ஒரு நாள் நான் ஒரு சிநேகிதி வீட்டிற்குப் போயிருந்தேன். என்சிநேகிதி"நான் திதிப்புவடைபண்ணி இருக்கேன், சாப்பிட்டுப் பாருங்கள்! என்று சொன்னாள். 'முந்திரிப்பருப்புத்தானே?' என்று நான் கேட்டதற்கு, 'இல்லை; சாப்பிட்டுப் பார்த்துக் கண்டு பிடியுங்கள். ரங்கநாயகி, அம்மாமிக்குக் கொஞ்சம் டிபனும், ஒரு லோடாத் தீர்த்தமும் கொண்டு வந்து கொடு' என்று சொன்னாள்.

உடனே அவளுடைய மாட்டுப்பெண் ஒரு வெள்ளித்தட்டில் சில வடைகளையும், ஒரு டம்ளர் தீர்த்தமும் கொண்டு வந்து வைத்தாள். வடைகள் பார்வைக்குத் தங்க வர்ணமாகச் சாதாரண வடைகளை விடக்கொஞ்சம் சிறியதாக இருந்தது. வாய்க்கு மிகவும் ருசியாகவும்,மணமாகவும் இருந்தது. 'இதை எப்படிப் பண்ணினீர்கள்? குலோப்ஜான் ருசியாகவும் இருக்கிறது. முழுக்க அப்படியும் இல்லையே? நன்ருக இருக்கு' என்று நான் கேட்டேன். மைதாமாவையும், பால் கோவாவையும் நன்ருகச் சேர்த்து இழுத்து, இழுத்துப் பிசைந்து கொள்ள வேண்டும். சர்க்கரைப்பாகைக் கம்பிப் பதத்தில் காய்ச்சி இறக்கிக் கொள்ள வேண்டும். குங்குமப்பூ, ஏலக்காய் எல்லாம் பாகில் போட வேண்டும். அடுப்பில் நெய்யை நிதானமாக விட்டு, நெய் காய்ந்ததும், பிசைந்து வைத்திருக்கும் மாமொத்தையில் கொஞ்சம் எடுத்து, ஒரு நெய் தடவின இலையில் மெல்லியதாகத் தட்டிப் பொன் நிறமாகச் சுட்டு எடுத்து, பாகில் போட்டு எடுத்து வைக்க வேண்டும்' இவ்வளவுதான் என்ருள் இந்த வடைகளுக்கு நடுவில் ஓட்டை செய்வது கிடையாது. பார்வைக்கு அழகாக இருப்பதுடன், மணமாகவும், ருசியாகவும் இருக்கிறது.

* * * *

## துணிப் புடவை

'துணிப் புடவைகளுக்குப் பட்டுக் கரைகள் போட்டு விற்கிருர்களாமே? இது பார்ப்பதற்கு என்னமாக இருக்கும்?' என்று நீ கேட்டிருக்கிருய். பட்டுக் கரைகள் நெய்து விற்பதில்லையே? பட்டுக் கரைகளை இஷ்டமான துணியில் வைத்துத் தைத்துக் கொள்வதுதான் ஒரு நாகுக்காக எண்ணப்படுகிறது. இதைத்தான் நீ சொல்லுகிருய் என்று எண்ணுகிறேன். நான் இன்னும் இவ்விதம் கரைகள் நெய்த புடவைகளைப் பார்க்கவில்லை. சில நாட்களுக்கு முன் ஆனரபிள் சிவன் மனைவி இவ்விதம் ஒரு புடவை தைத்துக்கொண்டாள். பார்வைக்கு அழகாகத்தான் இருந்தது.

குழந்தைகளுக்குப் பாவாடைத் துண்டுகள் வாங்குவதற்காகக் கடைக்குச் சென்ற ஆனரபிள் சிவன் மனைவி, கரை மிகவும் அழகாக இருக்கிறது என்று எட்டு கஜம் புடவை ஒன்றை வாங்கிக்கொண்டு' வந்தாள். பாவாடைத் துண்டு ஒன்றுமே சரியான அகலத்தில் கிடைக்கவில்லை. இந்தப் புடவையின் கரை எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. விலையும் இருபது ரூபாய்கள்தான் என்று சொன்னன். வாங்கி வந்தேன்' என்ருள். பிறகு புடவையின் உடல் தனக்குப் பிடிக்கவில்லை என்று ஒரு யுக்தி செய்தாள். புடவை ஒரு கனுசுப் பச்சை நிறமாக இருந்தது. சாண் அகலத்துக்கு ஒரு விதமான அழகிய அரக்கு நிறத்தில், ஆணிச் சீர் விழுந்த



சர்வதேச ஸ்திரீகள் மகாநாட்டிற்கு இந்தியப் பிரதிநிதியாகச் சென்றிருந்த டாக்டர் காஷிபாய் நௌராங்கி பம்பாய் மாதர் கூட்டத்தில் பேசினர். (உள்படம்) டாக்டர் நௌராங்கி பேசிக்கொண்டிருக்கிருர்.

கரை போட்டிருந்தது. கரையின் வர்ணமும், ஆனிச் சிரும் மிகவும் சேர்த்தியாக இருந்தது. ஒரு தலைப்பு பூனத் தலைப்பு; மற்றொரு தலைப்பு முக்கால் முழ நீளமான அரக்குத் தலைப்பு. ஆனாபின் சிவன் மனைவி ஒரு பக்கத்துக் கரையையும், இரண்டு தலைப்பையும் கிழித்துவிட்டு, எட்டுத் துண்டில் ஒரு பாவாடையும், ஆறு துண்டில் ஒரு பாவாடையுமாகத் தைத்தாள். மெல்லிய வெள்ளைத் துணியில் ஆறு கஜம் வாங்கினாள். இதில் உடல் முழுவதும், ஆங்காங்கே, சிகப்பு நிறத்தில் மல்லி மொக்குக்கள் கட்டி இருந்தன. தலைப்புக்களையும், ஒரு பக்கம் முழுக்கக் கரையும், மற்றொரு பக்கத்திற்கு எத்தாப்பு ஓரத்துக்கு மட்டும் மீந்த இரண்டு கஜம் கரையையும் வைத்துத் தைத்தாள். கட்டிக் கொண்டதும், புடவை பார்வைக்கு மிகவும் அழகாக இருந்தது. தையல் கூலி, புடவைத் துணியின் விலை எல்லாம் உள்பட முப்பது ரூபாய்களுக்குள் (அவளுக்கு ஒரு புடவை, இரண்டு துண்டுப் பாவாடை எல்லாம்) ஆகிவிட்டது. மேலும், புடவையும், 'புது மாதிரியாக நன்றாக இருக்கே! இதை எங்கே வாங்கினீர்கள்?' என்று எல்லாரும் கேட்கும்படியாக நன்றாக இருந்தது.

துணிப் புடவைகளுக்கு வேறு நிறத் துணிகளைக் கரையாக வைத்துத் தைத்தே விற்கிறார்கள். வெள்ளைப் புடவை பல வர்ணங்கள் தோய்த்த புடவைகள் எல்லாவற்றிற்கும் இவ்விதம் தைத்து விற்கிறார்கள். இதைப் பட்டுக் கரை மாதிரியில், ஒரே பட்டியாக வைத்துத் தைப்பதில்லை. அப்ளிகே, அதாவது, வெட்டு வேலையில், பல சேர்த்தியான டிஸைகளில் தைக்கிறார்கள். பூக்கள், இலைகள், கோணங்கள், மாங்காய்கள் இன்னும் பல மாதிரிகளில் தைக்கப்பட்ட கரைகள், தலைப்புக்கள் உள்ள இந்தப் புடவைகள், பார்வைக்கு நன்றாகத்தான் இருக்கின்றன. விலையும் சாசம் தான். ஆறு கஜம் புடவையின் விலை மூன்று ரூபாய்களிலிருந்து ஐந்தாறு ரூபாய்களுக்குள் தான் இருக்கிறது. விலை மட்டமான புடவைத் துணியின் நெசவு மட்டும் அல்காவாகவே இருக்கும். ஐந்தாறு ரூபாய்கள் கொடுத்து வாங்கினால், துணியும் வழ வழப்பாக இருக்கும்.

### பரங்கிப் பழ ஹல்வா

பறங்கிப் பழ ஹல்வா செய்வதற்குப் பழம் நன்றாக முதிர்ந்து, பழுத்த பழமாக இருக்கவேண்டும். இதைத் தோலை நன்றாகச்சீவி விட்டுக் கொப்பரைத் துருவியில் துருவிக் கொள்ளவேண்டும். பிறகு, வேட்டில் வைத்து, ஒரு மணி நேரம் வேக வைத்துக் கொள்ள வேண்டும். ஒருபங்கு பழத்துக்கு இரண்டு பங்கு சர்க்கரை போடலாம். அதிகத் தித்திப்புப் பிடிக்காதவர்கள் ஒன்னரைப் பங்காகப் போட்டுக் கொள்ளலாம். சர்க்கரைப் பாகைப் பாலோ, அல்லது எலுமிச்சம் பழ ரசமோ விட்டு அழுக்கெடுத்து, முதிர் பாகு பதம் வந்ததும், வெந்து வைத்திருக்கும் பழத்தைப் போட்டுக் கடைந்து, கிளற வேண்டும். பழத்தைப் போட்டதும் இளகிய பாகு கொஞ்சம் இறுகினதும், நெய்விட்டுக் கிளறி, ஒட்டாமல் திரளும் பொழுது, ஏலப்பொடி போட்டு, இறக்கிக் கொள்ள வேண்டும். சாரப் பருப்புப் போட்டால் இந்த ஹல்வாவுக்கு நன்றாக இருக்கும். பாணலியில் பருப்பைப் போட்டு, இலேசாக வறுத்துப் பிறகு ஒரு தாம்பாளத்தில் கொட்டி, மெதுவாகத் தேய்த்துப் புடைத்தால், மேலிருக்கும் தோல் கழண்டு, பருப்பு வெள்ளையாக இருக்கும். இந்த ஹல்வாவைச் சற்றே இளம் பதத்தில் செய்து, ரொட்டி முதலியவைகளுக்கு ஜாம் மாதிரியில் உபயோகிக்கலாம்.


மீண்டும் குடும்பத்தில் சந்தோஷம்!



போன வருஷம் இந்த அம்மாள் உடம்பு துரும்பாயிருந்தாள். அதனால் மனமும் உடைந்திருந்தாள். எத்தனையோ வைத்தியம், எவ்வளவோ டானிக்...ஒன்றும் சுகப்படவில்லை.

"அம்மா, நீங்கள் அலெம்பிக் 'ஹேமோத்ராக்ஸோ மால்ட்' மூன்று மாதம் விடாது சாப்பிட்டுப் பாருங்கள்" என்றார் ஒரு டாக்டர்.

என்ன ஆச்சரியம்! உடம்பில் மளமளவெனப் புதிய ரத்தம் ஊற ஆரம்பித்தது. பசி அதிகரித்தது. தளர்ந்த நரம்புகள் வலுவடைந்தன. இன்று இந்த அம்மாள் தன் வீட்டையும் குழந்தைகளையும் நன்கு கவனிக்கின்றாள். குடும்பத்தில் மீண்டும் சந்தோஷம்!

அலெம்பிக் கெமிகல்ஸ்,
பம்பாய் - பரோடா - மதராஸ்.



ரூ. 100 இனும்

(மாந்திரீக மோதிரம்)



காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S. M.) Panchpota, BENGAL.



ரூ. 500 இனும்!

திமிர் குஷ்டமும்,
வெண்குஷ்டமும்.

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானல்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனும். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.



பத்மராஜா

இனிய துப்பறியும் தமிழ் நாவல்

விலை ரூ. 1—8—0

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.





விலை குறைவான போலி நகைகளை வாங்கி ஏமாறாதீர்கள்

நெருப்பிற்கும். திராவகத்திற்கும் உத்தரவாதமான நகை எது?

அதுதான் தியாகராஜ
தங்க நகைகள்

எமது கம்பெனி நகைகள் அநேக நாட்கள் உழைக்கக் கூடியவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இப்போது அநேக நாட்கள் கஷ்டப்பட்டு நீண்ட நாட்கள் உழைக்கக் கூடிய விதமான மெட்டல் தயார் செய்து கை தேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு நகைகளை தயார் செய்திருக்கிறோம். ஒரு தரம் வாங்கிப் பார்த்தால்தான் எங்கள் உண்மை தெரியவரும். எமது நகைகள் கண்களைக் கவரும் அழகும் வேலைப்பாடும் உள்ளவை. பல பொருட் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசுபெற்றவை. தங்கத்திற்கு சனத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டவை. அதிக செலவின்றி எல்லோரும் அழகாய் அணிந்து கொள்ளத் தகுந்த உயர்தர நகைகளும் பலரகமான கல்மாலைகளும் நயமாய் கிடைக்கும்.

கேட்டலாக் இனும.

கல்மாலை 1 பேட்டை ரூ. 5

ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஜிவல்லரி ஒர்க்ஸ்,
77. சைனபஜார் ரோட், மதராஸ்.





வழுக்கை, செம்பட்டை இள:நரைகளைத் தீர்ப்பது

கேசவர்த்தினி

ஒன்றே

மாத உபயோகத்துக்குப் போதுமான புட்டி

விலை அணா 12.

மேற்செலவு வேறு.

தயாரிப்பவர்: தென் இந்திய ரஸாயன சாலை

மயிலாப்பூர், சென்னை.

# மீன்களின் வஞ்சம்

—:[o]:—

(பாஸ்கர மகாதேவன்)

சுந்தரம் சிறு வயதிலிருந்தே நல்ல சாமர்த்தியசாலி. எந்தக் காரியத்தையும் தைரியத்துடன் முடிக்கும் ஆற்றலுள்ளவன். பெயருக்கேற்றாற்போல் 'சுந்தரன்'. அவனுக்குச் சுமார் 16, 17 வயதிருக்கலாம். வழக்கம் போல் அவன் தன் ஊரிலுள்ள குளத்திற்குக் குளிக்கச் சென்றான். ஒரு நாளுமில்லாதபடி அவன் நீந்திக்கொண்டே வெகு தூரம் சென்றுவிட்டான். அங்கே இருந்த ஒரு பெரிய மீன் அவனை அப்படியே தண்ணீருக்குள் இழுத்துக்கொண்டு போய் விட்டது. நேரம் நடுப்பகலாதலால் குளக்கரையில்



ஒருவருமில்லை. சுந்தரத்தின் பெற்றோர்கள் அவனுடைய சிறு வயதிலேயே காலமாகிவிட்டார்கள். ஆகையால் அவனைப்பற்றிக் கவலைப்படுவோர் கிடையாது.

சுந்தரம் பயத்தினால் கண்ணை மூடிக்கொண்டான். கண்ணைத் திறந்து பார்க்கும்போது தான் ஒரு சப்ரமஞ்சக் கட்டிலில் படுத்திருப்பதையும், இரண்டு மீன்கள் தன் பக்கத்தில் நின்று விசிறிக்கொண்டு உபசாரம் செய்வதையும் பார்த்துப் பிரமித்தான். அப்பொழுது சிப்பாய் உடையணிந்த ஒரு மீன் வந்து "உங்களை எங்கள் அரசர் பார்க்க வேண்டுமாம்; அழைத்துவரச் சொன்னார்" என்றது. சுந்தரத்துக்குத் தான் காண்பது கனவா, நனவா என்று தோன்றிற்று. ஒரு வேளை "நான் சென்னை 'அக்வேரிய'த்தில் இருக்கிறேனோ" என்று நினைத்துக் கொண்டான். உடனே தான் தன் ஊர் குளத்தில் குளித்தது ஞாபகம் வந்தது.

முன்னால் இரு மீன்கள் 'பராக்' சொல்லச் சுந்தரம் பின்னே நடந்து சென்றான். போகும் வழியெல்லாம் இரு வரிசைகளிலும் மீன்கள் 'வாலன்டியர்' உடைகளுடன் நின்றுகொண்டு வந்தனம் செலுத்தின. எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு வரும் சுந்தரம் மீன் அரசன் முன்



நிறுத்தப்பட்டான். உடனே மீன் அரசன் தன்பக்கத்திலிருந்த ஆசனத்தைக் காண்பித்து அதில் அமரும்படிச் சமிக்ஞை செய்தது.

பிறகு சுந்தரத்தைப் பார்த்து மச்சராஜன் பின்வருமாறு சொல்லிற்று.

"ஏ, மானுட சிரேஷ்டா! உம் வரவு நல்வரவாகுக. இன்று தான் நான் புனிதனானேன். என் எண்ணம் ஈடேறிற்று. பெயருக்கேற்ற அதிரூபசுந்தரா! கேளும் சற்று கவனமாக. எனக்கு இரண்டு புத்திரிகளிருக்கின்றனர். அவர்கள் தக்க பருவமடைந்தும் இன்னும் மணமாகாமலிருக்கின்றனர். அதற்குக் காரணம் நல்ல அழகுள்ள ஒரே புருஷனை இருவரும் மணந்துகொள்ள வேண்டுமென்று பிடிவாதம் செய்வதுதான். அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக நடக்க எனக்கு இஷ்டமில்லை. இதுகா


## செவிடு

இரைச்சல் இதர காதுக் கோளாறுகளுக்கும் கராமத் ஆயில் இணையற்ற நிவாரணி புட்டி 1-க்கு ரூ 1-4
ஏக காலத்தில் 3 புட்டிகள் வாங்கினால் தபால் சார்ஜில்லை.
குறிப்பு:—ஆங்கிலத்திலேயே கடிதமெழுத வேண்டும்.
·BALLABH & SONS
(Medalists)
Pilibhit U P.

## "ஸங்கீத அபிமானி"

சென்ற இரண்டு வருஷமாக ஸங்கீதத்துக்கென்றே நடத்தப்பட்டு வரும் ஒரு உயர்தர மாதாந்தப் பத்திரிகை
உள்நாட்டு வருடச் சந்தா ரூ. 1—8.
வெளிநாட்டு ,, ரூ. 2—0
1935-ம் வருஷத்திய காலிகோ பயிண்ட் செய்த வால்யும் விலை ரூ. 3
ஸங்கீத அபிமானி ஆபீஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

"நஞ்சன்கூடு பல்பொடி" பாக்டெரியின மற்றும் சில மருந்துகள்—
ஜவரேக ஜிஞ்சிப் பாலகஸ்
சொற்ப முதலுடன் ஊக்கமுடைய வாலிபர்கள் தபாலுடன் எழுதுக




10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண நெக்லஸ் செயின்கள்
(செயின் 1-க்கு)
ரூபாய் 5-0-0.
எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் பஞ்சவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்.
(கேட்லாக் இலவசம்)
R. S. பிரகாசம் & Co,
அலாய் கோல்டு ஜுவலர்ஸ்,
187, சைனு பஜார் ரோட், ஜி. டி
மதராஸ்

வலுவூட்டும் சிறந்த டானிக்
வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்
கிருஷ்ணராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,
மருந்து வியாபாரிகள், ஐசனுபஜார் ரோட், மதராஸ்
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

றும் அப்படிப்பட்ட ஒரு ஆண் மகனைக் கண்டுபிடிப்பதற்காக என் ஆட்களைக் குளத்தில் காவல் வைத்திருந்தேன். இன்று அவர்கள் உம்மைக் கொணர்ந்தனர் எப்படியாவது என் குமாரிகளை மணந்து கொள்ள வேண்டும்” என்று சொல்லிற்று.

இதைக் கேட்ட சுந்தரம் மிகவும் ஆச்சரியப்பட்டு இந்த மீன்களை எப்படி மணந்துகொள்வது என்று யோசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது மீன் அரசன் சுந்தரத்தை தன் அரண்மனையைச் சுற்றிக் காண்பிப்பதற்காக அழைத்துச் சென்றான். அப்படிப் பார்த்துக் கொண்டு வரும்பொழுதே இரண்டு பெண்மணிகள், தேவலோக மாதர்களோ என்று அதிசயிக்கும்படி சற்று தூரத்தில் சுந்தரத்தின் கண்ணில் தென்பட்டனர். ஆனால் அவர்கள் இவனைக் கண்டதும் இரு மீன்களாக மாறிவிட்டனர். சுந்தரம் அவர்களைக் கண்டது முதல் அவர்களை எப்படியாவது மணந்து கொள்ள வேண்டுமென்று நினைத்தான். அவன் புத்திசாலியாகையால் அவர்கள் தான் மச்சராஜனின் குமாரிகளாயிருக்க வேண்டுமென்று ஊகித்துக்கொண்டான்.

நல்ல சுப தினத்தில் மீன் அரசன் பெண்களுக்



கும், சுந்தரத்துக்கும் சிறப்பாக விவாகம் நடந்தது. இந்த அதிசயத்தைப் பார்க்க எல்லா மீன்களும் வந்திருந்தன. அன்று சுந்தரம் சந்தோஷத்தால் ஒரு அங்குலம் உயர்ந்துவிட்டான் என்றுகூடச் சொல்லலாம். எல்லா மீன்களும் மணமக்களை வாழ்த்தின.

சுந்தரம் விடை பெற்றுக்கொள்வதற்காக மீன் அரசனிடம் வந்தான். அப்பொழுது மீன் அரசன் சுந்தரத்திடம் “நீர் உமது மனைவிமார்களுடன் சௌக்கியமாய்ப் போய்வாரும். ஆனால் ஓர் முக்கியமான விஷயம். நீர் என் குமாரிகளைப்பற்றி மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். அவர்கள் தெய்வீக சக்தி பெற்றவர்கள். அவர்கள் சாதாரணமாக மனித ரூபம் பெறும் வல்லமையுள்ளவர்கள். அயலார் கண்களில் தென்பட்டால் மீன் வடிவமாகிவிடுவார்கள். அந்த சமயத்தில் அவர்களைத் தண்ணீரில் விட்டுவிட வேண்டும். இல்லாவிடில் அவர்கள் இறந்துவிடுவார்கள். அது விஷயத்தில் நீர் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று சொல்லிற்று.

அப்படியே செய்வதாகச் சொல்லிவிட்டு இரு மீன் அரசிகளையும் அழைத்துக்கொண்டு குளக்கரை அடைந்தான். உடனே ஒரு சொம்பில் தண்ணீர் எடுத்து அதில் மீன் மனைவிகளைப் போட்டு எடுத்துக் கொண்டு வீடு வந்தான். வீட்டிற்கு வந்து அந்த இரு மீன்களையும் வீட்டிற்குப் பின்புறமுள்ள கிணற்றில் விட்டான். இராக் காலங்களில் அவர்களுடனிருந்துவிட்டு பகலில் மீன் வடிவமாக்கி கிணற்றில் விட்டு தன் வேலைகளைக் கவனிப்பான்.

இப்படிப் பல நாட்கள் சென்றன. ஒரு நாள் வெளியே போன சுந்தரம் இருட்டியும் வரவில்லை. இரு மீன்களும் தன் மனித உருக்கொண்டு பார்ப்பதற்காக வீட்டிற்குள் வந்தன. அச்சமயம் சுந்தரத்தின் நண்பன் அவனைத் தேடிக்கொண்டு வந்து கதவைத் தட்டினான். அந்த மீன் பெண்களிருவரும் தம் கணவன் தான் வந்து கதவைத் தட்டுகிறான் என்று நினைத்துக்கொண்டு கதவைத் திறந்தன.

எதிரில் அன்னியன் ஒருவனிருப்பதைக் கண்டு இரண்டும் தம் சுயரூபத்தை அடைந்தன. வந்தவன் இருட்டில் இவைகளைக் கவனியாமல் உள்ளே போய்த் தேடித் தன் நண்பனில்லாததால் வெளியே போய்விட்டான். அந்த சமயம் மீன்களிரண்டையும் தண்ணீரில் கொண்டு விடமுடியாததால் சிறிது நேரத்தில் இரண்டும் இறந்தன.

பிறகு சுந்தரம் வந்து இரண்டும் இறந்து கிடப்பதைப் பார்த்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டான். இந்த சமாசாரம் அவ்வூரிலுள்ள மீன்கள்மூலம் மீன் அரசனுக்குத் தெரியவே மீன் அரசன் அன்று முதல் மனித வர்க்கத்தைப் பழி வாங்கி நிர்மூலமாக்கும்படி மீன்களுக்குக் கட்டளையிட்டான். அன்று முதல் மீன்களைக் கரையில் எடுத்துப்போட்டால் அவை இறந்துவிடுகின்றன; மனிதர்கள் தண்ணீரில் இறங்கினால் பழி வாங்குவதற்காக அவர்கள் கால்களைக் கடிக்கின்றன. ஆனால் பாபம்! என்ன பயன்!


# அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

**டில்பஹார் ஸோப்பு**

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)



டில்பஹார்ஸோப்பு சிறந்த சுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும் அழகை விருத்தி செய்யும்.




## உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

**The Anglo Indian Drug & Chemical Co**

**285, Jumma Musjid, BOMBAY 2.**

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி,

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி

# ஏமாறுதீர்கள்!

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானது எனப்பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள் அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜண்டு என்றும், எங்கள் மருந்துகள் என்று யாராவது விற்பனை செய்தால் அதைப் பொதுமக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**

**பழனி, S. I.**

# ராதா

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழ:—(காயிதத்தில் சிறிது நேரம் எழுதிவிட்டு) ஐயா, ரொம்ப சமீபத்தில் நடக்க வேணுமே! நிச்சய தாம்பூலம் கூட நடந்திருக்கவேணுமே? நீங்கள் என்னைப் பரீக்ஷை பண்ணிச் சோதிக்கிறீர்களா? இன்னும் இரண்டு மாதத்திற்குள் எப்படியாவது விவாகம் நடந்து தீரவேண்டும் இன்னும் விவாகப் பிரஸ்தாபமே நடக்கவில்லையா?

நந்த:—அதெல்லாம் கடைசியில் சொல்லுகிறேன். நீங்கள் ஜாதகப்படி சொல்வதைச் சொல்லி முடியுங்கள். மாப்பிள்ளை யார்? எப்படிப் பட்டவர்.

கிழ:—ஜாதகம் மாப்பிள்ளை (ஊர் பேர் சொல்லாது.) கிழ் திசை, மாப்பிள்ளை அந்நியருமல்ல. பெண்ணின் தகப்பன் வழியிற் சம்பந்தப்பட்டவர். இந்த ஜாதகன் மூலமாய் அவரும் யோகசாலிதான். ஐசுவரியத்திற்கும் குறைவில்லை.

நந்த:—மாப்பிள்ளை கல்வி எப்படி? ஒழுக்கம் எப்படி? நன்றாய்ப் பாருங்கள்.

கிழ:—ஒழுக்கம் சாதாரணம் தான். இந்த ஜாதகன் ஒழுக்கத்தில் சிறந்ததாயிருப்பதால், விவாகத்திற்குப் பின், மாப்பிள்ளையும் ஒழுங்காயிருப்பார். கல்வி கொஞ்சம் மட்டம்தான். மட்டமாய்த்தான் அமையும். ஏனென்றால், சரஸ்வதி கடாக்ஷம் பூராவும் இந்தப் பெண்ணுக்கே அமைந்துவிட்டபடியால், நீங்கள் இந்தலோகமெங்கும் தேடியலைந்தாலும், கல்வியுள்ள நாயகன் கிடையாது. நீங்கள் குதித்துக் குதித்துப் பார்த்தாலும் பெண்சாதியிடம் கல்வி கற்கவேண்டிய மருமகன்தான் தங்களுக்கு வருவார்.

நந்த:—(ஹா ஹா ஹா வென்று சிரித்து) நல்லாய்ச் சொன்னீர்கள்! இவளிடத்தில் தான் மாப்பிள்ளை படிக்க வேணுமாக்கும்! பேஷ்! என்ன ராஜு!

ராஜு:—புத்தி—உத்தரவு—எல்லாம் எஜமான் மனம்போல அமைந்திருக்கிறது. ஜோசிய ஐயா சொல்லுகிறது ரொம்பக் குறிப்பாயிருக்கிறது. கூட இருந்து பார்த்தவர்கள் மாதிரி அவ்வளவு துள்ளியமாய்ச் சொல்லுகிறார்களே! இப்படி நான் பார்த்ததில்லை.

நந்த:—ஐயா, ஒரு காரியம் மட்டும் குறிப்பாய்ப் பார்த்துச் சொல்லவேணும். இந்த விவாகத்தில் ஏதாவது ஆக்ஷேபனைகள் வருமா அல்லது சமாதானமாய் முடியுமா?

கிழ:—அதைத்தான் நானும் சொல்லலாமென்று நாவெடுத்தேன். அதற்குள் தாங்களே கேட்டுவிட்டீர்கள். நான் சொன்ன அடையாளங்களுள்ள மாப்பிள்ளைக்குத்தான் கட்டாயம் நடக்கும். ஆனால், பெண்ணின் தாய் வர்க்கத்தார் முதலில் ஆக்ஷேபனை செய்வார்கள். அதனால் மனஸ்தாபங்களும் உண்டாகும். விவாகம் முடிகிறவரை அப்படித்தான் இருந்துகொண்டிருக்கும். பின்னால் எல்லாம் சரியாய்ப் போகும். என்ன ஆக்ஷேபனை வந்தாலும் முடிவில் அந்த மாப்பிள்ளைதான் பெண்ணைக் கட்டப்போகிறவன். (ஜாதகத்தைக் கீழே வைத்து மூக்குக் கண்ணாடியைக் கழற்றினார்.)

ராஜு:—அப்படிச் சொல்லுங்களேன்? ஜாதகத்தில் அப்படியில்லாமல் இவ்வளவும் நடக்குமா எஜமான்? எஜமான் பேரிலும் குற்றமில்லை; அம்மா அவர்கள் பேரிலும் குற்றமில்லை. எல்லாம் கிரகஸாரம் செய்கிறவேலை!

நந்த:—நல்லது, ஜோதிஷர்வாள், இனி நான் சொல்லட்டுமா? நீங்கள் குறிப்பிட்டபடியே ஒரு மாப்பிள்ளை வீட்டுக்காரர் கேட்டு விட்டுப் போயிருக்கிறார்கள். அதாவது,—தாங்கள் சொன்னீர்களே?—அந்த பவானந்த முதலியார் பேரன்தான் அந்த மாப்பிள்ளை.

கிழ:—அப்படியா? அவாள் பேரனா! பின்ன என்ன? பெரிய வீட்டுக்காரராய் விட்டதே? நல்ல சம்பந்தம் இசைந்த சம்பந்தம்! தக்க சம்பந்தம். அதுவும் சொந்த சம்பந்தம். பிறகு?

நந்த:—அதுவும் தை மாதம் முகூர்த்தம் நடக்க வேண்டுமென்கின்றார்கள். நம்முடைய வீட்டுக்காரியும் இந்தப் பெண்ணைப் பெற்று பதினெட்டு வருஷமாய்க் குழந்தையில்லாதிருந்து, இப்போது ஏதோ இரண்டாவது கர்ப்பமாயிருக்கிறாள். நீங்கள் சொன்ன அம்சங்களெல்லாம் சரியாயிருக்கிறது.

கிழ:—நான் சொல்வது சரியாயிராமல் எங்கே போகும்? அதுவும் எங்கள் குடும்பத்தார் கண்ணை மூடிக்கொண்டு சொன்னாலும் சரியாய்த்தானிருக்கும்! ஐயா, இன்னொரு விஷயமும் கண்டிப்பாய்ச் சொல்லிவிடுகிறேன் பிறக்கிறது ஆண் குழந்தைதான். அதை நீங்கள் கண்ணால் பார்க்க வேணுமென்ற ஆசையிருந்தால், இந்தத் தை மாதம் கட்டாயம் விவாகத்தை முடித்துவிட வேண்டும். நீங்


## ஜலதோஷம்

இதனின்றும்

விடுபடுங்கள்.

ஜலதோஷம்! அப்பப்பா! மகா தொந்தரவு! வெறுமனே தும்மலும், இருமலும் வரும். கண்ணிலிருந்து ஜலம் பெருகும். தலை பளுவாகயிருக்கும்; ஒன்றும் செய்யத் தோன்றாது. "சனி பிடித்தால் சனி பிடித்த மாதிரி" என்று சொல்வதுண்டு 'பெப்ஸ்' மாத்திரைகளைச் சப்பி மேற்படி சங்கடங்களை ஒழியுங்கள் பெப்ஸின் கிருமி நாச ஆவி சுவாசாசயத்தினுள் சென்று கிருமிகளை யழிக்கிறது. தொண்டைக்கும் சமனை மேற்படும் பெப்ஸ் டப்பி ஒன்று வாங்கி, இருமல் தொண்டைப்புண், மார்புவலி முதலியவற்றிற்கு உபயோகியுங்கள்.





கைக் கடக்கமான புட்டிகளில் ரூ. 1 வீதம் கிடைக்கும்.

ஏஜெண்டுகள்:

மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, மதராஸ்.

பெப்ஸ் கிருமி நாச சுவாச நிவாரண மாத்திரை உட்கொள்க

# பெப்ச PEPS

பார்! D. R. புதிய மோஸ்தர்கள் சாம்பில் பாருங்கள்!

இனி, யோஹினி, இந்திராணி, சுகந்தா பார்டர், ஒரு பூனா, ஒரு பெங்களூர் தலைப்பு, தர்மாவரம் (மைசூர் பட்டு) புடவைகள் உபயோகியுங்கள். உத்தியோகஸ்தர்களுக்கு மாதிரி புஸ்தகம் உசிதம்.

ஆங்கிலத்தில் எழுதவும்: D. R. NARAYANASWAMY & SONS, Dharmavaram : : (Anantapur Dt.)

நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை"

டி. ஐ. எல். மகரத்வஜம் D. L.

ஆரோக்ய சஞ்சீவி

(ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்டாக்கிஸ்டு தேவை.)

# நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

## மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி !!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டனம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்

கள் முயற்சி செய்யாமல் சும்மா மேல் வீட்டில் படுத்துத் தூங்கினாலும், ஜாதகத்தின் பலன் அடுத்த மாதம் எப்படியாவது விவாகம் நடந்து தீரும். பிறக்கப்போகிற சிசுவும் க்ஷேமமாயிருக்கும். ஒருக்கால் இந்த விவாகம் நின்று, சிசுவும் கர்ப்பத்தில் சிதையுமானால், வேறே தங்களுக்குக் குழந்தையும் கிடையாது. ஒரே ஒரு சகோதரம்தான் இந்த ஜாதகனுக்கு உண்டு. அதுதான் இப்போது கர்ப்பத்திலிருப்பது. பெண் வெளியேறினால்தான் அது உயிரோடு பிறக்கும்; சந்தேகமில்லை.

(என்று சொல்லி முடித்து தன் படுக்கையை அவிழ்த்தார்.)

நந்த:—(திருப்திகரமான முகத்தோடு) நானும் படுத்துக் கொள்ளப் போகிறேன் (என்று மேடைக்குப் போய்விட்டார்)

அநந்:—(வெளியே வந்து) ஐயா, வாருங்கள். தலையணை வேண்டுமா? (என்றுபசரித்து) நீங்கள் சொல்லியதெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தேன். மாப்பிள்ளைக்குப் படிப்பில்லையேயென்ற ஆக்ஷேபணையைத் தவிர வேறே தடையில்லை. மற்றது எப்படிப்போனாலும், என் குழந்தை ராதா மாப்பிள்ளை வீட்டில் சந்தோஷமாய் வாழுவாளா? அதை மட்டும் சொல்லுங்கள்.

கிழ:—அம்மா, உங்களுக்கு அந்தக் கவலை கொஞ்சமும் வேண்டாம். உங்கள் குழந்தை சந்தோஷமாய் வாழும். தவிரவும் தங்கள் பெண் குணம், அழகு கல்வி பொருள் முதலிய எல்லாச் சிறப்பும் பொருந்தியதாயிருக்கிறது. அதற்குச் சமமான சகல சிறப்புமுள்ள மாப்பிள்ளையும் அமைந்து விடுமானால், இருவரில் ஒருவருக்குக்கட்டாயம் மோசம் வரும். உலகத்தில் திருஷ்டி தோஷமேயுண்டாகும். இரண்டும் ஒன்றுபோலமைந்த அநேக குடும்பங்களை நான் கண்டிருக்கிறேன். ஒருவராவது நெடுநாள் வாழவில்லை.

அநந்:—அதுவும் அப்படியா வந்து சேர்ந்திருக்கிறது! மாப்பிள்ளை இப்போதே வைப்பாட்டிமார் வைத்துக்கொண்டு வாடாவளியாய் அலைகிறான். அவனிடத்தில் அகப்பட்டுக்கொண்டு நம்முடைய அருமைக் குழந்தை கஷ்டப்படக்கூடாதேயென்பதுதான் என்கவலை. கல்வியில்லாமற் போனாலும் போகட்டும்.

கிழ:—இதைத்தானா சொல்ல வந்தீர்கள்? தீபச்சுடர் போன்ற தங்கள் பெண்ணைக் கையால் தொட்டபின் (ஒரு மனிதன் வேறே பெண்ணையும் நினைப்பானா? விவாகம் முடியட்டும். பின்பு பாருங்கள். பெண்சாதி உத்திரவில்லாமல் தலைவாயிலைமட்டும் போகமாட்டார்கள். தங்கள் குழந்தை கீறினவாரைக்குள் நின்று சொன்னபடியெல்லாம் ஆடுவான். ஜாதகத்திலும் அப்படித்தான் தெளிவாய்த் துலங்குகிறது. அம்மா, பெண்ணைச் சும்மா கூசாமல் கொடுங்கள். பெண்ணும் நன்றாயிருக்கும். மாப்பிள்ளையும் ஒழுங்குக்கு வந்து விடுவான். பெரிய மனுஷன். என் வார்த்தை இதுவரை பொய்த்ததில்லை. இருவரும் க்ஷேமமாய் சந்தோஷமாய் மங்களமாய் நன்றாய் இருப்பார்கள்.

அநந்:—ஐயா, எனக்கு அவ்வளவுதான் வேணும். அவனுக்குக் கொடுக்கப்படாதென்ற பிடிவாதமெனக்கில்லை. நாம் நினைத்தபடியெல்லாம் அமையுமா? விதிப்படிதானே கிடைக்கும்? விதியில்லாமல், அவளுடைய அப்பா மனம் இப்படி ஒரே பிடிவாதமாய்த் திரும்புமா என்று தனக்குள் திருப்தியும் அதிருப்தியும் கலந்தாற்போல் முணுமுணுத்துக் கொண்டு ராதாவின் பக்கத்திற் போய்ப் படுத்துக்கொண்டாள். ஜோதிஷக் கிழவன் மேட்டு போட்டில் அநந்த கல்யாணியின் அசையா மனமுங்கூட அரையரைக்கால் வாசி சமாதானமாய்விட்டது. கிழவனும் தான்வந்த காரியம் வெகுசிறப்பாய் முடிந்துவிட்டதென்று நினைத்துக்கொண்டு இராப்பொழுதைக் கழித்து விட்டு, மறுநாள் நன்றாய் விடியுமுன் தன் ஊருக்குப் புறப்பட்டுவிட்டார்.

இத்தனைக்கும் தூங்குபவள்போல் படுத்துக்கொண்டிருந்த ராதா, ஜோதிஷர் ஜாதகம் பார்த்து முடித்த சம்பிரமத்தையும், அதைக் கேட்டுத் தன் பிதா அடைந்த சந்தோஷமான சமாதானத்தையும், பேதையாகிய தன் மாதாவும் ஜோதிஷர் வார்த்தையில் வைத்த நம்பிக்கையையும்பற்றித் தன் மனத்துட் பலவாறு சிந்திக்கலாயினாள். "எல்லாரும் கூடி என் தலைமேற் கல்வைக்க வழி தேடிவிட்டார்கள். இந்தக் கிழவன் பாற்கடல் நச்சுமுதலியினால் அனுப்பப்பட்ட மோசக்காரனே தவிர ஜோதிஷனல்ல. மகா அயோக்கியனாகிய நச்சுமுதலி சமர்த்தனாய்விட்டான். சூதுவாதற்ற பாமர ஸாதுவாகிய எனது பிதா அவன் மோசத்திலகப்பட்டுக் கொண்டார்! இந்த மோசக்கார ஜோதிஷனை வாத்தியார் மாமா முன்பு நிறுத்தினால், அவர் இவனையும், இவன் ஜோதிஷப் புளுகையும் சந்து சந்தாய்க் கிழித்து அவமானம் செய்து அனுப்பிவிடுவார். எனக்கு நல்ல காலமிருந்தால் அவர் இந்த வீட்டை விட்டுப் போவாரா? பாபியாகிய நானிருக்கும் ஊரையும் விட்டுப் போய்விட்டாரே! அவரை யேன் நான் இனி நினைக்க வேண்டும்? அவர் யார்? நான் யார்? என் மனத்தில் அவர் மீதுள்ள அன்பையும் மதிப்பையும் அவரிடம் வெளியிடுவதற்குக்கூடச் சந்தர்ப்பமேற்படாதவாறு திடீரென்றுவெளியேறி விட்டாரே! அன்றே எனக்குச் சனியன் பிடித்ததென்று நினைத்துக்கொண்டேன். என் பிதா சுயபுத்தியுள்ளவர்களாயிருந்தால், எனக்கேன் இத்தனை கவலை? என் அருமைத் தாய்க்கேன் இத்தனை வருத்தம்? தற்சமயம் எனக்கு வந்திருக்கும் ஆபத்தினின்று தப்ப ஒரு வழியுமில்லை. என் பிதாவுக்கு மூக்கு நுனியிற் கோபம் தான் குடியிருக்கிறதேயன்றி ஊன்றி யோசிக்கும் திறனை ஈசன் கொடுக்கவில்லை. சொந்த மனைவியின் சொல்லையே கேட்காத பிடிவாதக்குணம் அமைந்திருக்கும் என் பிதா என் சொல்லுக்குச் செவி கொடுப்பாரா? இத்தனை காலத்திற்குப் பின் ஈசன் செயலாய்க் கர்ப்பமாயிருக்கும் என் தாய்க்கு

(39-ம் பக்கம் பார்க்க)


## வெற்றி கிட்டியது

என மிஸ்டர்............22-6-36ல் பம்பாயிலிருந்து எழுதுகிறார்.

"தங்கள் "திபேத் மூலிகை" யால் தான் நான் மெட்ரிக் பரிக்ஷையில் தேறினேன்."

"திபேத் மூலிகை"யால் நீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்



வசீகரண். ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆ ஈரிய சக்தியை விரைவில் அறி உ விலை ரூபா 3-8-0

2. வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழிலபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0

3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0

4. வியாதிகள்:—முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0 6. பரீக்ஷைகள்:- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர். விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு. ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

**BIJOYA LODGE, (S.M.W.)**
P O SALKIA HOWRAH



### தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!

புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து ஆனந்தமடையுங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | கவிதைகள் (8-பாகங்கள்) | ரூ. 2—8—0 |
| 2. | வசனங்கள் (6-பாகங்கள்) | ,, 2—0—0 |
| 3. | கதைக்கொத்து | ,, 0—8—0 |
| 4. | பகவத் கீதை | ,, 0—8—0 |
| 5. | கட்டுரைகள் ப்குதி 1 தத்துவம் | ,, 0--10—0 |
| | ,, ,, 2 மாதர் | ,, 0—8—0 |
| | ,, ,, 3 கலைகள் | ,, 0—8—0 |
| | ,, ,, 4 சமூகம் | ,, 0--12—0 |

**6. Bharathi and his works**
by Mr. C. Visvanathan, Brother of Bharathi 0 4 0

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.







மனைவி சொல் தவறாதவ[ர்] ஒருவர்மிருகக் காட்சிச்சாலை[க்]குச் சென்றார்.

* * * *

ஒரு மிருகத்தைப் பார்த்[து] வேலையாளியிடம் "இது என்ன மிருகம்?" என்று கேட்டார்

வேலையாள்:— உங்கள் மனைவி உங்களை எப்படி அழைக்கிறாள்:

"ஓஹோ! பெருச்சாளியா இது!"

* * * *

மாஜிஸ்திரேட்:— பணத்தைத் திருடிக்கொண்டுபோனதல்லாமல் நீ நகைகளையும் திருடிக்கொண்டுபோய் விட்டாய்.

கைதி:—பணம்மட்டும்சுகத்தைக் கொடுக்காதல்லவா!

* * * *

தகப்பன்:— நீ என் ஒரு வேலை பார்த்துக்கொள்ளக் கூடாது நான் உன் வயதிருக்கையில் 30 ரூபாய் சம்பளத்தில் ஒரு கம்பெனியில் வேலைக்குப் போனேன் ஐந்து வருஷத்தில் கம்பெனிக்கே சொந்தக்காரனானேன்.

பிள்ளை:—இந்தக் காலத்தில் அவ்வளவு திருட முடியாது.

* * * *

மனைவி:—கதவு எல்லாவற்றையும் மூடிவிட்டீர்களா? ஏதோ சப்தம் கேட்கிறமாதிரி இருக்கிறதே.

கணவன் (அரைத் தூக்கத்தில்):—உன் வாயைத் தவிர எல்லாவற்றையும் மூடிவிட்டேன்.

* * * *

ஜட்ஜ்:—திருடன் உங்கள் சட்டைப் பையில் கைவிட்டது உங்களுக்குத் தெரியவில்லையா?

ஞாபகமறதியற்றவர்:— என் கையென்று நான் நினைத்தேன்.

* * * *

"பையா உன் வாயில் என்ன?"

"பப்ரமெண்ட்."

"சரி இதை துப்பிவிட்டுப் பேசு."

"முடியாது. அது என் தங்கையுடையது, நான் பாதி சாப்பிட்டுவிட்டுப் பாதியை அவளிடம் கொடுத்துவிட வேண்டும்."

* * * *

ராமு:—என் மனைவி எப்பொழுது பார்த்தாலும் தன் தாய் வீட்டிலேயே இருக்க விரும்புகிறாள்.

சோமு:—அப்படியே செய்வது தானே இதற்காக வருத்தப்படுகிறாயே. அவ்விதம்செய்யாமல் தங்கள் வீட்டிலேயே தங்கிவிடுகின்றனர் என்றல்லவா பல கணவர்கள் புகார் செய்கின்றனர்.

* * * *

ஆபீஸ் கணக்கில் ஏதோ பிசகு நடந்திருக்கிறதென்று இரு முதலாளிகள் சந்தேகித்தனர். அதன் பேரில் சில குமாஸ்தாக்களுக்கு ஒரு வாரம் லீவு கொடுத்துவிட்டு முதலாளிகள் இருவரும் கணக்கைச் சோதித்தனர். ஒருவாரம் இருவரும் மிகுந்த சிரமப்பட்டனர். அதன் முடிவில் முதல் முதலாளி:—எவ்வளவு நஷ்டம் வந்து விட்டது பார்த்தாயா?

இரண்டாவது முதலாளி (ஆவலுடன்):—என்ன? எவ்வளவு நஷ்டம்?

"கணக்குகள் சரியாகத்தானே இருக்கின்றன. குமாஸ்தாக்களுக்குச் சம்பளத்துடன் லீவு கொடுத்ததினால் என்ன நஷ்டம் விளைந்துவிட்டது பார்த்தாயா."

* * * *

மானேஜர்:—குதிரைப் பந்தயத்திற்குச் செல்பவனென்று நீ என் உன் விண்ணப்பத்திலேயே எழுதவில்லை.

குமாஸ்தா:—என் பெருமையை நானே சொல்லிக்கொள்ள விரும்பவில்லை.

* * * *

உபாத்தியாயர்:— எப்பொழுது பார்த்தாலும் 'தொண, தொண' வென்று பேசிக்கொண்டிருப்பவனுக்கு என்ன பெயர்?

பையன்:—"உபாத்தியாயர்"



சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற பழைய மோட[்டார்] [ஊ]ர்வலம்.


# மல்லிகாவின் பாக்யமே பாக்யம்!



போன வருடம் ஐயோ ! அப்பா ! என்று கஷ்டப்பட்டவள் இவ்வருடம் ஒரு குழந்தையை அன்புடன் அணைகிறாள்

"வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி"

ஸ்திரீகளுக்கு மாதக்குளி காலத்தில் உண்டாகும் சூதக வாய்வு, சூதக பந்தம், சூதகக்கட்டினால் உண்டாகும் வயிற்றுவலி, பேதி, பசியின்மை, வாந்தி, மயக்கம், தலைவலி, ஜ்வரம், உடல் ஸ்தூலித்தல் முதலிய எல்லா கர்ப்பாசய வியாதிகளையும் கண்டித்து மலட்டுப் பூச்சிகளைக்கொன்று, கருப்பைக்கு பலந்தந்து ரக்ஷித்து சந்தான பாக்யத்தையளிக்கும் உன்னத ஔஷதம். - பத்தியமில்லை, செட் விலை ரூபா 5.



வேலன்ஸ்மெடிகல்ஹால் 61. காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர் சென்னை

உயர்ந்த
வைரங்கள்
**T. R.**
**ஜோஷி & சன்ஸ்,**
**Diamond Merchants**
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்

---

## கொசு வலைகள்.



பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளானவை, நல்ல தையல், நீடித்துழைப்பவை. வெளுத்த பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள் முதலிய பல கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுக.

| நீளம் | அகலம் | உயரம் | சாதா | உயர்ந்தது | மோனது |
|---|---|---|---|---|---|
| அடி | அடி | அடி | ரூ. | ரூ. | ரூ. |
| 6 | 3½ | 3½ | 1-4 | 1-8 | 2-4 |
| 6 | 4 | 4 | 1-8 | 1-12 | 2-0 |
| 6½ | 4½ | 4½ | 1-12 | 2-4 | 2-12 |
| 7 | 5 | 5 | 2-4 | 2-12 | 3-4 |
| 7½ | 6 | 6 | 2-12 | 3-4 | 4-4 |

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூனு வலைகள் வாங்குவோருக்கு 6X4X4 வலை ஒன்று இலவசம்.

Bally Mosquito Net Factory,
P. O. Bally Dist. HOWRAH.

---

## மலரிற் சிறந்தது மல்லிகை
## குக்கரிற் சிறந்தது ருக்மணி

போலி குக்கர்களைக் கண்டு ஏமாறுதீர்கள்.
எல்லா குக்கர்களும் குக்கர்களாகாது.

## ருக்மணி குக்கர்



தான் எந்தக் காலத்திலும் ஆரோக்யமும் சூமோன ஆகாரத்தைக் கொடுக்கும். எல்லோரும் வாங்கும் பொருட்டு விலைகளையும் குறைத்திருக்கிறோம். 1 முதல் 16 பேர்கள் வரை சாப்பிடக் கூடிய 7 அளவுகள் 9 ரூபாய் முதல் 38 ரூபா வரை இருக்கின்றன.

விபர புத்தகம் இனம்.

**ருக்மணி குக்கர் கம்பெனி,**
ராயபுரம், (12) சென்னை.

எமது ஏஜெண்டுகள்:

திருவனந்தபுரம்:—இந்தியன் எம்போரியம், மெயின் ரோடு.
பெங்களூர்.—இன்டஸ்டிரியல் & கமர்சியல் கோவாபரேடிவ் சொசைட்டி, புதுமார்க்கெட்.
மட்டுங்கா (பம்பாய்):—தி சௌத் இந்தியன் கன்சர்ன்ஸ் Ltd., 'ராம்நிவாஸ்'
பூனா:—லார்ட் ரியே இன்டஸ்டிரியல் மியூசியம், ரியே மார்க்கெட்.
கல்கத்தா:—சௌத் இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், 114, B. லான்ஸ்டௌன் ரோடு
ரங்கூன்:—ஸ்ரீ கணேஸ் ஸ்டோர்ஸ், 115, 117, பிரகாண்டட் தெரு.
வேலூர்:—V. R. நாதம் & கம்பெனி, லாங் பஜார்.

---

## பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

---

சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டுப்பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட் விலை ரூ. 1-4 கேட்லாக் இனம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு;
ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.

---

## நரை மயிரை அகற்றுங்கள்



உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனம்.
சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15 பவானிப்பூர், — கல்கத்தா
மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனாபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, லைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்ட்:—
பரோக் பிரதர்ஸ், ஜும்மா மஸ்ஜித்

---

வாசனை
எண்ணெய்கள்
நீங்களே
தயாரித்து
பணத்தை மீதி
செய்யலாம்!



கீழ்கண்ட ஏதாவது ஒரு ரக மோஹினி எஸன்ஸை 16 அவுன்ஸ் கல் எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது வாசனை எண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்கு சிறந்த வாசனை எண்ணெயாகும். விலைகளோ மிகவும் குறைவு.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்.

| | | | |
|---|---|---|---|
| சாம்பாக் | ரூ. 2-0 | போகுல் | ரூ. 1-8 |
| காஷ் | ,, 2-0 | ஹீனா | ,, 1-8 |
| கேவ்டா | ,, 2-0 | வில்லி | ,, 1-0 |
| மஸ்க் | ,, 2-0 | தாமரை | ,, 1-0 |
| கதம்பம் | ,, 1-8 | சோலோன் | ,, 1-0 |
| மல்லிகை | ,, 1-8 | மோத்தியா | ,, 1-0 |
| ரோஸ் | ,, 1-8 | ஸ்வீட் | ,, 1-0 |

அரை அவுன்ஸ் பாட்டில்களாகக்கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், வி. பி. செலவு வேறு.

S. PAUL & Co., Perfumers,
(Dept. S. W.) 4, Hospital Street,
Dharamtola, Calcutta.

---

## வெண் குஷ்டப் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.
விபரங்களுக்கெழுதுக,
AMALA WORKS (S. M.)
Panchpota—Bengal, India

---

வலுவாகவும்,
நிரந்தரமாகவும், பத்திரமாகவும்
இருக்க இரும்பையே
கட்டிடங்களில் உபயோகியுங்கள்.

உயர் ரகத்திற்கு

# டாடா இரும்பையே

கேளுங்கள்.

ஒவ்வொரு பட்டணத்திலும்
வியாபாரிகளும், ஸ்டாக்கிஸ்டுகளும்
இருக்கின்றனர்.

# Tata Iron & Steel Co., Ltd.,

18, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

தந்தி: 'IRONCO MADRAS' போன்: 2701

---



# ராதா

(36-ம் பக்கத் தொடர்ச்சி)

என் விஷயமான வீண் கவலையை உண்டாக்குவதும் பிழை. அவள் மனத்திருப்தியுடன், கவலையின்றிப் பூரண கர்ப்பமாய் ஒரு தம்பியைப் பெற்றெடுத்தால், அந்தச் சிசுவை என் கண்ணால் பார்க்கவும், என் தாய்வீடு சந்ததியின்றிக் கொள்ளி முடிந்துவிட்டதென்ற அவச்சொல் நீங்கி, நல்ல பெயருடன் வாழ்வதை என் காதாற் கேட்கவும், ஈசன் எனக்கு அனுக்கிரகிப்பாராயின், அதுவே எனக்குப் போதும். என் கதி எப்படியானாலும் சரி. இந்தக் கிழவன் ஜாதகத்தின் பெயரைச் சொல்லி எனது பிதாவுக்குப் புகட்டியிருக்கும் போதனையையும்; அதில் என் பிதா வைத்திருக்கும் நம்பிக்கையையும் பார்க்கும்போது—எனக்கும் விவாகமாகாமலிருந்து—என் தாயின் பிரஸவத்திற்கும் தற்செயலாய் ஏதேனும் குற்றம் நேருமாயின்—எல்லாக் குற்றமும் என் கிரகசார தோஷத்தால் விளைந்ததென்று என் பிதா நினைப்பார்களேயன்றி, தற்செயலாய் ஏற்பட்டதென்று நினைக்கமாட்டார்கள். அப்படி நினைத்தமட்டிலும் எனக்கு அருமைக்குறைதானே ஏற்படும். என் பிதாவின் குடும்பம் ஆண் சந்ததியற்றுப் போவதற்கு நானே காரணம் என்ற அவச்சொல் இனி எனக்கு வேண்டாம். என்னைப் பெற்று வளர்த்த சிரமத்திற்காக என் பெற்றோர்க்கு நான் உபகாரம் செய்ய இயலாதவளாய்ப் போய்விடினும், பிறந்த வீட்டிற்கு என்னால் அபகாரமில்லாதிருந்தால் அதுவே ஒரு பெரிய உபகாரம்.

என் பிதா—என் அருமை பிதா—நிஷ்கபடியென்றறிந்துகொண்டல்லவா அந்த நச்சு முதலியும் இந்த ஜோதிஷக் கிழவனும் கூடி, என் விவாகத்திற்கும் இனிப் பிறக்கப்போகும் குழந்தைக்கும் சம்பந்தமிருப்பதாய் பொருந்தமுடிந்துபுளுகி என் பிதாவை ஏமாற்றிவிட்டார்கள்! "இது ஜோதிஷப் புரட்டு; இதை நம்பக்கூடாது" என்று நான் சொன்னாலும் "சீ கழுதை! சின்னக் கழுதை! உனக்கென்ன தெரியும்?" என்ற வார்த்தைதான் எனக்குக் கிடைக்குமல்லாது பயனொன்றுமில்லை. ஆனால் கிழவன் ஒரு நன்மை செய்துவிட்டான். என் கவலை தீராவிட்டாலும், என் தாயின் மனத்தை ஒருவாறு சமாதானம் செய்து திருத்திவிட்டானே அதுதான் பெரிது. அவள் என் விஷயமாய்க் கொண்டிருந்த பெருங்கவலை இவ்வளவு எளிதாய் நீங்கியதே என் கவலையிற் பாதி நீங்கியதுபோலாயிற்று. உத்தேசப்படி விவாகம் நடந்தாலும், அந்த மூன்று நாளும் பல்லைக் கடித்துக்கொண்டு பேசாதிருந்துவிடுவோம். பின்னால், என் தாய் பிரஸவத்திற்காகப் பூந்துறைக்குப் போகும்பொழுது அவளுடன் போய்விடுவோம். ஒரே பிள்ளையென்று என்னையே நம்பியிருக்கும் என் தாய்க்கு இன்னொரு பிள்ளை பிறந்துவிட்டால், அவளுடைய மகவாசையிற்பாதி என்னையும் மற்றப் பாதி என் தம்பியையும் பற்றி நிற்குமல்லவா? அதன்பின், இவ்வுலகம் நான் வாழ்தற்குத் தகுதியாயிருந்தால் வாழ்கின்றேன். இல்லையானால், என் வாழ்வை நிறுத்துக்கொள்கின்றேன். இதற்கு ஒருவருடைய தயவும் வேண்டியதில்லையே! என்தாய் என் தம்பியைக் கண்டாவது என் பிரிவைச் சற்று சகிப்பாளல்லவா? இதுதான் முடிவான தீர்ப்பு" என்றிவ்வாறு தன் சிறிய புத்திக்கேற்றவாறு பற்பலவிதமாய் நினைந்துகொண்டு ராதா அரை விழிப்பும் அரைத்தூக்கமுமாய் அன்றிராப்பொழுதைக்கழித்தாள். ஜோதிஷக் கிழவன் வார்த்தையைக் கேட்டது முதல், அநந்தகல்யாணி சிறிது கவலை நீங்கி நடமாடிக்கொண்டு திரிவதைக்கண்டு ராதா தானும் அவ்வாறே கவலை நீங்கியவள்போல் பாவனை செய்துகொண்டு, தனது சிறிய மனத்துள் ஆயிரம் வண்டிப் பாரம் பெருங்கவலைகளையெல்லாம் கட்டிச் சுருட்டி அடக்கி வைத்துச் சுமந்துகொண்டு திரிந்தாள்.

ஜோதிஷக் கிழவன் பாற்கடலையடைந்து தான் அநந்தகல்யாணியின் மனத்தைத் திருத்தித் திக்குவிஜயம் செய்துவிட்டு வந்த பிரபாவத்தை நச்சுமுதலியிடம் பிரஸ்தாபிக்கவே, நச்சு முதலி அளவற்ற ஆனந்தமடைந்து, தை மாதம் 13உ யன்று நிச்சயதாம்பூலத்திற்கும் 27உ யன்று முகூர்த்தத்திற்கும் நாள் பார்த்திருப்பதாயும், மகேந்திரத்திலிருந்து நந்தகோபர் பெண் முதலியவர்கள் பாற்கடலுக்குப் புறப்படுவதற்கு 5உ யன்று நல்ல தினமென்றும் ஒரு பெரிய உபசாரமான கடிதமெழுதி நந்தகோபருக்கு அனுப்பினர். கடிதம் மகேந்திரம் செல்வதற்குள்,—ராதாவின் ஜாதகம் பார்த்து முடிந்த தினமுதலாய்—நந்தகோபரும் அநந்தகல்யாணியும் ஒருவர்மேலொருவர் கொண்ட கோபம்; சிறிது சிறிதாய் ஆறியவர்களாய் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பேசிச் சமாதானமாய்விட்டதுமன்றிக் கிழவன் ஜோதிஷப் புரட்டில் நம்பிக்கை கொண்டவர்களால், ராதாவைத் தண்டபாணிக்குக் கொடுப்பதில் அபிப்பிராய பேதம் நீங்கி, இருவரும்பாற்கடல் சமாசாரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

விவாக காலம் நெருங்க நெருங்கத் தனது இருதய கமலத்தைக் கவலையென்னும் ஒரு புலி நெருக்கி நெருக்கிப் பிடிப்பதுபோல ராதா உணர்ந்தாள். அத்தனை கொடிய கவலையைத் தன் முகவாட்டம், மௌனம் அசந்தோஷம் முதலிய வெளிக்குறிகளினால் பெற்றோர் அறியாதவாறு சமர்த்தாய் அடக்கிக் கொண்டு சாதாரணமான காலங்களில் இருப்பதுபோல் இருந்தாள் ராதா. ஆனால், உள்ளிலிருந்து சதா அறுத்துக் கொண்டிருக்கும் கவலையால் அவளையறியாமல் அவளுடைய சரீரமானது அடைந்து வந்த மெலிவைமட்டும் அவளால் ஒளிக்க முடியவில்லை. இந்தச் சமயம் பாற்கடற் கடிதம் வந்து சேரவும், நந்தகோபர் மூன்றுமாத ரஜாப் பெற்றுக்கொண்டு தை மாதம் 5உ யன்று புறப்பட்டு அநந்தகல்யாணி, ராதா, ராஜு இவர்கள் சகிதம் பாற்கடலிலுள்ள தன் வீடுவந்து சேர்ந்தார்.

வந்தவரிடம் பூசையாச்சி, "அப்பா, அருமை மைத்துனன் வந்து பெண் கேட்டுவிட்டானென்ற பெருமையினால் நானொருத்தியிருப்பதையும் மறந்து விட்டாயாக்கும்?" என்றதற்கு நந்தகோபர் "சரி சரி; எல்லாம் எனக்குத்தெரியும். உன் யோசனையைக் கேட்கவில்லை" யென்று வெடுக்கென்று பேசினர். அதற்குப் பூசையாச்சி "அப்பா, உன்னிஷ்டம், எனக்கென்ன? இப்போது உனக்குத் தெரியுமா? பின்னால் தெரியும்" என்று சொல்லி வாயைப் பொத்திக் கொண்டாள். இதற்குள், தண்டபாணியின் கல்யாணப் பிரஸ்தாபம் ஊரெங்கும் பரவிவிட்டது. இதற்கிடையில், பாற்கடலி


**மியூச்சுவல்**

**அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.**

தலைமை ஆபீஸ் :

187, மவுண்ட் ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்.

டி. வி. ராமமூர்த்தி,

செக்ரிடரி.




ஜகத்ரஷக
ஸ்ரீ ஷண்முக யந்திரம்
125,6600 ஜனங்கள் போற்றுவது
பரிஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொத்
பண மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு
ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை,
நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு ரூ 2.
மாந்திரிக மருத்துவ ஆபீஸ்,
வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.

# செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இரை
கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்
தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது
முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக்
கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடி
தலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7-அணா

Indian Depot,
MAHAMBS TRADING COMPANY OF ASIA, P O Box 2186 Bombay.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

ளுள்ள தன் விரோதிகள் யாராவது நந்தகோபரைக் கலைத்து விவாகத்தை உலைத்து விடுவார்களோவென்றஞ்சிய நச்சு முதலி, நந்தகோபரிடம் அயல் மனிதர் தனித்துப் பேச வழியில்லாமல், அவரையெப்பொழுதும் தன் பக்கத்திலேயே வைத்துப் பந்தோபஸ்து செய்துகொண்டார். அவர் கருதியபடியே நிச்சய தாம்பூலமும் 13உ யன்று நந்தகோபர் வீட்டிற் சிறப்பாய் நடைபெற்றது. நிச்சயதாம்பூலம்வரை தன் கவலைகளையெல்லாம் தன்தாயுமறியாதவாறு மறைத்துவைத்திருந்த ராதா, நிச்சயதாம்பூலத் தினத்தன்று தண்டபாணியின் வஸ்திரத்தையுடுத்தியவுடன் தான் அன்றே ஒரு ராக்ஷதனுக்கு விலையடிமையாய் விட்டதாய் நினைத்து, வெட்டக்கொண்டு போகப்படும் ஆடுபோல் உடல் நடுங்கி ஒருவித மயக்கமடைந்தாள். எத்தனை அறிவும் எத்தனை கல்வியும் எத்தனை பொறுமையுமிருந்தாலும், ராதா தன் வயதுக்கு எவ்வளவு சகிக்க முடியுமோ அவ்வளவிற்கு மேலான பெருங் கவலைக்காளானபடியாலும், இதுவரை அவளது சரீரபலம் தளர்ந்துவந்ததுபோல், அவளுடைய மனோபலமும் தளர்ச்சியடையத் தொடங்கிற்று. ஆனால், ஸ்திரீகள் இந்த மயக்கத்தைக் கவலையினால் வந்ததென்றெண்ணாமல், பித்த முதலிய எதுக்களாலுண்டாயிருக்கலாமென்றெண்ணினார்கள். அநந்தகல்யாணிமட்டும் என்ன காரணமோ வென்ற சந்தேகமடைந்தாள். ராதாவினிடம் ரகஸ்யமாய்க் கேட்டதற்கும் அவள் பதிற் சொல்லவில்லை.

இதுவரை ராதாவை நாளடைவில் வாட்டிக் கொண்டுவந்த கவலையானது மெல்ல மெல்ல ஒரு பயம்போலாய் விட்டது. புலிவாயினின்றும் தப்பிப் பிழைத்த ஒருவன் அந்தப் புலியை நினைக்கும் பொழுதெல்லாம் திடுக்கென நடுங்குவதுபோலவும், தூக்கத்தில் பயந்து வாய் குளறுவது போலவும், ராதா தான் தண்டபாணியுடன் மணவறையிலுட்கார்ந்து கழுத்தைக் கொடுக்க வேண்டிய தினத்தைநயெண்ணும்பொழுதெல்லாம் திடுக்கென நடுங்குவாள்; உடல் புல்லரித்து ஒடுங்குவாள்; கனவில் ஏதோ பேய்பிசாசுகளைக் கண்டாற்போல், வாய்குளறிப் பயந்து விழிப்பாள். தனக்குள் "ஈசா எனக்கு இதுவரை மனோதைரியத்தைக் கொடுத்துதவியதுபோல், தாலிகட்டி முடியும்வரை என்மனங் கலங்காது என்னைக் காத்தருளும் ஜகதீசா! என்னை அருமையாய்ப் பெற்று வளர்த்த மாதா பிதா இருவரும் உயிரோடிருந்தும், தெய்வமே, தற்சமயம் எனக்கு உன்னையன்றி வேறு துணையில்லாத பரிதாபமான நிலைமையிலிருக்கின்றேன்" என்று பிரார்த்திப்பாள். தன்னைத் தூக்குமாத்தில் தூக்கும் துக்கமான தினத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் கைதிப்புள்ளிபோல் ராதா முகூர்த்த தினத்தை யெதிர்பார்த்து நாட்களை எண்ணிக்கொண்டிருந்தாள். இன்னும் ராதா, "என்னுடைய மனம் இவ்வளவு கலங்குமென்று முன்னமே தெரிந்தால், வந்தது வரட்டுமென்று மகேந்திரத்தை விட்டுப் புறப்படமாட்டேனென்று சொல்லிவிடுவேனே! அந்தச் சமயத்தையும் விட்டுவிட்டேனே! இனி என்ன செய்ய முடியும்! இனி இதை என் தாயினிடம் சொல்லித்தான் என்ன பயன்? புத்தியைக் கடன் கொடுத்துவிட்டேனே! கடன் கொடுத்துவிட்டேனே! கொடுத்துவிட்டேனே! விட்டேனே! விட்டேனே!" என்று தன்னையே நொந்து, கையை நெறித்து, வயிற்றைப் பிசைந்து, அங்குமிங்கும் சுற்றிச்சுற்றிப் பரக்கப்பரக்கப் பார்ப்பாள்; கீழே படுப்பாள், உருள்வாள்; புறள்வாள்; எழுவாள் பின்னும் படுப்பாள்.

இவ்வாறு முகூர்த்த தினம் இன்னும் பத்து நாள், எட்டு நாள், ஐந்து நாள், மூன்று நாள் நாளை, இன்று என ஒரு நாள் வந்துவிட்டது. முகூர்த்தத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னமே ஸ்திரீகள் மேளவாத்தியத்துடன் பெண்ணை யழைக்க வந்துவிட்டார்கள். அந்தோ! இதுமுதல் முகூர்த்தம் நடந்து முடியும்வரை நமது கதாநாயகி ராதா பட்டமன அவஸ்தைகளை இக்கதையில் எழுதமுடியாது. எழுதுவதற்குச் சொற்களும் கிடைக்கவில்லை. வாசிப்பவர்கள் தத்தம் மனத்தில் யோசித்துக் கொள்ளவேண்டியதைத் தவிர, ராதாவின் கன்றுவியை விரித்தெழுதக் கையெழுதவில்லை. இதை வாசிக்கும் நண்பர்களே, சகோதரிகளே, கதையின் இந்தப் பாகமாகிய துக்கஸாகரத்தில் நாமும் விழ்ந்து நனையாமல், ஒரே பாய்ச்சலாய்த் தாண்டி, அக்கரைக்குப் போய்விடுவோம். அதாவது சுருக்கமாய், நமது கதாநாயகியாகிய ராதாவென்ற கன்னிகாரத்தினத்திற்கும் நிர்மூடசிகாமணியாகிய தண்டபாணியென்ற தடியனுக்கும் விவாகம் நடந்தேறியதென்று மட்டும்தான் சொல்லுவோம். நடந்தது விவாகமா? யாருக்கு விவாகம்? இருவருக்குமா? இல்லை இல்லை. தண்டபாணிக்கு விவாகமும் ராதாவுக்கு இழவும் நடந்தேறியது. பாதி விவாகமும் பாதியிழவும் விரைவில்நடைபெற்றது! இது தான் போலி விவாகம்! அந்தோ! அந்தோ!

(தொடரும்.)




அமிர்தா

சிறந்த வகையில்

இரத்தசுத்தி

அளித்து

நரம்புக்கு

வலுவூட்டுகிறது

இரத்தமின்மை
அஜீரணம்
சருமக் கோளாறு
இந்திரிய ஸ்கலிதம்
நரம்பு பலவீனம்
கிரந்தி நோய்கள்
முதலியவற்றை
நிவர்த்திக்கும்

கேஸரி குடீரம்
மதராஸ்.



உலகப் பிரசித்தி பெற்ற

ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்

நெ. 1. மணிமார்க் பட்டணம்

மூக்குத்தூளை

உபயோகியுங்கள்.

TRADE MARK

1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—

விலாசம் : ஆர். முகம அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்.



மாடர்ன் டயமண்ட்ஸ்

இவற்றின் அபார அழகும், அருமையான ஜ்வலிப்பும் மனதைப் பறிக்கின்றன.



"மாடர்ன் டயமண்ட்ஸை"க் கொண்டு இழைக்கப்பட்ட நகைகளையணிவது சிறந்த நகைகளையணிய வேண்டுமென்பதற்கான ஆசையின் அறிகுறியாகும்.



போடிநாயக்கனூரைச் சேர்ந்த ராவ்சாஹெப் ஏ. எஸ். அழகண்ணன் செட்டியார், எம். எல். சி., அவர்களது அபிப்பிராயம்:

............இந்த மாடர்ன் டயமண்ட்ஸை யாரும் நிஜ வைரம் என்றே சொல்லுவர். இவை அவ்வளவு நேர்த்தியாக விருக்கின்றன. அசல் வைரத்துக்குள்ள அதே பூரிப்புடனும், ஜ்வலிப்புடனும் விளங்குகின்றன. விலை மிகவும் குறைவானதால் ஏழைகளும் வாங்கி, வைர நகைகள் அணிவதன் இன்பத்தை அநுபவிக்கலாம்..............

வி. வி. ஆச்சார்யுலு & ஸன்;

நூறு வருஷ புகழ் பெற்ற நகை வியாபாரிகள்,

S-63, போன்னப்பசெட்டிதெரு, த.பெ.543 பார்க்டவுன், மதராஸ்



# இந்திய மக்களுக்கு இந்திய தேயிலை பானம்





எங்கள் சித்திர விளம்பர புத்தகம்.



தேயிலை பானம் அருந்துவோரின் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. ஜாதிமத பேதமன்னியில் ஒவ்வொருவரும் மென்மேலும் தேயிலையைப் பற்றிப் புகழ்கின்றார்கள். உண்மையாகவே ஆதரிக்கக் கூடிய அறிகுறிகளிருக்கின்றன. இதற்கீடான பானம் வேறெதுவுமில்லையென்று இந்திய மக்களில் புதிதாகத் தேயிலை பானம் செய்ய ஆரம்பித்தவர்களும் உணருகிறார்கள்.



தேயிலை பானத்திலிருந்து பூரண சுகத்தை அனுபவிக்க வேண்டுமானால் அதை பக்குவமாக சரியான முறையில் செய்யவேண்டும் எப்படி என்றறிய விரும்பினால் சரியான முறையில் தேயிலை பானம் செய்ய நீங்கள் சுளுவாய் கற்றுக்கொள்ளக்கூடிய தேயிலை பானம் செய்வதெப்படி என்னும் சித்திர விளம்பர புஸ்தகத்திற்கு உடனே எழுதுங்கள்.

இந்த விளம்பரத்தை கத்தரித்து உங்கள் பெயர், விலாஸம், தொழில் முதலியவைகளை குறிப்பிட்டு, இந்திய கமிஷனர், இந்தியன் 'டீ' ஸெஸ் கமிட்டி தபால் பெட்டி 2172, கல்கத்தா என்று எழுதி அனுப்பினால் இலவசமாக ஒரு காப்பி அனுப்பப்படும்.

உலகிலேயே சிறந்தது இந்தியாவில் உண்டாகிற தேயிலையைவிட வேறொன்றுமில்லை. உற்சாகமான மனதையும் ஆரோக்கியமான சரீரத்தையும்பெற இந்தியத்தேச பானமான இந்தியத் தேயிலை பான வழக்கத்தை விடாது பழக்கிக் கொள்ளுங்கள்.



## உண்மையான ஸ்வதேசி சரக்கு - இந்திய தேயிலை

IK 35 I

Regd. No. 2514



ஒரு ஆரோக்யமுள்ள மனிதன்

வெட்டை வியாதியில் அவஸ்த்தைப்படும் போழுது

கொபெய்சான் சாப்பிட்டு

வியாதியை சொஸ்த்தப்படுத்திக் கொண்டான்

## வெட்டை நோய்

கொடுமைக்கு ஆளாகியுள்ள மற்றவர்களும் இதேமாதிரி குணம் கண்டு, சுகம் பெறலாம். சற்றும் தாமதியாமல் அவர்கள் உபயோகிக்க வேண்டியது :

# கொபெய்சான்

2 அளவுகளில் எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

15 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூ. 1.

50 மாத்திரைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 3.

பாக்கிங் & தபால் செலவு தனி. பூரா விவரங்களுக்கு எழுதுக.

## சோல் எஜண்டுகள்

சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி

12, மன்னுரு தெரு, பார்க்டவுன் மதராஸ்

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press, Mount Road Madras—Editor C. R. Srinivasan, B.A.